
# தேவகாந்தன்



# இன் த ரைம் ஒஃப் கொரோனாவும்

## சில கதைகளும்

JPL
C13398

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனா’வும் சில கதைகளும்

தேவகாந்தன்

KOHA JPL

03 MAR 2021

Public Library Jaffna

13398 CC

281558

281558 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.811301

‘லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனா’வும்
சில கதைகளும்

தேவகாந்தன்


| | |
|---|---|
| முதற்பதிப்பு | : 2020 மார்கழி |
| வகை | : சிறுகதை |
| வெளியீடு | : ஜீவநதி, கலைஅகம், அல்வாய் |
| உரிமை | : தேவகாந்தன் |
| வடிவமைப்பு | : க.பரணீதரன் |
| நூலாக்கம் | : பரணீ அச்சகம், நெல்லியடி |
| பக்கங்கள் | : 124 |
| விலை | : 400/- |
| ச.தே.பு.நி.இல | : 978-955-0958-61-0 |


Love in the Time of Corona and some Stories

Devakanthan


| | |
|---|---|
| First Edition | : 2020 December |
| Category | : Stories |
| Copy Rights | : Devakanthan |
| Publication | : Jeevanathy. Kalaiaham, Alvai. |
| Design | : K.Bharaneetharan |
| Printers | : Baranee Printers, Nelliady |
| Pages | : 124 |
| Price | : 400/- |
| ISBN | : 978-955-0958-61-0 |

ஜீவநதி வெளியீடு - 172




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நண்பர்...

நல்ல வாசகர்...

குமாரசாமி குமாரதேவனின் நினைவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி....

மலைகள்.கொம்

நடு இணைய இதழ்

திண்ணை.கொம்

பதிவுகள்.கொம்

நம்நற்றிணை

தீராநதி

ஞானம்

ஜீவநதி

தாய்வீடு ஆதிய

ஊடகங்களுக்கும்

மற்றும்

ஜீவநதி வெளியீட்டினர்க்கும்,

பரணீ அச்சகத்தினர்க்கும்

வடிவமைப்புச் செய்த நண்பர் க.பரணீதரனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

இறங்கி வந்த கடவுள்/ 01
ஊர்/ 06
மனம்/ 12
எம்மா/ 17
உட்கனல்/ 30
முற்றுத் தரிப்பு/ 39
பாம்புக் கமம்/46
புற்றுச் சாமி/56
மலர் அன்ரி /69
சொல்லில் மறைந்தவள்/ 81
லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனா/91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 172 ஆவது வெளியீடாக ஈழத்தின் பிரபல எழுத்தாளர் தேவகாந்தன் அவர்களின் 'லவ் இன் த ரைம் ஒஃப் கொரோனாவும் சில கதைகளும்' சிறுகதைத் தொகுப்பு வெளி வருகின்றது. ஈழத்து இலக்கிய உலகிற்கு கிடைத்த பெரும் பொக்கிஷம் தேவகாந்தன். சிந்தனையில் தெளிவும், பரபரப்பற்ற செயற்திறனும், ஆர்ப்பாட்டமில்லாத அமைதியும், பரந்துபட்ட இலக்கிய - உளவியல் அறிவும் தேவகாந்தனின் படைப்புகளின் வெற்றிக்கு காரணமெனலாம். நாவல், சிறுகதை, கட்டுரை, பத்தி எழுத்து, விமர்சனம் என பல்வகைமை சார் இலக்கியத்துறைகளிலும் தேவ காந்தன் தன் கால்களை ஆழப்பதித்துள்ளார். படைப்பு களில் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லையும் கலைத்துவமாகப் பயன்படுத்துவதில் தேவகாந்தனின் இடம் தனித்துவமானது. இத்தொகுப்பில் காணப்படும் கதைகள் யாவும் அண்மைக் காலத்தில் எழுதப் பட்டவை; சமகாலத்தை பிரதிபலிக்கும் பல கதைகள் இந்த தொகுதியை அலங்கரித்துள்ளன. தேவகாந்தனின் எழுத்துக்கள் ஈழத்து இலக்கிய உலகை உலகறியச் செய்யும் எழுத்துக்கள் என்றால் அது மிகையான கூற்றன்று. தேவகாந்தனின் ஏனைய நூல்கள் வாசகர்களிடையே பெற்ற மதிப்பை இத்தொகுப்பும் தக்க வைத்துக் கொள்ளும் என்பதில் ஐயம் இல்லை.

- க.பரணீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறங்கி வந்த கடவுள்

அவரது கையில் அந்த ஜன சமூகத்தின் மூலக்கனலடங்கிய பாத்திரம் இருந்தது. அவர்களது இறைச்சியைச் சுடுவதற்கான, குளிர் காய்வதற்கான தீயை அவர்கள் அதிலிருந்தே பெற்றுக்கொண்டார்கள். கனலை உடைய அவர் தன்னைக் கடவுளென்றார்.

கையில் கனலும், தலையில் சடாமுடியுமாய் இருந்த அவரது ரூபம் பலபேரை ஆகர்ஷம் கொண்டது. பக்தர்கள் பெருகிவந்தவேளையில் ஜனசமூகம் தனக்கான தீயை கடைகோல்களில் கடைந்தெடுக்க கற்றுக் கொண்டிருந்தது. ஆனாலும் காலகாலமாய் தன் கையில் மூலக்கனலேந்தி வாழ்வாதாரம் தந்தவரை நன்றியோடும், அவரது வல்லமையில் பெரும் நம்பிக்கையோடும் பாடிப் பரவசப்பட்டு நின்றது அது.

ஒருநாள் உலகத்தின் மிகவுயரமான மலைச் சிகரத்தில் ஏறிய அந்தக் கடவுள் சூழவும் நோக்கினார். வேறு கடவுளெவரையும் அவரால் கண்டிருக்க முடியவில்லை. உடனே தானே முழுமுதற் கடவுளென பிரசித்தம் செய்தார்.

அவருக்கு நிறைய பக்த கோடிகள் இருந்தார்கள். வேண்டுபவர் வேண்டியதை ஈபவராக இருந்தாலும், பெரும்பாலும் அனைவரும் அவரையே வேண்டுபவர்களாக இருந்தார்கள். அது அந்தக் கடவுளுக்கு பேருவகையாக இருந்தது. அப்பேருவகையில் கனல் கொண்ட கையோடு அவர் நிருத்தம் செய்தார்.

அவரது தோற்றமே பரவசம் செய்ததில் அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனம் யாசித்த பக்தர்கள் மிகவதிகமாக இருந்தார்கள். தரிசன இன்பத்தில் திளைக்க, வரக்கூடிய சிரமங்களையெல்லாம் தாங்கத் தயாராகி, மலைகளுக்கும், வனங்களுக்கும் சென்று சித்தமொடுங்கி தவமியற்ற பலபேர் முயன்றார்கள். கடவுள் அவர்களுக்கு அவரவர் தவத்தின் உறுதிப்பாட்டுக்கேற்ப செயற்கரியன செய்யும் வரமளித் தார். அவர்கள் முனிவர்களெனப் பெயர் பெற்றார்கள்.

காலம் தன் கதியிலிருந்துகொண்டே உலகின் இயக்கத்தை மாற்றியது.

தபசிகள் அருகினார்கள்.

அக்காலத்தில் சிலர் வனங்களுக்கும், மலை முழைஞ்சில் களுக்கும் சென்று வாழ்வின் இயக்கத்தின் மூலம் தெரிந்து சித்தம் தெளிந்தனர். அவர்களைச் சித்தர்கள் என்றார்கள்.

காலப்போக்கில் சித்தர்களும் அருகினர்.

அப்போது காலம் மனிதர்களின் இயக்க வேகத்தை இன்னு மின்னுமாய் வெகுப்பித்திருந்தது. அவர்கள் ஓய்வொழிச்சலற்று வாழ்வின் வனத்துள் பிராக்காகிப் போயினார்கள்.

கடவுள் அப்போது பக்தர்கள் அருகிவிட்டிருந்ததைக் கண்டார்.

கடவுளுக்காக பக்தர்களே தவிர, பக்தர்களுக்காக கடவுள் இல்லையே! கடவுள் ஏதும் நினையாமலிருந்தார்.

உலகம் இன்னும் பேரியக்கம் பெற்றது.

இப்போது கடவுள் ஐயமுறலானார், வேறு கடவுளரும் உளரோவென. கடவுள் அதை அறிய ஆர்வம்கொண்டார்.

பக்தரை நாடிச்சென்று வரமளிப்பவர்களாய் அக் கடவுளர் இருப்பதை வந்த சில பக்தர்கள் தம்முள் கதைப்பதில் அறிந்தார் கடவுள். ஜனசமூகம் கடவுளிடம் யாசித்துப் பெற்ற காலம்போய், காணிக்கை கொடுத்து சௌக்கியங்ளும், சௌபாக்கியங்களும் பெறும் நவீன உலகம் தோன்றியிருப்பதையும் அவர்கள் சொல்லிச் சிரிப்பது கேட்டார்.

கடவுள் மலையிலிருந்து இவை காண ஒருநாள் இறங்கி வந்தார்.

சிலர் காணிக்கைகளின்மூலம் நோய்களிலிருந்து தவிர்ந்து கொண்டிருப்பதைக் கடவுள் கண்டார். அவர்களெல்லாம் பல வர்ணங்களில் கையிலும், கழுத்திலும் அவர்போல் பாம்புகளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியிருந்தார்கள். பாம்புகளின் நிறங்கள் அவர்களின் கடவுளர் யாரென்று அடையாளப்படுத்துவனவாய் இருந்தன.

கடவுளுக்கு அது புதுமையாகவிருந்தது.

எந்தப் பக்தனும் அந்தளவு வலிமையுள்ள வரத்தினை யாரும் தன்னிடமிருந்து பெற்றிருக்காத நிலையில், எவ்வாறு செல்வ வளம் பெருகவும், பிணியற்று வாழவும், எதிரிகளை அழிக்கவுமான ஆசீர் வாதத்தைக் கொடுக்க அவர்களால் முடிகிறதென்று முழுமுதல் கடவுள் உண்மையாகவே ஆச்சரியப்பட்டார்.

அப்போதுதான் தெரிந்தது, அவர்கள் தன்னைவிட மிகுந்த காட்சிப் பரவசத்தை தம் பக்தர்களுக்கு அளிக்கக்கூடியவர்களாய் இருந்தார்களென்று. தன் கோலம் அப்போது அவருக்கே பிடித்திருக்க வில்லை.

நிறைந்த பக்தர்கள் சூழ்ந்து நிற்க, அதியற்புதங்கள் நிகழ்த்தும் ஒருவர் சமுகம் சென்று மறைந்துநின்று முழுமுதல் கடவுள் பார்த்தார். அவர்கள் வரங்களை தம்முள் ஊற்றுக்கொண்டு கடவுளர்களாயே இருப்பதில் முழுமுதல் கடவுளுக்கு சந்தேகம் வரவில்லை.

அப்போது அவருக்கு ஒரு விஷயம் புரியவந்தது, தான் தன்னை முழுமுதல் கடவுளென அறிவித்ததுபோல், அவர்கள் தம்மை கடவுளராகவும் அறிவிக்கவில்லையென்பதை.

கடவுளுக்குக் குழப்பமாகவிருந்தது.

இனி கேட்காமல் ஒன்றுமாகாதென எண்ணி வேறுருத் தாங்கி அங்கே பணிசெய்யும் ஊழியர் ஒருவரை அணுகி, அவ்வாறு அருள் பாலிக்கும் அந்தக் கடவுள் யாரெனக் கேட்டார்.

ஊழியர் அக்கம்பக்கம் பார்த்தார். பின் காதோடு நெருங்கிச் சொன்னார்: 'யாருக்கும் சொல்லிவிடாதீர். அவர் கடவுளல்ல, சாத்தான்.'

கடவுள் சாத்தானை அதுவரை அறியாதிருந்தார். ஊழியர் சாத்தானென்று சொன்னதை அவரால் விளங்கிக்கொள்ளவும் முடியவில்லை.

'பேயா?' என்று கேட்டார்.

'பேயையும் சொல்லலாம்.'

'பூதத்தை?'

'அதையும் சொல்வார்கள்.'

'ஆயினும் உண்மையான சாத்தான்தான் யார்?'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சாத்தான் கடவுளைப்போலவே' என்று பரவசப்பட்டார் ஊழியர்.

'என்ன சொல்கிறீர்?'

'அவரும் அநாதியானவர்... எங்குமுள்ளவர்... எல்லாம் அறிபவர்... எல்லாம் வல்லவர்.'

'கடவுளுக்கு நிகரானவரோ?'

'சந்தேகமில்லாமல்.'

'கடவுளும் சாத்தானும் சமமானவர் என்கிறீரா?'

'இல்லை. கடவுள் நல்லவர்க்கு அருள்பாலிக்கிறார். சாத்தான் அல்லாதவர்களுக்கு அருள்பாலிக்கிறார்.'

'ஏன் அவ்வாறு?'

'ஏனெனில், கடவுளின் இன்னொரு புறமே சாத்தான். ஆனாலும் அவர் கடவுளோடு மாறுபட்டிருக்கிறார். கடவுள் யாரை விரும்புகிறாரோ, கடவுளை யார் விரும்புகிறார்களோ அவர்களை யெல்லாம் சாத்தான் திரஸ்காரம் பண்ணுகிறார். கடவுளுக்கெதிரான யுத்தத்தையே சாத்தான் இப்பொழுது செய்துகொண்டிருக்கிறார். கடவுளின் கட்டளைக்குப் புறம்பாக நடப்பவர்கள் செல்வர் களாகவும், வல்லவர்களாகவும் ஆவது ஏனென்று நினைக்கிறீர்? அதனால்தான்.'

'இது எப்போது மாறும்?'

'காலம் மாறும்போது. அதோ புரியமுடியாத வேகத்தில் ஒலித்துக்கொண்டிருக்கிறதே காலக்குரல், அது ஜன சமூகத்தின் அவசரமறும்போது புரியும்படி இழையும். அப்போது எல்லாம் மாறும்.'

'இந்த லோகத்தின் அவசரமே எல்லாவற்றிற்கும் காரணமென்கிறீர்?'

'ஆம்.'

'மாயையல்ல?'

'மாயையிலிருந்து தோன்றியதே அவசரம்.'

'அதுசரி, இந்த விஷயம் முழுமுதல் கடவுளுக்குத் தெரியாதா?'

'தெரியாது. ஏனெனில் அவர் பெரும்பாலும் மலையை விட்டு இறங்கி வருவதேயில்லை.'

'எல்லாம் தெரிந்திருக்கிறீர். பூலோகத்தில் பல கடவுள்களர் ஏனென்று சொல்லும்?'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘வசதி அப்படித்தான். மேற்கே தேவன் இருக்கிறார்...’

‘இங்கே மகாதேவன்.’

‘இடையிலே அல்லாஹ் இருக்கிறார்.’

‘எல்லோரும் ஒன்றையே சொல்கிறார்கள்?’

‘ஆம். அன்பையே சொல்கிறார்கள். ஒரு கடவுள் பல்வேறு நாமாவளிகளிலிருந்து அந்த அன்பைச் சொல்லவில்லை. பல்வேறு கடவுள்களும் அன்பு என்ற அந்த ஒற்றை நாமாவளியையே உச்சரிக் கிறார்கள்.’

‘ம்...’ என்று முனகிய கடவுள், தான் அவர்கள்போல் அந்த அன்பை என்றாவது அழுத்தினேனா என்று ஒருமுறை யோசித்தார். பின், ‘நீர் யார்?’ என்றார்.

‘போம்... போம்...!’

‘சும்மா சொல்லும்.’

‘சஞ்சாரி. லோக சஞ்சாரி. நாளை நான் இங்கே இருக்க மாட்டேன்’ என்றுவிட்டு ஊழியர் அப்புறமாய் நகர்ந்து மறைந்தார்.

கடவுளுக்கு அது வித்தியாசமான உரைப்பாக இருந்தது. ஆனாலும் அதை சரியென்று புரிந்தார்.

தன்னைவிடவும் சரிகள் பல தெரிந்தவர்களின் தளத்தி லிருந்துகொண்டு முழுமுதல் கடவுள் நிமிர்ந்து மலையைப் பார்த்தார்.

அவர் மறுபடி மலைமேல் ஏறவில்லை.

மலைகள்.கொம்,

ஜுன் 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்

நீண்ட காலத்துக்குப் பிறகு சொந்த ஊர் வந்திருந்தான் தனபாலன். யுத்தம் முடிந்து பலர் ஊர் போய் வருகிறார்களென்பது தெரிந்த பிறகு அவ னெடுத்த முடிவு.

ஒரு மாதத்துக்கு அங்கே தங்குகிற மாதிரித்தான் வந்துமிருந்தான். இரத்த அழுத்த நோய்க்கும், லேசான நீரிழிவு நோய்க்குமாக ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்துக் குளிசைகள் கொண்டுவந்திருந்தான். மனைவி வற்புறுத்திக் கொடுத்தனுப்பிய நுளம்புகளை விரட்டு வதற்கு உடம்பிலே பூசுகிற களிம்பும் அவனிடம் இருந்தது.

இவையெல்லாம் புறப்படுகிற முதல் வாரத்தில் செய்யப்பட்ட ஆயத்தங்கள். மூன்று மாதங்களுக்கு முன்னரே ஊரிலுள்ள வீட்டுவேலைகள் சிற்றப்பாமூலம் முடிக்கப்பட்டிருந்தன. யுத்த காலத்தில் சுவர்களில் விழுந்திருந்த குண்டுக் காயங்கள் பூசப்பட்டன. உடைந்த ஓடுகள் மாற்றப்பட்டன. கழன்றிருந்த ஜன்னல் கதவுகள் புதிதாகப் பொருத்தப்பட்டன. தூசி தட்டி, கழுவி குடியிருப்பதற்குத் தயாராக வீடு சகலமும் செய்யப்பட்டிருந்தது.

தனபாலன் வருவதாகச் சொல்லும் ஒவ்வொரு திகதியிலும் சிற்றப்பா குடும்பம் ஆவலாதியாய் அலைந்து கொண்டிருந்தது. அவ்வாறு பல தினங்கள் அவர்களை அல்லாடவைத்த பிறகு ஒருநாள் திடீரென தனபாலனின் தொலைபேசிச் செய்தி வந்தது, தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் இலங்கை புறப்படுவதாக.

வெளிநாட்டிலிருந்து வருவதென்பது ஒன்றும் கொழும்பிலிருந்தோ, இந்தியாவிலிருந்துதானுமோ, வருவதுபோலில்லை. அது வேறுமாதிரியான ஒன்று. பொருளாதார நிலைமையும் கலாச்சாரமும் மாறுபட்ட ஒரு தேசத்திலிருந்து வருவதென்பது, பல சிக்கல்களைத் தவிர்க்க முடியாதபடி பயணத்துடன் சம்பந்தப்படுத்துகிறது.

ஒரு மாலை நேரத்தில் தனபாலன் காரில் வந்து வீட்டின் முன்னால் இறங்கினான்.

சொந்தக்காரர் வந்தனர். இவனும் சொந்தக்காரர் வீடுகளுக்குப் போனான். தடல்புடலாக மூன்று நான்கு நாட்கள் கழிந்தன.

பின்னால் யாழ்ப்பாணம், நல்லூர் என்றும், கிளிநொச்சி, மாத்தளன், முல்லைத்தீவென்றும் ஒருமுறை போய்வந்தான்.

தனபாலனின் வீட்டுக்கு குளியலறை கட்டப்பட்டிருக்கவில்லை. கிணற்றடித் தொட்டியில் மோட்டரால் நீரை நிரப்பிவிட்டு பெரிய கோப்பையால் அள்ளி ஊற்றிக்கொள்ள வேண்டும். அவ்வாறு தான் அங்கே முன்பும் இருந்தது. அது அவனுக்குப் பழக்கமானது தான். ஆனால் அப்போது அதில் ஒரு கிளர்ச்சியிருந்ததை தனபாலன் கண்டுகொண்டான்.

தனபாலனுக்கு குளிர்தேசம் சிவப்பாக்கிய மேனி. நல்ல ஊண் ஊட்டிய வளவளப்பு அதில். குறுந்தாடி வைத்திருந்தான். உள்ளுடுப் போடு நின்று கிணற்றடியில் குளித்துவிட்டு, துவட்டிய நீண்ட துவாயைக் கட்டிக்கொண்டு முன்னாலிருந்த புல் தரையில் அவன் அங்குமிங்கும் ஏதாவது வேலையாக அலைவது அழகாக இருக்கும். சுற்றிவர மூன்றுபுற வேலிகளது மறைப்பில் தனியே இருக்கும் தனபாலனுக்கு ஒன்றுக்குப் போவதில் சுயாதீனம் கொஞ்சம் கூடுதலாகவே இருந்தது. நீண்ட காலம் அனுபவித்திராத சுயாதீனம். வேலி மறைப்பினூடாக அதை யாரும் கண்டுகொள்ளப் போவதில்லை.

பத்து நாட்களாகிவிட்டன தனபாலன் ஊருக்கு வந்து.

எவ்வளவு தாபத்தோடு ஊரைப் பார்க்கவேண்டுமென்று ஓடிவந்தான்! ஊரைப் பார்த்துவிட்டான்தான். ஆனால்...

சந்தியிலே ஒரு பெரிய ஆலமரம் நின்றது. பஸ் நிற்கிற இடமாக அதுதான் முன்பு இருந்தது. ஆலடிச் சந்தியென்றுதான் சனம் ரிக்கற்றும் எடுக்கும். அது குறுகிக் குறுகி சின்னதாகிவிட்டதோடு, அதன் அடர்த்தியும் குறைந்து புதிதாக முளைவிட்ட நான்கைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெவர்களோடு நின்றுகொண்டிருந்தது. ஷெல் அடித்தோ, குண்டு விழுந்தோ அதன் பிரமாண்டத்துக்கு ஏதோ நடந்திருக்கிறது. முகரியில் நின்றிருந்த ஏழெட்டு பனைகளையும், வடலிகளையும், பறுகுப் பற்றையையும்கூட காணவில்லை. பிள்ளையார் கோவில் ஓரமாய் நின்றிருந்த பெரிய மருது வேரோடு காணாமல் போயிருந்தது. அதனருகேயிருந்த தாமரைக் குளத்தின் சுவடும் இல்லை. பிள்ளையார் கோவில்மட்டும் புதிய நிர்மாணத்தில் பல வர்ணங்கள் பூசப்பட்டு கட்டைச் சப்பறம்போல நின்று கொண்டிருந்தது. மண் ஒழுங்கைகள் மக்கி றோடுகளாயும், மக்கி றோடுகள் கல் றோடுகளாயும், குண்டும் குழியுமாயிருந்த கல் ரோடுகள் பொத்தல் விழுந்த தார் றோடுகளாயும் மாறியிருந்தன.

ஊரின் எச்சமாக அங்கே அவன் கண்டது, பிள்ளையார் கோவிலுக்கு பின்புறத்தே பரந்திருந்த சிலுவில் வயலைத்தான்.

அதுபற்றி ஓரிரவு தன் நண்பர்களோடு கதைத்துக் கொண்டிருந்த புறாசல் சமயத்தில், காலத்தின் அந்த மாற்றங்களை எதனாலும் தடுத்துவிட முடியாதென்றும், அது வளர்ச்சியின் அடையாளமென்றும் நடேசபிள்ளை சொல்லியிருந்தான்.

இன்னொரு நண்பனும் அதை முன்னேற்றமேயென்று ஆணித்தரமாகச் சொன்னான்.

அதை அவ்வாறாக எடுத்துக்கொள்வது தனபாலனுக்குச் சிரமமாக இருந்தது.

ஊரைப் பார்க்க வந்ததில் வீட்டைப் பார்த்தது மட்டுமே நடந்திருந்தது தனபாலனுக்கு. மீதித் தவனம் மனத்தில் இன்னும் உறைந்து கிடந்தது.

அன்று காலை தனபாலன் எழுந்து குளிக்கப் போக நேரஞ் சென்றிருந்தது. கிழக்கு வாசலான அந்த வீட்டு விறாந்தையிலிருந்து வெய்யில் தாழ்வாரத்துக்கு இறங்கியிருந்தது.

குளித்துவிட்டு வரும்போதுதான் தனபாலன் எதிர்வீட்டைக் கவனித்தான். புதிதாகக் கட்டியிருந்த வீடுபோல் இருந்தது. அவன் வெளிநாடு போவதன் முன் பனைகளும் வடலிகளும் நிறைந்து காய்ந்த நிலமாய் அது கிடந்திருந்தது. யாரும் காணாத நேரத்தில் சிலருக்கு அதுதான் கக்கூஸ்.

மேற்கொண்டு அதுபற்றி நினைக்க முடியாதளவுக்கு அவனது பார்வை ஒரு அழகில் விழுந்து நிலைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு வாசலில் நின்று ஒரு பெண் தலைவாரிக் கொண்டிருந் தாள். இடைஞ்சலற்ற ஒரு விசாலமான இடத்தில் நின்றுதான் அதைச் செய்யவேண்டிய அளவுக்கு அவளது கூந்தல் நீளமாய் இருந்தது.

காலையின் அவசரங்கள் முடிய குளித்து சேலை கட்டி வந்திருந்தாள். அவள் அழகானவளாயும் இருந்து அவனை அதில் சில கணங்கள் மெய்ம்மறந்து நிற்க வைத்திருந்தாள்.

காலையில் வெளியே போகவேண்டி இருந்ததில் அந்த முதல் தரிசன நிகழ்வு அத்தோடு முடிந்தது.

அவளுக்கு கணவனாக இருக்கக்கூடிய எந்த ஒரு ஆணையும் அதுவரை அந்த வீட்டில் அவன் கண்டிருக்கவில்லை. அது அவளை ஒரு பெண்ணாக மட்டுமே பார்க்க அவனைச் செய்து கொண்டிருந்தது.

குளிக்கும்போது அவள் முற்றத்தில் நின்று தலை வாரு கிறாளா, திறந்திருக்கும் வாசல் கதவினூடு தென்படுகிறாளா என்று மான தேடல்களில் நாளடைவில் அவன் விழுந்துபோனான்.

அன்று ஒரு சனிக்கிழமை.

நண்பர்களோடு அங்கே சமைத்துச் சாப்பிடவும், தண்ணி யடிக்கவும் அன்று ஒரு திட்டமிருந்தது தனபாலனுக்கு. அவர்களும் ஆறு ஆறரை மணியளவில் ஒவ்வொருவராக வந்து சேர்ந்து விட்டிருந்தனர்.

ஒன்பது மணியாகியும் பேச்சு ஓயவில்லை. சமையல் முடிந் திருந்தபோதும் சாப்பிடுகிற எண்ணம் யாருக்கும் தோன்றவில்லை.

யுத்த காலத்து அவலங்கள், ராணுவச் செயற்பாடுகள், பழைய இயக்ககாரரின் நிலைமை, மாற்றியக்கங்களின் நிலைப்பாடு என பல விஷயங்களும் அவர்களது பேச்சில் உருள்பட்டன.

திடீரென எதிர் வீட்டில் குழந்தைகளின் கூச்சல் கேட்டது.

படார்... படாரென அறைக் கதவுகள் அடிபட்ட அல்லது யாரோ அதன்மீது விழுந்த சத்தங்கள். கணார்... கணாரென பீங்கான் பாத்திரங்களும் விழுந்து நொருங்கின.

அங்கே ஒரு குடும்பச் சண்டை நடந்துகொண்டிருந்தது. கண்ணால் காணாமலே அதைச் சுலபத்தில் அனுமானிக்க முடிந் திருந்தது. குழந்தைகளின் கதறல் அவர்களே அடிவாங்குவதன் அர்த்த மில்லை.

அப்போது நடேசபிள்ளை தெளிந்துகொண்டு சொன்னான். 'தனபாலு, நீ உதுகளைக் கண்டுகொள்ளாத. அப்பப்ப நடக்கிற சங்கதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்.'

'இவ்வளவு நாளில உப்பிடி நான் காணேல்லயே.'

தனபாலனின் அபிப்பிராயத்துக்கு நடராசா மறுமொழி சொன்னான். 'இண்டைக்கு அவளின்ர புருஷன் வந்திருக்கிறான் போல. என்ன பிரச்சினையோ?'

தனபாலன் ஒன்றும் சொல்லவில்லை.

எழுந்து கேற்வரையும் வந்தான்.

நண்பர்களும் சளாப்பல் கதைகளோடு கூடவந்தனர்.

உள்ளே என்ன நடக்கிறதென்று கண்டுகொள்ள முடியா விட்டாலும், அறைக் கதவு மறுபடி உதைபட்ட சத்தம் எழுந்தது. குழந்தைகளின் கதறல் தொடர்ந்து கேட்டது. கூடத்துக்குள்ளிருந்த தொலைக்காட்சிப் பெட்டி தான் நொருங்குகிறேன் எனச் சொல்வது போல் சத்தமொன்று கணாரிட்டு எழுந்தது.

தனபாலனால் பொறுக்கமுடியாது போனது. அக்கம் பக்கத்துச் சனம் உப்பிடியே இருக்குதுகள். என்ன நடக்குதெண்டு ஒருதர் வெளிய வந்து பாக்கேல்லயேயென தனபாலனின் மனத்தில் உறைப்பான அந்த யோசனை மீண்டும் மீண்டும் எழுந்து கொண்டிருந்தது. 'அயல் தலையிடாத ஒரு குடும்பச் சண்டை இந்த ஊரில் எப்போது நடந்திருக்கிறது? இப்போது மட்டும் ஏன் இப்படி?'

பிள்ளைகளின் அழுகைச் சத்தம் மெல்லக் குறைந்து வந்தது.

சந்தடிகள் அடங்கிவந்தன.

அவர்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

'அதுகள் இடப்பெயர்வோட வந்திருக்கிற புதுச் சனங்கள், தனபாலு. பச்சிலைப்பள்ளியோ எங்கயோயிருந்து வந்ததுகள். அப்பப்ப கண்டதைத் தவிர வேற பழக்கமுமில்லை. என்ன பிரச்சினையெண்டு ஆர் போய்க் கேக்கப் போகினம்?' நடேசபிள்ளை சமாதானம் சொன்னான்.

'பக்கத்து வீட்டில இருக்கிறவையும் இஞ்சத்த ஆக்களில்லை. அவையும் இடப்பெயர்வில வந்தாக்கள். அங்கால இருக்கிற வீட்டில ஆம்பிளயளில்லை. அதுக்கடுத்தது பாம்புக் காணி. ஆர் போய் சண்டையைப் புடிச்சு விடப்போகினம்?' வேறொரு நண்பன் சொன்னான்.

குடியும் சாப்பாடும் முடிய அவர்கள் சொல்லிக்கொண்டு கிளம்பினர். நடேசபிள்ளை மட்டும் போகும்போது மெதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனிடம் சொன்னான்: 'தனபாலு, பிள்ளையள் அடிச்சு விழுந்து கத்திச்சுதுகளே தவிர, அவளின்ர மூச்சு வெளியில வரேல்ல, கவனிச்சியோ?'

'ஏன்?'

'அது எனக்குத் தெரியாதப்பா. ஒருவேளை பிள்ளையள் கத்தினதால அவன்தான் அடியை நிப்பாட்டினானோ? இல்லாட்டி அடியை வாங்கிக்கொண்டு விறைச்ச மண்டைச்சியாய் இருந்திருப் பாளோ, ஆருக்குத் தெரியும்? உனக்கு இதால பிரச்சினையொண்டு மில்லையே?'

'எனக்கென்ன பிரச்சினை?'

'சரி, நீ போய்ப் படு.'

தனபாலன் திறந்திருந்த ஜன்னலோரம் அமர்ந்து வானத்தை யும், எதிர்வீட்டையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டு வெகுநேரமாய் அமர்ந்திருந்தான்.

ஐயோ என்று ஒரு அவலக் குரல் கேட்டால் ஆர் எவரென்று பார்க்காமல் அயல் கூடிவிடுவதாகத்தான் முந்திய ஊர்கள் இருந் திருந்தன. அவனுடைய அந்த ஊரும் அப்படித்தான் இருந்தது. ஒழுங்கை இல்லாதது, மக்கி றோட்டு இல்லாதது, ஆலமரமும் அரச மரமும் இல்லாதது, பாம்பு பூச்சிப் பயமில்லாமல் நடக்க வீதி வெளிச்சம் இருப்பது எல்லாம் வளர்ச்சியாக இருக்கட்டும். ஆனால் அது ஊரை விழுங்கிவிட்டு வந்த வளர்ச்சியென்றே அவனுக்குத் தோன்றியது.

ஊர் அவனளவில் விழுங்கப்பட்டாயிற்று. அப்போதிருப்பது தனிமனிதர்களின் வசிப்பிடங்கள்.

காலத்தில் ஒருநாள் அவனூர் மறுபடி தோன்றலாம்; தோன்றாமலும் போகலாம். யாருக்குத் தெரியும்?

நடு இணைய இதழ்,
ஏப்ரல் 2017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்

நிக்கலஸ் ஏன் அவ்வாறு செய்தான்?

விடை தேடிக்கொண்டு ஏற்கனவே கிடந்த வற்றோடு, அப்போது அந்தக் கேள்வியும் இராஜ லிங்கத்தின் மனத்துள் சேர்ந்துகொண்டது.

'அதெல்லாம் கள்ளக் கூட்டம். கறுவல்களோ டெல்லாம் சேர்ந்து நீ இனிமேல் விளையாடப் போக வேண்டாம்' என மகன் அனுஷனுக்கு கண்டிப்புச் சொன்ன ஆனந்தி, கூடத்துள்ளிருந்து எல்லாம் கண்டு கொண்டிருந்த தந்தை இராஜலிங்கத்திடம் திரும்பி, 'பாத்தியளேப்பா, அதுகள் செய்த வேலையை? நாளைக்கு ஸ்கூலுக்குப் போய் இதைப்பற்றி கொம் பிளெய்ன் பண்ணியிட்டு வந்திடுங்கோ. எல்லாத்தை யும் இப்பிடியே சும்மா விட்டிடேலாது' என்றுவிட்டு மேலே போய்விட்டாள்.

மூன்று நாட்களுக்கு முதல் பள்ளி லொக்கரில் வைத்த அனுஷனின் ஜாக்கெற் அன்றைக்கு திரும்பக் கிடைத்த மகிழ்ச்சியை அவள் கொஞ்சம்கூட பட்டுக் கொள்ளவில்லையென அவருக்குத் தெரிந்தது. அதில் சிறிது நியாயமிருப்பதாக இராஜலிங்கம் எண்ணினார். அந்த ஆண்டில்மட்டும் அனுஷனின் இரண்டு ஜாக் கெற்றுகள் காணாமல் போயிருக்கின்றன. அந்த ஜாக்கெற் திரும்பக் கிடைத்திருந்தாலும் அது மூன்றாவது சம்பவம்.

அனுஷனுக்கு இட்ட கட்டளையின் பின்னா லிருந்த ஆனந்தியின் தீர்மானத்தையா அவரும் கொண்டு விடப்போகிறார்? 'கறுவல்களெல்லாம் கள்ளக்கூட்டம்!'

அவருக்கு யோசிக்கவேண்டி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281558

ஜூலையில் கிடைத்த விடுமுறைப் பணத்தில் ஆனந்தி அனூஷ னுக்கு விலை சிறிது கூடிய ஜாக்கெற் ஒன்று வாங்கிக் கொடுத்திருந்தாள்.

செப்ரெம்பரில் கோடை விடுமுறை முடிந்து பள்ளி தொடங்கியபோது, காலம் கோடையெனினும் காலத்துக்கு முன்ன தாகவே அந்த ஆண்டில் கோடையும் பனியும் இடைமாறும் கால மான இலையுதிர் காலத்தின் குளிர் ஆரம்பித்திருந்தது. வடதுருவத்தி லிருந்து அடித்து வந்த காற்றால் குளிர் மண்டிப்போனது. கத கதத்துக்கொண்டிருந்த கட்டிடங்கள், தருக்கள், வீதிகள், நீர்நிலை களெல்லாம் குளிரேறத் தொடங்கிவிட்டிருந்தன. பல வீடுகளில் கணப்பிகளை போடத் துவங்கிவிட்டிருந்தார்கள்.

அனூஷன் அந்த புதிய ஜாக்கெற்றை போட்டுக்கொண்டு பள்ளிக்குப் போயிருந்தான்.

வீட்டிலிருந்து பள்ளிக்கு பத்து நிமிஷநடைதான். மூன்றரை மணிக்கு விடுகிற பள்ளியிலிருந்து, ஆனந்தி வேலை முடிந்து நான்கு மணியளவில் வீடு திரும்பியிருந்தும், அனூஷன் வரவில்லை. அப்போதும் ஆனந்தி வழக்கம்போல் தந்தையிடம்தான் கேட்டாள், 'அப்பா, ஒருக்கா அனூஷனைப் போய்ப் பாத்துக்கொண்டு வந்திடுங்கோவன்' என்று.

இராஜலிங்கம் வெளிக்கிட்டுக்கொண்டிருக்க அனூஷன் வீடு வந்துசேர்ந்தான். ஆனந்தி தாமதத்துக்கு காரணம் கேட்டபோது, அனூஷன் கண்கலங்க நின்று லொக்கரில் வைத்த ஜாக்கெற் காணாமல்போன விஷயத்தைக் கூறினான்.

'காலங்காத்தால அஞ்சு மணிக்கு எழும்பி ஓடி நான் பக்டரியில முறிஞ்சு உழைச்ச காசு...' என்று ஆனந்தி வயிறெரிந்த தோடு அன்றைக்கு விஷயம் முடிந்திருந்தது.

சனி, ஞாயிறு கழிய திங்கட்கிழமை காலையில் அனூஷனும் தன் பழைய ஜாக்கெற்றை போட்டுக்கொண்டு பள்ளிக்குப் போனான்.

அன்றைக்குத்தான் புதிய ஜாக்கெற் திரும்பக் கிடைத் திருந்தது. அவர் திருப்தியும், அனூஷன் மகிழ்ச்சியும்பட்ட வேளை, ஆனந்திக்கு கோபம் வந்திருக்கிறது. பள்ளியில் முறைப்பாடு செய்ய வும் அவரிடம் சொல்லிவிட்டாள். அதுவா அவரதும் நிலைப்பாடு?

உண்மையில் ஜாக்கெற் தொலைந்த அன்றைக்கேதான் தன் வயிற்றெரிச்சலோடு ஆனந்தி சொல்லியிருக்கவேண்டும், பள்ளியிலே சென்று அவரை முறைப்பாடு செய்யும்படியாக.

அன்றைக்குத்தான் ஆனந்தியால் அவ்வாறு வயிறெரிய முடியு மென்று இராஜலிங்கத்துக்குத் தோன்றியது. ஏனெனில் கோபத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிவதற்கும் ஒருவர் அல்லது ஒன்று தேவைதானே? ஒருவேளை அது நிக்கலஸென்று தெரிந்ததால்தான் அந்தக் கோபமே அவளிடம் வந்ததோவென்றும் அவருக்கு யோசனை வந்தது. பொதுவாக கறுப்பின மக்களைப்பற்றி கனடிய ஆசியர்களிடம், வெள்ளையர் களிடமும்கூட, குழப்பகாரரர் கள்ளர்கள் என்பதான மனநிலை இருந்து வருவதை அவர் அறிவார்.

இராஜலிங்கத்துக்கு அவ்வாறான எண்ணம் இல்லை. அவருக்கு அவனைத் தெரியும். ஆனால் நிக்கலஸ் ஏன் அவ்வாறு செய்தானென்று அவருக்குத் தெரிந்தாகவேண்டும். ஏனெனில் அக் கதையைப் பொருத்தும்படியாக பல கதைகள் இருந்திருந்தன.

அனூஷன் சாப்பிட்டு வர, இராஜலிங்கம் அவனை அழைத்து ஜாக்கெற் கிடைத்த விபரத்தை விசாரித்தார்.

கைகளை ஆட்டியும், கேலியாய் சிரித்தும் ஒரு அபிநயத் தோடு அன்று மாலையில் நடந்ததைச் சொன்னான் அனூஷன்.

பள்ளி முடிய லொக்கருக்கு வந்து தன்னுடைய பையையும் பழைய ஜாக்கெற்றையும் எடுத்துக்கொண்டு அனூஷன் வெளியே வர, முன்னால் போய்க்கொண்டிருக்கிறான் நிக்கலஸ், அனூஷன் தொலைத்ததுபோன்ற ஒன்றை அணிந்துகொண்டு.

அனூஷனுக்கு நெஞ்சு திக்கென்றது. கொஞ்சம் கோபம்கூட வந்தது.

விரைந்து அவனிடம் போய், 'நிக்கோ, இந்த ஜாக்கெற்றை நீ எப்போது வாங்கினாய்?' எனக் கேட்டான்.

நிக்கோ கலகலவெனச் சிரித்துவிட்டு, 'இது நான் வாங்கிய தில்லை. இங்கேதான் எறிந்துகிடந்து எடுத்தேன்' என்றான்.

'போன வெள்ளிக்கிழமை எனது புதிய ஜாக்கெற் லொக்கரில் வைத்திருந்த இடத்தில் காணாமல் போனது.'

'இதுமாதிரியானதா அது?'

'இதுமாதிரியானதேதான்.'

'இதுவேயா அது?'

கொஞ்சம்யோசித்துவிட்டு, 'இதுவேதான்' என்றான்அனூஷன்.

நிக்கலஸ் நின்றான். அனூஷனும் நிற்க, அவனது முகத்தை ஏறிட்டு நோக்கினான். அனூஷன் உண்மைதான் சொல்கிறானா என்பதை அறியப்போல் அவனது கண்களை கூர்ந்து கூர்ந்து கவனித்தான்.

தனது இலவசத்தை தட்டிப்பறிக்க அனூஷன் செய்கிற சூழ்ச்சியில்லை அது என்பதைக் கண்டிருப்பான்போல. சிறிது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் ஜாக்கெற்றைக் கழற்றி அனூஷனிடம் கொடுத்துவிட்டு விறுவிறுவென நடந்தான்.

பின்னால் அனூஷன், ‘நன்றி’ என்றான்.

திரும்பிப் பாராமலே அதெல்லாம் ஒன்றுமில்லை என்பது போல் கையைத் தூக்கிக் காட்டிவிட்டு சர்வசாதாரணமாய் போய்க் கொண்டிருந்தான் நிக்கலஸ்.

பள்ளியில் நிகழ்ந்ததை தாத்தாவிடம் சொல்லிவிட்டு அனூஷன் கணினி மேசையில் சென்று அமர்ந்துகொண்டான்.

அனூஷன் விளக்கிய சம்பவத்திலிருந்து நிக்கலஸ் ஒரு வாழ்வியல் உண்மையாய் அவருள் உருவம் கொண்டபடியிருந்தான்.

நிக்கலஸை அவருக்குத் தெரியும். அந்தப் பகுதியிலே குடி யிருக்கிற பையன்தான். நல்ல உயரமான கறுப்பு பையன். ஒட்ட வெட்டிய புலுட்டை முடி. எப்போதும் சிரித்தபடியிருக்கிற முகம். பற்கள், கதைக்கும்போதும் பளீரென்று ஒளியடிக்கும். அனூஷனோடு அவரைக் காணுகிறவேளைகளில் அனூஷன்போல் ‘ஹாய், தாத்தா’ என்பான். அனூஷனின் வயதுதானிருப்பான். அவனது தாயைக்கூட பள்ளி வருகிற தருணங்களின் அவர் கண்டிருக்கிறார்.

ஒரு நீண்ட ஐந்து வருஷகாலத்தில் கறுப்பின மக்களோடு ஆசிரியப் பணி நிமித்தம் அவர் நைஜீரியாவில் வாழ்ந்திருக்கிறார். அவர்களது வாழ்வும், மனப்போக்குகளும் அதனால் ஓரளவு அவருக்குத் தெரிந்திருந்தன.

மனப்போக்கு என எண்ணியபோது நைஜீரியாவில் ஏறக் குறைய இதற்கு நிகராக நடந்த சம்பவமொன்று அவருக்கு உடனடியாக ஞாபகம்வந்தது.

குரூமி என்கிற ஒரு கட்டையான அகன்ற தோற்றமுடைய ஒரு நடுத்தர வயது விதவைப் பெண், சனி ஞாயிறுகளில் வீட்டு வேலைகள் செய்வதற்காக அவரதிடத்துக்கு வந்துகொண்டிருந்தாள்.

ஒருநாள் அவரது இரண்டு நீலநிற சேர்ட்டுகளில் ஒன்று காணாமலாகியிருப்பது அவரது கவனத்தில் வந்தது. களவு போவதற் கான வாய்ப்புகள் குறைந்த இடம் அது. அவரது உடுப்புகள், படுக்கை விரிப்பு முதலியவற்றை தோய்த்துக்கொடுப்பவள் குரூமிதான். அவளிடம் நேரடியாகக் கேட்க அவருக்குத் தயக்கமாக இருந்தது. அதனால் எதையோ தேடுவதுபோல் பாவனை செய்தபடியிருந்தார்.

அதைக் கண்ட குரூமி கேட்டாள்: ‘என்ன தேடுகிறீர்கள்?’


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லை, எனது நீலச் சேர்ட்டுகளில் ஒன்றைக் காணவில்லை, அதைத்தான் தேடுகிறேன்' என்றார் அவர்.

'நீலச் சேர்ட்தானே? அதை நான் எடுத்துக்கொண்டு போய் விட்டேன்.'

'ஏன்?'

'எனது மகனுக்கு போடுவதற்கு சேர்ட் இல்லை. உங்களிடமோ இரண்டு நீலச்சேர்ட்கள்இருந்தன. அதனால்ஒன்றைக்கொண்டு போனேன்.'

'அப்போ, உனக்குத் தேவையானால் எதையும் நீ எடுத்துக் கொண்டு போய்விடுவாயா?'

'அதெப்படி முடியும்? உங்களிடம் அது இரண்டாக இருக்க வேண்டும். அப்போதும் எனக்கு அது மிக மிகத் தேவையானதாக இருக்கவேண்டும். அப்போதுதானே எடுத்துச்செல்ல முடியும்!'

குரூமி சிரித்துக்கொண்டு நின்றிருந்தாள், தான் நியாயமெதை யும் மீறி நடந்துவிடுபவளில்லை என்பதுபோல்.

இராஜலிங்கம் யோசித்தார், நிக்கலஸ்கூட அப்போது குரூமிபோல்தான் சிரித்துக்கொண்டு நின்றிருப்பானா என்று.

அவரால் தன் அப்போதைய கேள்விக்கு விடையொன்றை அடைய முடிந்தது.

குளித்துவிட்டு கீழே வந்த ஆனந்தி, மறுநாள் பள்ளிசென்று நடந்த சம்பவம்பற்றிய முறைப்பாட்டைச் செய்ய மறுபடி அவரிடம் ஞாபகப்படுத்தினாள்.

மௌனமாயிருந்த இராஜலிங்கம் சிறிதுநேரத்தில், 'வேண் டாம், இந்த விஷயத்தை அப்பிடியே விட்டிடுவம், ஆனந்தி. இதில களவெண்டு எதுவுமிருக்கிறமாதிரி எனக்குத் தெரியேல்லை' என்றார்.

'அப்ப?'

'மனம்தான். அது ஒவ்வொரு மனிசருக்கும் ஒவ்வொரு வடிவ மாய் இருக்கு. வடிவத்துக்கேற்றதாய் அது சிந்திக்குது. நிக்கலஸின்ர மனம் என்ன வடிவங்கொண்டு இருந்துதோ?'

ஆனந்தி சிறிதுநேரம் தந்தையைப் பார்த்தபடியே நின்று விட்டு எதுவும் சொல்லாமல் மேலே போனாள்.

தான் சொன்னதை அவள் புரிந்துகொள்ளவில்லை என்பது அவருக்குத் தெரிந்தது.

அவள் நின்ற இடத்தில் அப்போதும் அவள் விட்டுச்சென்ற அதிருப்தியை அவர் கண்டார்.

நம் நற்றிணை, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மா

அதுவொரு மென்மையும்நுட்பமும் சார்ந்த விஷயமாக அவளுக்குப்பட்டது. இருந்தும் அதை வகைப்படுத்தி இதுதானெனப் புள்ளிவைக்க அவளால் கூடவில்லை. அங்கேயே நடந்திருந்ததும், வெவ்வேறு இடங்களில் அதுபோல்நடந்ததாய்க் கேட்டிருந்ததுமான சம்பவங்கள் கூட எம்மாவுக்கும் சண்முக நாதனுக்கு மிடையே உள்ளோடியிருந்த மனவுணர்வைப் புரிந்து கொள்ள போதுமானவையல்ல என்பதாய் அவளுக்குத் தெரிந்தது. அந்யோன்னியமாகப் பழகியவர்களும் புரிந்திட முடியாதளவு அதில் புதிர்கள் நிறைந்து கிடந்தன.

அந்தத் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் ஆறு வருஷ அனுபவத்தில் ஒரு ஆணினதும் பெண்ணினதுமான நெருக்கத்தில் எழுந்த கதைகள் வெறும் வதந்திகளாய்க் கரைந்தழிந்ததை அவள் நிறையக் கண்டிருந்தாள். இருந்தும் அவர்கள் விஷயத்தில் ஏதோவொன்று இருக்கவே செய்கிறதென மனத்துள் குடைந்து கொண்டிருந்த எண்ணத்தை அவளால் துடைக்க முடியவில்லை.

சில மாதங்களாக எனினும் எம்மாவோடு நெருக்கமான பழக்கமுண்டு லட்சுமிக்கு. வீடுகள் அண்மையில் இருந்ததில், வாகன வசதியற்றவர்களுக்கு அந்தச் சமீபத்தின் வெளிகூட சிரமத்தில் கடக்க வேண்டியதாய் இருந்தும், வார இறுதி நாட்களில் ரிம் ஹோர்டனிலோ, வோல் மார்ட்டிலோ அல்லது அணித்தாயிருந்த மோலிலோ அவர்கள் சந்தித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதுண்டு. பிள்ளைகளின் பிறந்த நாள்களிலும், நத்தார் புதுவருஷம் உயிர்த்த ஞாயிறுபோன்ற விசேஷதினங்களிலும் வீடுகளிலே கூடிக்கொள்ள வும் செய்தார்கள். அந்நியமாயிருந்த ஆங்கில மொழியூடான உரை யாடல் மூலம் தங்கள் குடும்பங்களைப் பற்றி, நாட்டைப் பிரிந்து வந்த காரணங்கள்பற்றி, கனடா வந்து சேரும் வரை பட்ட அவலங்கள் பற்றியெல்லாம் அவர்கள் பேசியிருக்கிறார் கள். இலங்கையிலிருந்தது போன்ற இனக்கொடுமையை ஆர்மீனியா நெடுங் காலத்துக்கு அனுப வித்திருந்தது. அதிலிருந்து தப்பிப் பிழைத்து ஒரு குழந்தையோடு கனடா வந்து சேர்வது ஒன்றும் எம்மா வுக்கு இலகுவான காரியமாய் இருக்கவில்லை. இலங்கையிலிருந்து இருபத்திரண்டு வயதில் தன்னந்தனியனாய் இந்தியாவென்றும் சிங்கப்பூ ரென்றும் தாய்லாந்தென்றும் அலைந்துழன்றுலட்சுமி கனடா வந்து சேர்ந்த கஷ்டங்களை பெரும் பாலும் அது நிகர்த்திருந்தது.

கணவனால் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் காரணங்கள் துரத்த எம்மா நாட்டைவிட்டு வெளியேறியிருக்க, லட்சுமிக்கு கனடா வந்த பிறகு நடந்த திருமணத்திற்கு பிரிவு விதியாகி இருந்தது. வேறு பெண்ணோடுள்ள தன் கணவனின் தொடர்பு உறுதிப்பட்ட நாளில் குடும்பத்தில் வெடித்துப் பெருகிய கலகம் பொலிஸ்வரை சென்று அன்றிரவே லட்சுமியினுடைய கணவனை வீட்டைவிட்டு வெளி யேற்ற அவள் தனியனாகியிருந்தாள். பிரிவு பின்னால் சட்டரீதியாக வும் உறுதியாயிற்று.

ஏறக்குறைய ஒரேவிதமான தனித்தாயர் வாழ்க்கை இருவருக் கும். ஒரேவிதமான கஷ்ரங்களின் எதிர்ப்படுகைகள். இவையே கூடி வேலைசெய்யும் அவ்விருவருக்குமிடையில் மிகுந்த அந்நியோன் யத்தை ஏற்படுத்தியிருந்தன.

இருந்தும் சண்முகநாதன்மேல் கிளர்ந்திருக்கக்கூடிய விருப்பம் அல்லது ஈர்ப்புபற்றி எம்மா அவளுடன் என்றும் பிரஸ்தா பித்ததில்லை. அதுமாதிரியான இணக்கங்களை அனுமதித்துவிடாத ஒரு தொழிற்சாலையின் நடைமுறை விதிகளினால் மறைக்கப்பட்ட அவ்வுணர்வுகள் தெறிக்கும் கணங்களில் உருக்கொள்ளும் அனு மானங்களும், உள்ளே அசைந்து திரியும் வதந்திகளும் விசை கொள்கிறபோது லட்சுமியே எம்மாவிடம் கேட்டிருக்கிறாள். சிரிப்புக்கான விஷயம்போல் எம்மா அதற்கு ‘ஒன்றுமேயில்லை, குழம்பாதே’ யென பதிலளிக்கவும் செய்திருக்கிறாள்.

ஆனால் லட்சுமிக்கு இப்போது மறுபடி சந்தேகம் வந்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது, எம்மா அந்த வதந்திகளுக்கும், உருத் தோற்றங்களுக்கும் பின்னாலுள்ள உறவின் உண்மையை தன் சிரிப்பால் போர்த்து மறைத்துவிட்டிருந்ததாக.

முதல்நாள் வெள்ளிக்கிழமை தொழிற்சாலையில் யாரும் எதிர் பாராதவிதமாக நடந்த அச்சம்பவம் குறித்து லட்சுமியின் நிலைப்பாடு அவளுடைய சிநேகிகள் மணியக்கா மற்றும் வர்த்தினியினதைவிட வேறாகவே இருந்தது. ஏதோ தமக்குள்ளான ஒப்பந்தத்தை எம்மா மீறினாள்போல வெடித்துச் சினந்து சண்முகநாதன் எம்மாவைத் தூற்றியதற்காக அவள் அவனைக் கோபிப்பாளே தவிர, மற்றவர்கள் போல் எம்மாவை அல்ல.

எம்மா மீதான அவளது கோபமெல்லாம், அவ்வளவு கொதி நிலை அடையும்படியான உண்மையொன்று அதில் இருந்திருந்தும், தன்னிடத்தில் அதை முற்றுமாய் அவள் மறைத்திருந்தாளே என்பதில் தான்.

வேலை முடிந்து வீடு திரும்பியவளுக்கு செய்ய நிறைய வேலைகளிருந்த கவனத்தைமீறி அன்றைய வேலைத்தல சம்பவத்தைச் சுற்றியே மனது அலைந்துகொண்டிருந்தது.

சண்முகநாதன்மீது அவளுக்கு நல்ல அபிப்பிராயம் உண்டு. தொழிற்சாலையில் பத்து வருஷங்களாக வேலை செய்யும் அனுப வத்தை, ஒரு முன்னுரிமையாக எடுத்துக்கொள்ளும் மற்ற ஆண்கள் போலன்றி, அதிகமாக பெண்களே வேலைசெய்யும் அத் தொழிற் சாலையில் அவன் கண்ணியமாக நடந்துகொண்டான்.

நெருங்கி வேலைசெய்ய நேரும் அவ்வாறான தொழிற்கூடங் களில் இருபாலார் உடல்களிலும் ஒரு சபல அலையின் வீச்சுக்கு எப்போதும் குறைவிருப்பதில்லை. அதன் அதிர்வலைகள் எப்போதா வதெனினும் தம்மிருப்பை வெளிப்படுத்தவே செய்கின்றன. இறுக்க மான நெருக்கமொன்று அவர்களுக்குள் இருக்கிறதோ வென்ற சந் தேகம் பலருக்கும் ஏற்கனவே இருந்திருந்தது. அதில் நிச்சயம்கொண்டு அவர்கள் சிரிக்கும்படியாகவே அன்றைய சம்பவம் நடந்திருந்தது. ஆனால் லட்சுமியோ திகைத்து நின்றிருந்தாள். அந்த விஷயம் அவளுக்கு லேசானதில்லை.

சின்ன விஷயங்களுக்குக்கூட வெடித்தெழும் இயல்பு கொண்டவள் எம்மா. அங்கே வேலைசெய்ய வந்த அத்தனை சிறிய காலத்துள் அவள் பலபேரோடு வாக்குவாதப்பட்டு கதைபேச்சுக்களை அறுத்திருக்கிறாள். அது அன்றுவரையிலும்கூட சிலரோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து கொண்டிருக்கிறது. கனடா வந்த ஆறு ஆண்டுகளில் செய்த பத்து வேலைகளில் ஒன்பதன் இழப்பு, முன்பின் யோசியாது அநீதியான எதையும் தூக்கியெறிந்து அவள் வெடித்ததின் காரண மாகவே சம்பவித்தது. அதில் பாதிக்குமேல் மற்றவர்களுக்கான தாகவே இருந்தது. ஆனால் அன்று அந்தளவு கடூரமான வார்த்தைகள் தன்மேல் எறியப்பட்டபொழுதில் வெப்ப வலயத்தில் ஒரு மெழுகுச் சிலையின் உருகுநிலை ஸ்திதியில் தகதகத்துக்கொண்டு தன் ஆளுமை சிதைய மௌனமாய் எம்மா நின்றிருந்தாளே, ஏன்? அவனும் அவ்வா றான வெடிப்பைக் காட்டுமளவு உள்ளுள்ளாகவேனும் அவள்மேல் ஒரு பாத்தியதையை சுவீகரித்தவனாய்த்தான் தென்பட்டிருந்தான். அவனது வெடிப்பும் அவளது மௌனம்போலவே கதைகளைப் பின்புலத்தில் கொண்டிருக்கின்றனவென லட்சுமி எண்ணினாள்.

புதிர்கள் விளைந்துகொண்டிருந்தவளின் மனத்தில் இன் னொரு முகம் தோன்றியது. அடித்த அந்தப் புயலில் சுப்பவைசருக்கு என்ன பங்கிருக்கிறது? அவள் அதை நினைத்தே ஆகவேண்டும். ஏனெனில் அவன் எம்மாவின் வேலைகளில் அதிகமாகவும் குற்றமே கண்டுகொண்டிருந்தவன். அவளது வேலை நிரந்தரத்தை கேள்விக்கு உள்ளாக்கிக்கொண்டு அவளின் அச்சுறுத்தலாக இருந்தவன். இதற்குப் பின்னாலுள்ள இவனின் கதை என்ன? இந்த மூவர் கதைகளின் மோதலா வேலைத்தலத்தில் அன்றடித்த புயல்?

அன்றைய வெள்ளிக்கிழமை வழக்கமாக வேலைசெய்யும் சண்முகநாதனின் மெஷினில் இல்லாமல் தூரத்து மெஷின் ஒன்றிலே வேலைசெய்யும் கட்டாயம் எம்மாவுக்கு நேர்ந்துவிட்டது. போகும் போது லட்சுமியைப் பார்த்து ‘கஷ்ரம்! கஷ்ரம்’ என்பதுபோல் தலையிலே அடித்துக்கொண்டுதான் அவளும் போயிருந்தாள்.

சனி ஞாயிறு விடுமுறை கொண்ட அத் தொழிற்சாலையில் இறுதி நாளான வெள்ளிக்கிழமையின் கடைசி ஒரு மணி நேரத்தை மெஷின்களையும் வேலைத்தலத்தையும் துடைத்து துப்பரவு செய்வதற்காக ஒதுக்கியிருந்தார்கள்.

அன்று துப்புரவுப் பணிக்காக மெஷின்கள் நிறுத்தப்பட்ட நிமிஷத்திலிருந்து எம்மா எங்கும் பார்வையில் தட்டுப்படவில்லை. அவ்வாறான துப்புரவுப்பணியிலிருந்தான ஒதுக்கம் அவ்வப்போது சுப்பவைசரின் அனுசரணையாளர்களுக்கு கிடைப்பதுதான்.

தன்னுடைய மெஷினிலிருந்து எம்மா வேறு மெஷினுக்கு வேலைசெய்யச் சென்றதில், அவளால் அதைத் தவிர்த்திருக்க முடியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெனத் தெரிந்திருந்தும், வெகுநேரமாய் கடுகடுத்துக்கொண்டிருந்த சண்முகநாதன், மெஷின்கள் நிறுத்தப்பட்டு வெகுநேரமாகியும் எம்மா காணப்படாததில், அவள் எங்கேயென்று ஒருமுறை லட்சுமியை வந்து விசாரித்துப் போனான். 'காணேல்லை. ஒஃபீசுக்கு போயிருப்பாவோ தெரியா' என பதிலளித்திருந்தாள் அவள். நேரமாக வாக அவன் தன்னிலை இழந்திருந்ததின் அடையாளமாக கூடவும், பக்கத்திலும் வேலைசெய்தவர்களோடெல்லாம் சினந்து கொண்டி ருந்தான். 'சண்ணோட வேலைசெய்யிறது வலு சுகம்' என்று சொல்லிக்கொண்டிருந்த வர்த்தினிமேலேயே பலதடவைகள் வெடித்துப் பாய்ந்துவிட்டான். ஒருபோது அவள் அழுகையை அடக்கமுடியாமல் குலுங்கினாள்.

வெளிச் செல்வதற்கு சிறிதுநேரம் முன்பாகத்தான் எம்மா மறுபடி அங்கே காணப்பட்டாள்.

எம்மா கிட்ட வர, சண்முகநாதனின் பெருந்தொனி கூடத்தையே அதிர வைப்பதுபோல் வெடித்தெழுந்தது. வீடு செல்ல புறப்பட்டுக்கொண்டிருந்த அத்தனைபேருமே திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

அப்போது வேலைநேரம் முடிவதற்கு ஐந்து நிமிஷங்கள் முன்பான சமிக்ஞை மணி அலறியது. உறைவுநிலை கலைந்தவர்கள் மெல்ல வாசலைநோக்கி நகரத் தொடங்கினர்.

வேலை முடிந்து செல்லும் நேரத்தில் பெண்கள் கூட்டத்தில் நின்று எப்போதும் கலகலத்துக்கொண்டிருக்கும் எம்மா, மின்னல் தாக்கிக் கருகிய மரம்போல இறுதி மணியொலிப்பைக் காத்தபடி உள் வாசலில் தனியே நின்றிருந்தாள். அன்று பஸ் எடுக்க லட்சுமியோடும் அவள் கூடச் செல்லவில்லை. வீடு செல்ல அதிக நேரமெடுக்கும் மாறு திசையில் வந்த பஸ்ஸில் ஏறிக்கொண்டு அவளுக்கு முன்னாலேயே போய்விட்டாள்.

அவளோடு உரையாடாமல் சில விஷயங்களில் தன்னால் எவ்வளவு யோசித்தாலும் தெளிவுபெற முடியாதென்பது லட்சுமிக் குத் தெரிந்தது. அது வெளிப்பார்வைக்குத் தெரிந்துவிடாத பல நுட்பங்களை உடையதாயிருந்தது.

அவள் எம்மாவுக்கு போனெடுத்து மறுநாள் தாங்கள் அவசியம் சந்திக்கவேண்டுமென்றாள்.

மாலை ஆறு மணியளவில் சந்திக்க சம்மதித்தாள் எம்மா.

மறுநாள் வழக்கம்போல் ரிம்ஹோர்டனில் இருவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தனர்.

முதல்நாள் நடந்த சம்பவத்துக்கு எம்மா அன்றைக்கும் அழுதாளா? அவ்வளவுக்கு அவளது முகம் நீண்டநேரம் அழுத அதைப்பு கொண்டிருந்தது. பாவம்தான்! அவ்வளவு மோசமான வார்த்தைகளைத் தாங்குவது ஒரு வெள்ளைத் தோலிக்குக்கூட வலி நிறைந்ததாகவே இருந்திருக்குமென எண்ணினாலும், அவளைத் தேற்றுவதைவிட்டு தன் சந்தேகங்களைத் தீர்க்க முனைந்தாள் லட்சுமி. 'நான் கேட்கப்போகிற கேள்விக்கு வழக்கம்போல இன்று சிரித்துக் கொண்டு பதில்சொல்ல உன்னால் முடியாதென்று எனக்குத் தெரியும். முன்பு ஒன்றோ இரண்டோ முறை நான் கேட்ட அதே கேள்விதான் இது. நீயும் பதில் சொல்லியிருக்கிறாய்தான். ஆனால் இன்றைக்கு அந்தப் பதிலில் எனக்கு சந்தேகம் வந்திருக்கிறது. அதனால் எங்கள் நட்பை நீ கனம் பண்ணு கிறவளாய் இருந்தால் என் கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்லவேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்பதை நீ சரியாக விளங்கிக்கொண்டாயா, எம்மா? எனக்கு உண்மை... உண்மைமட்டும்தான் வேண்டும்.'

'ம்... கேள்.'

'சண்மீது... அதுதான் சான்... உனக்கு விருப்பமேதாவது இருக்கிறதா?'

எம்மா கோப்பியைக் குடித்தபடி சிறிதுநேரம் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தாள். எதிரே இருப்பவள் அவளது நெருங்கிய தோழி. அதே கேள்வியை அவ்வளவு அழுத்தமில்லாமல் முன்பு அவள் கேட்டபோது சிரித்து மழுப்பிச் சமாளித்ததுபோல் அன்றைக்கு முடிந்துவிடாதென்பதை எம்மாவால் உணர முடிந்தது. பலரினதும் ஊகங்களை ருசுப்பிப்பதும், பலருக்கு ஊகங்களை உருவாக்குவதுமான சம்பவமே முதல்நாள் நடந்திருக்கிறது. லட்சுமிக்கும் எந்தளவிலோ அது பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அவளது பார்வை, இறுகிய முகபாவங்கள் எல்லாம் அதையே உறுதிசெய்துகொண்டு இருக்கின்றன. சரி, அந்தரங்கத்தைத் திறக்கிற நேரம் வந்துவிட்டதென எம்மா முடிவுபண்ணினாள். பின் ஆமென்று சுணக்கமாகத் தலையசைத்தாள்.

'வெளிப்படையாகவே அவனிடம் இதைச் சொல்லியிருக் கிறாயா?'

சிரிக்க வராதென்று தெரிந்தும் எம்மா ஒரு முயற்சி மேற் கொண்டாள். வராதுபோக தலைகுனிந்தபடி கோப்பிக் கப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் பிடித்து தணிந்துவரும் அதன் சூட்டை உணருவதுபோல் உருட்டியபடி இருந்தாள். பின் பதிலை தலையசைத்தாள். இல்லை!

'ஏன்? அவன் உன்னை விரும்புவது விரும்பாதது உனக்குத் தெரிந்திருக்கவில்லையா?'

'தெரியும். ஆனாலும் சொல்லவில்லை' என்று தொடங்கி தன் மனத்தை ஒரு நிறை பனிப் பொழிவின் கனதியோடு சொல்லி முடித் தாள். ஒரு பிரசங்கதையே அவள் செய்ததுபோல் இருந்தது. இடை யிட்ட லட்சுமியின் கேள்விகளுக்கும் வேகமறாது பதிலளித் தாள். ஒரு கட்டத்தில் உறவுகளின் விசித்திர சேர்மானங்களைச் சொல்லியதோடு எல்லாம் கொட்டப்பட்டுவிட்ட வெறுமையுடன் அவள் தணிந்தாள்.

லட்சுமியால் நம்பமுடியவில்லை. ஒருவர்மீது ஒருவர் கொள்ளக்கூடிய அதிக விருப்பம், அதீத விருப்பம் ஆகியனவற்றின் இருப்பையே அவள் அப்போதுதான் அறிகிறாள். அவற்றின் அர்தமும் அவளுக்கு அன்றேதான் தெரியவந்திருக்கிறது. லட்சுமியின் மன மெங்கும் அதிர்வலைகள் பரந்தன.

அந்த உரையாடல் இவ்வாறு இருந்தது:

'சான் என்னை விரும்பியது எனக்குத் தெரியும், லக்சோ. வேலை செய்ய வந்த ஒன்றிரண்டு நாட்களிலேயே அதை நான் தெரிந்து கொண்டேன். எனக்கும் ஒரு விருப்பம் அவனது அணுகுதல் களில், ஆதர வான கதைகளில் இருந்ததென்பதை இனி நான் மறைக்கப் போவ தில்லை. ஒரு வாரத்துக்குள்ளாக அந்த ஈர்ப்பு என்னில் தீவிர மாகியும் போனது. நம்பமாட்டாய், நான் கனவுகள் காணவே தொடங்கி விட்டேன். கனடாவுக்கு நான் ஓடிவந்ததே அவனுக்காகத் தான்போல உள்ளமெல்லாம் சிலிர்த்திருந்தேன். இருந்தும் என் விருப்பத்தை வாய் திறந்து என்றைக்கும் நான் அவனிடத்தில் தெரியப்படுத்தியதில்லை.'

'ஏன்?'

'ஏனென்றால், தன் விருப்பத்தை அவன் என்னிடத்தில் சொல்லாதிருந்தான். அவனே அதை என்னிடத்தில் சொல்ல வேண்டு மென்று நான் எதிர்பார்த்தேன்.'

'அதிலென்ன வித்தியாசமிருக்கிறது?'

'அவன் கல்யாணமாகாதவன். நான் கல்யாணமாகி ஒரு குழந்தையோடு இருக்கிறவள். சட்டப்படியான இணைவு என்ற எல்லையை நோக்கி நகராமல், ஒரு ஈர்ப்போடுமோ, ஒரு விருப்பத் தோடுமோ, ரகசியமான சில ஸ்பரிசங்களோடு மட்டுமோ அடங்கிக் கொண்டு என்னால் இருந்துவிட முடியாது.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இப்போதெல்லாம் அதிகமாகவும் சேர்ந்து வாழ்தல்தானே நடைமுறை... உங்கள் விருப்பம் அந்த எல்லைக்குக்கூட செல்லா தென எப்படித் தீர்மானித்தாய்?'

'என்னால் முடிந்திருந்தது, லக்சோ. ஒருசில வாரங்களிற்கு உள்ளாகவே முடிந்திருந்தது. அவனது கண்களிலும், உடம்பிலும் திமிர்த்த வேட்கையில் அதை நான் கண்டேன். அவனது அதீதமான விருப்பம், லக்சோ. என்னை அப்படியே விழுங்கிவிடுகிற... கபளீகரம் செய்துவிடுகிற... விருப்பமாய் அது இருந்தது. அது எதார்த்தத்தில் ஆழமாக ஆதாரம் கொள்ளாதது. இவ்வாறாக தொழிற்சாலைகளில் ஓய்வுநேர பொழுது போக்குப்போல சில காதல்கள் தலையெடுக்கும். அந்த அளவிகந்ததும் உடனடிச் சுகம் தேடுவதுமான விருப்பங் களை, ஒருவரையொருவர் முழுமையாகத் தெரிந்து உருவாகும் அளவான விருப்பங்களிலிருந்து வேறுபிரித்துக் காண ஒரு நம்பிக்கையான, நிலைத்திருக்கக்கூடிய வாழ்க்கையை எதிர்பார்க்கும் எவருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.'

சொல்வதில் அவளது சிரமங்கள் வெளித்தெறித்தன. அதில் அவள் கரிசனம் கொஞ்சமும் கொள்ளவில்லை. வார்த்தைகள் தடு மாறியபடி விழுந்துகொண்டிருந்தன. 'அந்த அளவான விருப்பத் துக்கும் அதீதமான விருப்பத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை காதலுக்கும் காமத்துக்கும் இடையேயான வித்தியாசமாக நான் காண்கிறேன். அவனுக்கு எனது முடிந்துபோன திருமண வாழ்க்கை, இப்போது நான் வாழ்ந்துகொண்டிருக்கிற வாழ்க்கைத் தரம், எனக்கு குழந்தை இருக்கிற விஷயம், அதற்கு எட்டு வயதாகிறது... பள்ளி செல்கிறது... மூன்றாவது பாரம் படிக்கிறது... என்பதுபற்றிக்கூட ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. தெரிந்துகொள்கிற முனைப்பும் அவன்என்றும்காட்டியதில்லை. இது எதுவுமே தெரிந்திராத ஒருவனின் என்மீதானவிருப்பம் எதுவாக இருக்குமென்று நீ நினைக் கிறாய்? அந்த நிலையில் நான் உன்னைக் காதலிக்கிறேனென்று ஓடிப்போய் என்னால் சொல்லிவிட முடியுமா, சொல்லு?"

வாசிப்புப் பழக்கம்கூட அவளிடம் பெரிதாக இருக்கவில்லை. அவள் அறிந்துகொண்ட அரசியலும், வெளியுலகு சார்ந்த விஷயங் களும் அவளால் காட்சியூடகங்கள் மூலம் தெரிந்துகொள்ளப் பட்டவையே. இருந்தும் என்னமாதிரி மூடுண்டு கிடந்த ஒரு உணர்வின் வெளியை வெளிச்சமிட்டுக் காட்டிவிட்டாள்!

லட்சுமிக்கு அந்தத் திகைப்பிலிருந்து மீள வெகுநேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281558

பிடித்தது.

ஆயினும் அவளால் விளங்கமுடியாத பகுதி இன்னும் அதில் இருந்தது. ‘அப்படியானால் தன்னை விரும்புவதாக அவன் எண்ணும்படி தொடர்ந்தும் நீ பழகியிருக்கத் தேவையில்லையே?’

அவள் தன்னைப்பற்றி நிறையவே யோசித்திருக்கிறாள் என்பது தெரிந்தது எம்மாவுக்கு. ‘நீண்டநாளாய் வேலை செய்கிறவனும், திறமான வேலைகாரனுமான அவனோடு வேலைசெய்ய எனக்கு விருப்பமில்லையென நான் கூறிவிட முடியுமா, ம்? மேலும், அவன் மீதான விருப்பம் இன்னும் இருந்துகொண்டிருக்கிறதை எனக்கே நான் மறைத்துவிடுவது எப்படி? அவனது உள் அறிந்த பின்னாலும் அவனிலிருந்து என்னால் முழுவதுமாய் ஒதுங்க முடியாதிருந்தது.’

‘சரி. அவ்வாறு இருக்கிறபோது சுப்பர்வைசருடன் ஏன் அந்தமாதிரிப் பழகினாய்?’

‘எந்தமாதிரி...?’

‘நெருக்கமாக நின்று... சிரித்து...’

‘அது ஒரு விஷயமா, லக்சோ? ஒரே இடத்தில் வேலை செய்கிறவர்கள் கதைப்பது, சிரிப்பது, கதைக்காமலிருப்பது, முகத்தைச் சிடுசிடுவெனவைத்திருப்பதெல்லாம் எவ்வாறு ஒருவரின் விருப்பமோ விருப்பமின்மையோ ஆகமுடியும்? அவன் தொட்டுத் தொட்டுத்தான் என்னோடு பேசுவான். சிலவேளை நான்கூட அவனோடு அப்படித்தான் பேசியிருக்கிறேன். இதெல்லாம் ஒரு விஷயமே இல்லை, லக்சோ. ஆனாலும் அந்தச் சாதாரணமான செயற்பாடுகளை ஒரு திட்டமான நாடகமாகவே நான் புரிந்தேன். அப்படிச் செய்திருக்கக்கூடாதென்று இப்போது தெரிகிறது. ஆனாலும் வேறு வழியில்லை. அதுவொரு நிர்ப்பந்தம்.“

‘யாருடைய நிர்ப்பந்தம்?’

‘யாரினதுமில்லை. வாழ்க்கையின் நிர்ப்பந்தம். எவருக்கும் ஒரு வேலை அவசியமெனச் சொல்லிக்கொண்டிருக்கிற இங்குள்ள வாழ்க்கையின் நிர்ப்பந்தமே அது. அந்தவகையில் நான் இப்போது பார்க்கிற வேலை எனக்கு மிகமிகமுக்கியமானது, லக்சோ. சம்பளம் ஒழுங்காகக் கிடைக்காத பல கம்பெனிகளிலே நான் வேலைசெய்துகளைத்திருக்கிறேன். வெள்ளிக்கிழமைகளில் சம்பளத்தைப் பெற ஏஜன்ரின் அலுவலகம் போய் ஒன்றரை இரண்டு மணத்தியாலங்களாக கால் கடுக்க காத்து நின்றிருக்கிறேன். அந்த வாரம் கிடைக்க வேண்டிய செக் கிடைக்காமல் அடுத்த வெள்ளிவரை செலவுக்குச் சிரமப்பட்டி

13398 cc


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறேன். நானே சில வேலைகளை ரோஷத்தில் தூக்கியெறிந்து விட்டு மேலே வேலை தேடியலைந்து சலிப்பேறியிருக்கிறேன். உனக்கு இந்தமாதிரி அனுபவங்கள் ஏற்பட்டிருக்கிறதா, லக்சோ? அவ்வாறுநான் நொந்துபோயிருக்கிற நேரத்தில்தான் இந்த வேலை எனக்குக் கிடைத்தது. சானுக்கு விருப்பமில்லையென்று சுப்பர்வை சருடன் கதைக்காமலும் முரண்டிக்கொண்டும் இந்த வேலையை என்னால் தக்கவைக்க முடிந்திருக்குமென்று நான் நினைக்கவில்லை. ஆறு மாதங்களாகியும் கிடைக்காத வேலை நிரந்தரம் இந்தக் கோடை விடுமுறையோடு கிடைக்க விருக்கிற சமயத்தில் அப்படியொரு முறுகல் நிலை ஏற்படுவதை யாரும் விரும்ப மாட்டார்கள். நான் விரும்பவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்னரே கிடைத்திருக்க வேண்டிய வேலை நிரந்தரம் விலகிப்போனதற்கு நான் அவனது அணுகுமுறைக்குக் காட்டிய எதிர்ப்பே காரணமென்பது யாருக்குத் தெரியும்? அதனால்தான் சான் விரும்பமாட்டானென்று தெரிந்திருந் தும் சுப்பர்வைசருடன் அந்தமாதிரி நடந்துகொண்டேன். நிரந்தர மான ஒரு வேலை... திட்டமான ஒரு சம்பளம்... இவற்றின்மீதுதான் இங்கே ஒரு வாழ்க்கை எவருக்கும் உழன்றுகொண்டிருக்கிறது, லக்சோ. மறந்துவிடாதே.'

லட்சுமியால் அவளை இப்போது ஓரளவு புரிய முடியும்போல இருந்தது. ஆனாலும் இன்னும் ஒரு புதிர் அங்கே இருக்கிறது. 'சரி, அப்படியே இருக்கட்டும். ஆனால் தொடர்ந்தும் ஏன் சுப்பர்வைசர் கோபம் கொள்கிற அளவுக்கு சானுடன் ஏன் பழகினாய்? உள்ளுக் குள்ளே அவன்மீது விருப்பமிருந்தது என்றுமட்டும் சொல்லி விடாதே.'

எம்மா லட்சுமியைப் பார்த்தபடி சிறிதுநேரம் இருந்தாள். பிறகு, 'ம்...' என்று தன்னைச் சுதாரித்தாள். 'சொன்னால் நம்ப மாட்டாய். அதன் உண்மை என்னவென்றால் அந்த இரண்டு பேரின் அபிமானமும் எனக்கு அவசியமாயிருந்தது.'

இப்போது லட்சுமியில் சிறிது கோபமேறத் துவங்கியது. ஒருவரது சுயாதீனத்தில் இந்தவகை மிக அருவருப்பானது. அவளால் ஒப்புக்கொண்டுவிட முடியாதது. அதை எம்மா உணர்ந்திருந்தாளா? அவள் கேட்டாள்: 'இருவரையும் விரும்புவதாகக் காட்டிய உன் நாடகம் உண்மையில் தரக்குறைவானதாகவும், சான் அந்தமாதிரி உன்னைத் திட்டித் தீர்ப்பதற்குக் காரணமானதாகவும் இருந்ததை நீ எதுவுமாக நினைக்கவில்லையா, எம்மா? உன் குணநலம் நேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கேவலமாக நிந்தைப்படுத்தப்பட்டது என்பதையாவது நீ உணர்கிறாயா?'

எம்மா யோசித்தாள். சிறிது கோப்பியை உறிஞ்சினாள். பிறகு பலஹீனமாகச் சிரித்தாள். ஒருவர் கொண்டிருக்கக்கூடிய மொத்த அவலத்தினது பருண்மையாகவும் அது தோன்றியது லட்சுமிக்கு.

பின் தனது மௌனமுடைத்து சொன்னாள்: 'நான் அவன்மீது செலுத்திய விருப்பத்தின் பரிசாக அதைக் கொள்வதைத் தவிர வேறு நான் என்ன செய்யமுடியும்? ஒருவிதமான தேவையின் அணுக்கமொன்று ஆரம்பத்தில் என்னிடத்தில் இருந்திருந்தாலும், அவனை நான் தெரிந்துகொண்ட கணத்திலிருந்து எல்லை கடவாததும், எல்லை கடக்க விடாததுமான ஒரு அவதானத்தில் நின்றுதான் பழகினேன். காயோ பழமோ ஆகமுடியாத ஒரு வெறும் பூவின் மலர்வாக அந்த அபிலாசை இப்போதும் அவன்மீது இருக்கிறதுதான். அது என் கனவென்று வைத்துக்கொள்ளேன். மனிதர்கள் கனவு காணக் கூடாதா, என்ன? ஆனால் அதையும் காணாமல் இருந்திருக்கலாம் தான். இவ்வளவு காலமாக எந்த ஆண்சுகமும் இல்லாமல் வாழ்ந்து விட்ட எனக்கு அது பெரிய காரியமாகவும் இருந்திருக்காது. ஒருவேளை அவனைக் கண்டு திமிறத் துவங்கிய என் ஆசைகள் அடங்க மறுத்து இருந்து விட்டனவோ என்னவோ? மனம்கூட சொல்கிறபடி கேட்காத புதிர் கொண்டது, லக்சோ. எப்படியோ, அது என்னுடைய பிழையென்பதை நான் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். தெரிந்து செய்த பிழை.'

திடுக்கிட்டாள் லட்சுமி. 'தெரிந்துகொண்டுமா செய்தாய்? என்னால் உன்னைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை, எம்மா.'

'அது கஷ்டம்தான், லக்சோ. மனத்துக்குள் எவ்வளவு விகாசம் கொண்டிருந்தாலும் பாதி வாழ்க்கையைத்தான் நாமெல்லோரும் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். அதில் பாதியையேனும் சொல்ல எனக்கு மொழி இல்லாமல் இருக்கிறது. எஞ்சியதை எப்படியோ சொல்லித் தொலைக்கிறேன், சிரமப்பட்டென்றாலும் புரிந்துகொள், தோழி. உண்மையில் ஒரு தேவை... ஒரேயொரு தேவைதான்... தொடர்ந்தும் என்னை அவ்வாறு இயங்க வைத்தது.'

'நிர்ப்பந்தம், அவசியமென்று சொல்லிச் சொல்லியே எல்லாவற்றிற்கும் பணிந்து போய்விட்டாய். இப்போது ஒரு தேவைக்குப் பணிந்துபோனதாய்ச் சொல்லப்போகிறாயா?'

'இப்போது பார், லக்சோ, சுப்பர்வைசருடன் நான் சரஸமாகப் பழகத் துணிந்தேனென்றால், அதற்கு என்னிடமிருந்த ஒரே பலம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான் அங்கேஇருந்தான்என்பதுதான். அவன் ஒருவகையில் எனக் கொரு பாதுகாப்பாக அங்கே இருந்தான். நிர்ப்பந்தங்களால் எவரும் என்னை அணுகமுடியாத நெருப்பு வளையமாக இருந்தான். தொட்டும் பட்டும் சிரித்தும் பேசுவதை நான் இணங்கிவிட்டேனென கொண்டுவிட்டாலும் சுப்பர்வைசர் எல்லைமீறமுடியாத என் எல்லைக் காவலனாக சான்தான் இருந்தான். உனக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அதுதான் உண்மை. சானின் பலமும் உக்கிரமும் தான் இப்போதும் என்னை அங்கே காவல் செய்து கொண்டு இருக்கின்றன.'

நீண்டநேரமாயிற்று லட்சுமியின் உறைவு தெளிய.

'என்ன, லக்சோ, பேச்சைக் காணவில்லை?'

'ம்... உன்னுடைய அந்தத் தேவைதான் மூலப்பிரச்னையாய் எல்லாக் குழப்பங்களையும் உள்ளடக்கிக் கொண்டு இருந்திருக்கிறது. நேற்றைய ரஸாபாசம் அதன் ஒரு விளைவுதான். ஒரு அவசியத்திலான தாக உன் நடத்தையை ஏற்கமுடியுமாயினும், எனக்குத் தோன்றுகிறது, நானே அவ்வாறு என்றைக்கும் ஒழுகிவிடமாட்டேன்' என்றாள் லட்சுமி.

சிறிதுநேரம் கோப்பியைக் குடித்தபடி எம்மா இருந்தாள். வெளியே சென்றுவர அந்தரம் பட்டவள் போல் தோன்றினாள். கோப்பியின் பின் அவளுக்கு சிகரெட் புகைக்கவேண்டும். ஆனாலும் இன்னும் அமர்ந்திருந்தபடியே சொன்னாள்: 'பெரும்பாலான இந்தியப் பெண்களால் அவ்வாறெல்லாம் நடந்துவிட முடியாது தான். ஏற்றுக்கொள்வதே பலருக்கு கஷ்ரமாக இருக்கும். ஆனாலும் இதை எம்மாவாகிய என்னுடைய தேவையாக இல்லாமல், ஒரு பெண்ணுடையதாக உன்னால் பார்க்கமுடிந்தால் நீ இன்னும் தெளிவடைந்து விடுவாய். அவ்வாறு நான் செய்யாது விட்டிருந்தால் அந்த இரண்டு பேரில் யாராவது ஒருவனால் வெறும் பெண்ணுட லாய் நான் பாவிக்கப்பட்டிருக்கும் அபாயமும் நேர்ந்திருக்கலாம். சிலவேளை இரண்டுபேராலுமே. வாழ்வின் தேவையை நிறைவேற்றச் செல்கையில் ஒரு பெண்ணாய் என் தப்புகைக்கான வழி எனக்கு இதுவாக இருந்து விட்டது. அவ்வளவுதான். தனித்தாயாய் வாழும் ஒரு பெண்ணை நோக்கிய இந்தவகை அபாயங்களை எது செய்தும் சமாளித்தால்தான் என்ன, ம்?'

இனி அதுபற்றிப் பேச எதுவுமில்லைப்போல் இருவரிடை யிலும் ஒரு நிறைவின் மௌனம் விழுந்தது.

தீராநதி, அக். 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 MAR 2021

# உட்கனல்

நீண்ட காலத்துக்குப் பிறகு ஊர் காண வந்திருந்த நவநீதத்திற்கு அந்த இடத்தைக் காரிலே கடந்துசெல்ல நேர்ந்த வேளையில் நெஞ்சின் ஆழத்தி லிருந்த நினைவுகள் திடீரென சுழிப்பெடுத்துப் பெருகின.

நாவற்குழிப் பாலம், செம்மணி உப்பளம், அப்பால் மயானவெளி தாண்டி நல்லூர்ப் பாதையில் முதல் வருகிற குடிமனைத் தொகுதி நாயன்மார்கட்டு. சுமார் இருபது வருஷங்களுக்கு முந்தி சுற்று மதிலும், வாசல் கொட்டகையும், வெளியே தெருமடமும் கொண்ட அந்த வீடிருந்த இடத்தில் அப்போது வேறொரு வீடு இருந்துகொண்டிருந்தது. மட்டு மில்லை. சற்றுத் தள்ளி நல்லூர்த் தெருவிலிருந்து அரியாலைக்கு கிளை பிரிந்த சந்தியிலிருந்த கிணற்றுக் கட்டும் மேடையும், அருகிலிருந்த சுமைதாங்கியும்கூட இல்லாது போயிருந்தன. இருந்தும் செம்மணி தாண்டி கார் குடிமனைக்குள் பிரவேசித்ததுமே அந்த இடத்தை நவநீதம் துல்லியமாக அடையாளம் கண்டு கொண்டார்.

அப்போதுள்ள குடும்பத்தின் நிம்மதி, செழிப்பு எல்லாமும் ஒரு பொறியில் பஸ்மமாகவிருந்த ஒரு காலம் அவர் கண்ணில் நிழலாடியது. அதிலிருந்தான மீட்சி அப்பொழுது இல்லாமல் போயிருக்கிற அந்த வீட்டிலேதான் சாத்தியமாயிற்று.

புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்திருந்த காலத்தில் அவ்வப்போது அதை அவர் நினைத்திருக்கிறார். கச்சித மாக நிலைமையை அனுசரித்த தனது சாமர்த்தியத்தை அப்போதெல்லாம் மெச்சிக்கொள்ள அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறவில்லை. ஆயினும் வள்ளி நாயகி அந்த துரோகத்தை அனுசரித்துப் போன புதிர் எப்போதும் விடுபடாததாகவே அவரில் இருந்துகொண்டிருந்தது. அதுகூட பின்னர் பின்னராக நினைவின் எட்டாத் தொலைவுக்கு மெல்ல நகர்ந்து போயிருந்தது.

திரும்பி அருகிலிருந்த மனைவியைப் பார்த்தார். அந்த இடத்தோடும், அங்கு நடந்த சம்பவங்களோடும் அவளுக்கு மிகுந்த தொடர்பிருந்தது. அந்த நிகழ்வுகளின் முக்கிய கதாபாத்திரம் அவள். இருந்தும் கண்ணாடிப் பக்கமாக முகத்தை முழுவதுமாய்த் திருப்பி வெளியே பார்த்தபடி தன்னை அவரிலிருந்து ஒளித்துக் கொண்டிருந்தாள்.

அவளது ஒதுக்கம் எது காரணத்தாலானதென நிச்சயிக்க முடியாதிருந்தபோதும் அவரது மனத்தில் ஒரு பதற்றம் இறங்கத் துவங்கியது. ஊர்காணும் அந்தப் பயணத்துக்கு தான் வரவில்லையென்றிருந்தவளை வற்புறுத்தி அழைத்து வந்தது வேண்டாத வினையாய் ஆகிவிட்டதோவென அவர் அஞ்சத் துவங்கினார்.

நல்லூர் சென்றவர்கள் சுவாமி தரிசனம் முடித்துக்கொண்டு ஒன்பது மணிக்கு முன்பாகவே மிருசுவிலில் தாங்கள் தங்கியிருந்த உறவினர் வீடு திரும்பிவிட்டிருந்தனர். முன்னறையின் ஒற்றைக் கட்டிலில் அவரும், கீழே பாய்விரித்து அவளுமாய் சாப்பிட்டு வந்து படுத்திருந்தபோதுகூட கார்ப் பயணத்தில்போல் அவருக்கு முகத்தை மறைத்தபடியேதான் வள்ளிநாயகி திரும்பிப் படுத்திருந்தாள்.

அவ்வாறு அந்த எண்பதுகளிலும் அவள் இருந்திருக்கிறாள். அவர்கள் உறவுக்குள் விரிசல் விழுந்துவிட்டதின் அடையாளம் அது. அது பெரிய பாதிப்பை அவரிடத்திலோ, அவரது குடும்ப ஸ்திரத்திலோ இனி ஏற்படுத்த முடியாதென்றபோதும் அச்சம் துளிர்ப்பதை அவரால் தவிர்க்க முடியவில்லை. அது தனது அன்றைய தந்திரங்களின் வெற்றியால் ஒரு சிக்கலான குடும்ப நிலைமை நேர்நின்றதென்ற அவரது பெருமையின் தோல்வியாக முடியுமென்பதோடு, அதை முழுவதுமாய் நம்பிக்கொண்டு அவள் தன்னோடு வாழவில்லை என்பதாகவும் ஆகிவிடும்.

ஒருகாலத்தில் விசுவமடு, தருமபுரம் பகுதிகளுக்குச் சென்று செத்தல் மிளகாய்க் கொள்வனவும், கொழும்புக்கு மரக்கறி ஏற்றுமதியும் அவர் செய்துகொண்டிருந்தார். தூக்குத் தராசில் அவர் புரிந்துவைத்த சூக்குமத்தில் ஒன்றுக்கு இரண்டாக லாபத்தைக் கொட்டிக்கொண்டிருந்தது வியாபாரம். அது அவரது சீலத்தின் திசைமாற்று விசையாகவும் காலப்போக்கில் ஆகிப்போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுகளில் தாமதமாக வருவதும், சில இரவுகளில் வராமலே இருந்துவிடுவதும்பற்றி வள்ளிநாயகி கேட்டபோதெல்லாம் நண்பர் களோடு கடுதாசி விளையாடுவதாக அவர் சொன்ன காரணத்தை அவள் ஆரம்பத்தில் சுணக்கத்தோடெனினும் நம்பவே செய்தாள். ஆனால் அதன் உண்மைக் காரணம் ஊரிலே சலசலக்கத் தொடங்கிய போது சிதறிப்போனாள். அவரின் அத்தகு நடத்தைகளுக்கு திட்டமாகத் தடைபோட்டாள். பிள்ளையின் தலையிலறைந்து, மீறினால் செத்துவிடுவேனென ஆணையிட்டாள். என்றைக்கு அவர் அவளது ஆணையை மீறியது தெரிந்தாளோ, அன்றைக்கே அவரைத் திரஸ்கரித்து குழந்தைகளோடு வீட்டைவிட்டு வெளியேறினாள்.

தாய் வீடு போனவளுக்கு அயல் நகரத்திலும் மாநகரத்திலும் கணிசமாயிருந்த பல கண்கொத்திப் பாம்புகளின் கதைகளைச் சொல்லிற்று. அப்புக்காத்து பிரக்கிராஸி கச்சேரிக் கிளார்க்குகளென பலர் அவற்றால் அழிந்தொழிந்து போனமைக்கு சாட்சியங்கள் காட்டிற்று. அவளெடுத்தது சரியான முடிவென பரிந்துரையும் செய்தது.

ஆனால் மன்னாரிலிருந்து வந்த பெரியம்மா வேறுமாதிரிச் சொன்னாள். 'காசு புழங்கிற ஆம்பிளயளுக்கு கடிக்காமயே விஷ மேத்த சில பாம்புகளுக்குத் தெரியும், பிள்ளை. அந்தமாதிரி நவநீதம் போச்சுதே எண்டு வருத்தப்படாமல், திரும்பி வந்துதேயெண்டு சந்தோஷப்படு. நீ எதுக்கும் நாயன்மார்க்கட்டு பசுபதி அய்யரிட்ட நவநீதத்தை ஒருக்கா கொண்டுபோட்டு வா. எல்லாம் சரியாய் போயிடும்.'

'நவநீதம் நல்லாய்த்தான இருந்தது. பிறகெப்பிடி அதுக்கு புத்தி இந்தமாதிரிப் போச்சுது? அது அந்த கண்கொத்தியளின்ர வேலையாய்த்தான் இருக்கும். பெரியம்மா சொன்னமாதிரி ஒருக்காச் செய்துபாரன்' என்றாள் அம்மாவும்.

'அது கண்கொத்தியளின்ர விஷமில்லை, அந்தாளின்ர அமர்' என்று வாதம் புரிந்தாள் வள்ளிநாயகி. இரண்டு பிள்ளைகளோடு அவள் அந்தமாதிரி அவரை உதறியெறிந்துவிட்டு தன் வாழ்வைக் கழித்துவிட முடியாதென்று அம்மா அவளைத் துரத்திவிட்டாள்.

அடுத்த நாள் குழந்தைகளோடு வீடு வந்தாள் வள்ளிநாயகி. உள்ளே கூடத்துக்குள் நவநீதம் பாய்விரித்துப் படுத்திருந்தது.

'உடம்புக்கென்ன?'

'காய்ச்சல்.'

'உது சும்மா காய்ச்சலாயிராது, விஷக் காய்ச்சலாய்த்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். காய்ச்சலுக்கு இப்ப பனடோல் குளிசை தாறன். விஷத்துக்கு நாளையிண்டைக்கு வெள்ளிக்கிழமை பசுபதி அய்யரிட்ட தான் கூட்டிக்கொண்டு போப்போறன்.'

தன் சிதைவை அவள் அவ்வாறு விளங்கியது கண்டு அவர் சமயோசிதமாக சம்மதித்தார்.

அவளும் தனக்கில்லாது தன் தாயாருக்கும், பெரிய தாயாருக்குமிருந்த நம்பிக்கையைப் பரீட்சிக்கும் ஒரு முயற்சியாக அவரை வெள்ளிக்கிழமை மாலையில் நல்லூர் கூட்டிவந்தாள்.

அப்போது புதிதாய் முளைத்திருந்த அந்த பலசரக்குக் கடைக்கு எதிரேதான் பிரமாண்டமான சுற்று மதிலுக்குள்ளே பசுபரி ஐயரின் சிறிய கூரைபோட்ட சுண்ணாம்புக்கல் வீடு இருந்திருந்தது. காட்டுக் கல்லும், முருகைக் கல்லும் கலந்து கட்டப்பட்ட சுற்றுமதில் ஆளுயரத்திற்கு மேலானதாயிருந்தது. அதன்மேலே படிந்து படிந்து கருமையேறிக் கனத்துக் கிடந்த பாசியின் தடிப்பம் மதிலின் நூற்றாண்டு கடந்த வயதைச் சொல்லிக்கொண்டிருந்தது. மதிலுக்கு மேலால் தூங்கு செம்பரத்தம் பூக்கள் மாந்திரீகத்தின் இழைகளாய் வெளியே தொங்கி அசைந்துகொண்டிருந்தன.

உள்ளே அவர் சென்றபோது கைமணி கிணுகிணுத்துக் கேட்டது. வீட்டின் பின்புறத்தில் தூண்டாமணிவிளக்குகள் மினுக்கின. கோவிலின் அமைவும், மரங்களின் செறிவும் அவரை மெஸ்மரிசத்துக்கு உள்ளாக்கின. அவர் வள்ளிநாயகி பின்னால் ஊர்ந்து போனார்.

நவநீதம் கால் முகம் கழுவி வந்ததும், அய்யர் எலுமிச்சம் பழம் சுற்றி வெட்டிப்பார்க்க, பிளந்து இரண்டாய்க் கிடந்த பழத்தின் விதைகளில் விஷத்தின் அளவும் வீர்யமும் கறுப்பாய்ப் படிந்துகிடக்கக் காணப்பட்டது.

அதில் அய்யரே ஆச்சரியம் பட்டபடிதான் நவநீதத்திற்கு காப்பு நூல் கட்டினார். குடும்பத்தையே மறக்கச் செய்யுமளவு நவநீதத்தின் மேல் வீசப்பட்டிருந்த கடூர வசியத்தினைச் சொல்லி, அவரை அடுத்த வெள்ளிவரை அங்கே தங்க வேண்டுமென்றார். 'அதுக்குள்ள வசியத்தை முறிச்சிடுவன். ஆனா எந்தக் காரணத்தைக்கொண்டும் நவநீதம் கேற்றைத் தாண்டக்குடாது. வசியத்தின்ர வீறு இவரில கொஞ்சங்கொஞ்சமாய்க் கழண்டு போயிட்டாலும், வாசல்ல அது ஆள் எப்ப வருமெண்டு காத்திருக்கும். இப்ப நான் கையிலே கட்டியிருக்கிற காப்பு ஒரளவுக்குத்தான் இவருக்குப் பாதுகாப்பு. சொல்லிப் போட்டன், கவனம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் கேட்ட நவநீதம் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு தலையை ஆட்டினார்.

அந்த கோட்டைபோன்ற சுவர்களின் உள்ளிருந்த பழைய வீட்டுக்குள்ளே நவநீதம் எட்டு நாட்கள் தங்கி இருந்தார். ஏழாம் நாள் பகல்தவிர்ந்த நேரமெல்லாம் வள்ளிநாயகியும் அவரோடு உடனிருந்தாள்.

எல்லாம் நல்லமாதிரி நடந்துகொண்டிருந்த அந்த ஏழாம் நாள் பகலில், தாயார் வீட்டில் விட்டுவந்த வள்ளிநாயகியின் பிள்ளை களில் மூத்தது தெருவிலே சைக்கிளில் மோதுண்டு காயம்பட்டிருக் கிறானென்ற செய்தியைக் கொண்டு அவளது தம்பி காசி அங்கே வந்தான்.

செய்தியறிந்த அப்போதும் அவள் அவரைத் திரும்பியும் பார்க்கவில்லை. அவரது எந்த உணர்வு வெளிப்பாட்டினையும் முற்று மாய் அவள் செய்த உதாசீனத்தின் அடையாளம் அது. பின்னால் வழக்கம்போல தனக்குள்ளே புலம்பினாள். 'வீட்டு ஆம்பிள சரியா இருந்திருந்தா இந்த இடியெல்லாம் ஏன் என்ர தலையில வந்து விழப்போகுது?'

அவர் மௌனமாய் தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தார். அவளின் சீற்றத்தினது நியாயத்தை அவர் புரிந்திருப்பார்போல.

செய்தி கொண்டுவந்த காசி, 'நீ சனிக்கிழமை காலமயே எல்லாம் முடிச்சுக்கொண்டு வாக்கா. போட்ட தையலோட அவன் இப்ப விளையாடிக்கொண்டுதான் திரியுறான்' எனச் சொன்ன போதும், வள்ளிநாயகியால் அடங்கியிருக்க முடியவில்லை. எப்படி யும் மாலைக்குள் வந்துவிடுவதாக அய்யரம்மாவிடம் சொல்லிக் கொண்டு காசியுடன் வீடு புறப்பட்டாள்.

அன்று மாலை அவள் பொழுது சாய்கிற வேளையில் வேர்த்து விறுவிறுத்து அவசர அவசரமாக அய்யர் வீடு வந்தபோது நவநீதம் அங்கே காணப்படவில்லை.

அய்யரம்மா சொன்னது கேட்டு வள்ளிநாயகி திடுக்கிட்டுச் சிலையானாள்.

தனது கட்டளையை மீறி நடக்குமிடத்தில் வெகுண்டு பையைத் தூக்கிக்கொண்டு உடனே வெளியே ஓடும்படி விரட்டுவது தான் பசுபதி அய்யரின் இயல்பு. அன்றைக்கு ஏனோ அவளைப் பார்த்தபடி திண்ணைக் கதிரையில் நிலைகுத்தி அமர்ந்திருந்தார். அவள் இதயமாய் நின்று துடித்துக்கொண்டிருப்பதை அவரால் உணர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்திருக்கவேண்டும்.

பிறகு அவளை கிட்ட வரச்சொன்னார்: 'நீ அழவேண்டாம். வசியத்தின்ர வீறு குறைஞ்சுவாற கடைசிநேரத்தில இப்படித்தான் அது ஒரு மூச்சோட ஆளை வெளிய இழுத்துக்கொண்டு ஓடப் பாக்கும். எண்டாலும் இந்த ஆறு நாளாய் விட்டிருக்கிற காப்பு மந்திரம் கூடஇருக்கு. அது ஆளை திருப்பிக்கொண்டுவர தெண்டிச் சுக்கொண்டுதான் இருக்கும். எதுக்கும் காய்வெட்டுற நேரம்மட்டும் இருந்து பார். நவநீதம் வந்தாலும் வரும்.'

'இனி வேண்டாம், அய்யா' என்றாள் அவள்.

'ஏன்?' அய்யர் ஆச்சரியமாய்க் கேட்டார்.

'கூட்டாளியளால வந்த கெட்ட சகவாசமெண்டு நினச்சுத் தான் இந்தாளை இஞ்ச கூட்டிவந்தன். எல்லாம் நல்லமாதிரி முடி யிறதுக்கு இருக்கேக்க இப்பிடி திரும்பவும் எடுபட்டு ஓடியிருக் கெண்டா, காப்புக் கட்டி வீட்டை கூட்டிக்கொண்டு போனாப் பிறகும் அந்தாள் திரும்ப அவளிட்ட ஓடும்.'

அய்யர் மௌனமாயிருந்தார். பிறகு மனத்துள் என்ன கணக்குத் தீட்டினாரோ, அவளைக் கேட்டார்: 'என்னில உனக்கு நம்பிக்கை இருக்கோ?'

'நம்பித்தான அய்யா, இஞ்ச கூட்டிவந்தனான்.'

'ம். காலடி மண், தலைமயிரை வைச்சுச் செய்யிற இந்தமாதிரி வசியங்களப்பற்றி எனக்குத் தெரியும். அதை அழிக்கிற விதமும் தெரியும். இது வசியம் முழுக்கவுமாய் முறியிற கடைசிநேரம். அது தான் ஆளை இழுத்துக்கொண்டு இப்பிடி ஓடியிருக்கு. எண்டாலும் நவநீதம் தெளியிறதுக்கு ஒரு நொடிப் பொழுதிருக்கு. அதில தெளிஞ் சிட்டா, இண்டைக்கு காய் வெட்டிற நேரத்துக்குள்ள ஆள் திரும்பி வரும். அப்பிடி வராட்டி... காலமை பையை எடுத்துக்கொண்டு நீ போ.'

பசுபதி அய்யர் எழுந்து உள்ளே போய்விட்டார். அய்யரம்மா ஒரு பரிதாபமான பார்வையை அவளில் வீசியபடி அய்யரைப் பின்தொடர்ந்தாள்.

அப்போது கேற் திறபட்ட சத்தம் கேட்டது.

வள்ளிநாயகி திரும்பினாள். நவநீதம் வந்துகொண்டிருந்தார்.

அவளது சிவந்த கண்களைப் பார்த்து சிரிக்கமுயன்றார். 'உன்னையும் காணம்... விசராயிருந்திது... ஒரு சிகரட் பத்தலா மெண்டு வெளிய போனன்... சுத்திவர கடையொண்டயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணேல்லை... அப்பிடியே நடந்து போய்ப் பாத்தா... திரும்பிவாற பாதையை விட்டிட்டன்... தெருவிலயும் ஒருதர் அம்பிடேல்ல... அப்பிடியே அலைஞ்சு அலைஞ்சு...'

அவரையே பார்த்தபடி நின்றிருந்தாள் வள்ளிநாயகி. நம்பினாளோ இல்லையோ, ஒன்றும் பேசவில்லை.

வெள்ளிக்கிழமை காய்வெட்டி செய்யவேண்டிய இறுதி வசிய முறிப்புக் காரியங்களை முடித்து நவநீதத்தை அவள் வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

1985க்குமேல் அவர்கள் நாட்டிலிருக்கவில்லை.

வள்ளிநாயகி எல்லாவற்றையும் மறந்துவிட்டாளென்றே அவர் அத்தனை காலமாய் நினைத்திருந்தார். அதற்கு மேலே மூன்றாவது பிள்ளையின் பிறப்பு அதையே உறுதிசெய்தது. ஜேர்மனி சென்ற பிறகு குடும்பச் செழிப்புக்கான அவளது உழைப்பின் பங்களிப்பு அதை மேலும் வலுப்படுத்தியது. அதன் பிரத்தியட்சம்தானே அன்றைக்கு அவர் காணும் குடும்ப ஸ்திதி, வளமான அந்த வாழ்க்கை எல்லாமும்.

ஆனால் இப்போது அவருக்குள் சந்தேகம் முளைத்திருக்கிறது. அவள் அவரை மன்னித்திருக்கலாம், ஆனால் எதையும் மறந்திருக்கவில்லை. அந்த இடம் பழைய ஞாபகங்களை அவளில் கிளறிவிட்டிருக்க நிறைந்த வாய்ப்பு இருக்கிறது. அந்த நினைப்பில் எந்த மனைவியும்தான் அவ்வாறான மனவுளைச்சலில் தப்பிவிட முடியாது.

தலையை நிமிர்த்தி மனைவியிடம், 'என்ன, நித்திரையோ?' என்றார் அனுங்கும் குரலில்.

அவள் திரும்பாமலே அசைந்தாள். பிறகு, 'இல்லை. சும்மாதான் கிடக்கிறன்' என்றாள்.

'வேற ஒண்டுமில்லையே?'

'வேறயென்ன கிடக்கு?' அவள் திரும்பினாள். 'அந்தச் செம்மணிச் சுடலைக்குள்ளதான அந்தளவு சனங்களையும் சாக்கொண்டு ஆமிக்காறன் புதைச்சு வைச்சான்? அதைத்தான் யோசிச்சுக்கொண்டு கிடந்தன்.'

'ஓ... அதுவோ...?' தான் அவசரப்பட்டு வேறு சாத்தியங்களை எண்ணிவிட்டதான கலக்கம் அவர் தெளிந்தார். 'அதில ஒரு கொலையில சம்பந்தப்பட்ட ஆறு ஆமிப் பொலிசுக்கு தூக்குத் தண்டனையெல்லே கிடைச்சது, தெரியுமோ உனக்கு? கிரிஷாந்தியெண்ட அந்தப் பள்ளிக்குடப் பெட்டை...' என கட்டிலில் எழுந்திருந்து அவர் கதை சொல்லத் தொடங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளிநாயகி கேட்டுக்கொண்டு கிடந்தாள். எத்தனை இரவுகளில் அவள் தூக்கம் இடறுப்பட்டாள்! எத்தனை கனவுகளில் அவளது மெல்லிய சிவந்த உடம்பின் வைரித்த, அழகு ஆளுமைகளை அர்த்தமற்றதாக்கிய பளபள பாம்புகள் மகுடியின்றி ஆடிப்போயின! அவள் அவரை மன்னித்திருந்தாலும் மறக்கவில்லை என்பதன் அடையாளங்களல்லவா அவை?

பழைய சம்பவங்களின் வெம்மை இன்னும் அவளுள் கனன்றுகொண்டிருந்தது. ஆயினும் அந்தக் குடும்பத்தின் நன்மை கருதி அப்பொழுதும் அக்கனலை உள்ளே அடக்கிக்கொண்டாள்.

நவநீதம் கதை சொல்லிக்கொண்டிருந்தார்.

ஞானம்,
மார்ச் 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுத் தரிப்பு

காலம் தன் தடங்களை இரண்டு தடவைகள் மீள மீள என் நினைவில் பதித்துச் சென்ற இடம் இதுதான். தேச வரைபடத்தில் அதனாலேயே இந்த இடம் பெரும் வரலாற்று முக்கியவத்துவம் கொள்கிறதெனச் சொல்ல மாட்டேன். ஆனால் இங்கே தகர்ந்திருப்பது என் வாழ்வின் இறுதி நம்பிக்கையாக இருக்கிறவகையில், இது என்னளவில் பெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறதுதான்.

இதே இடத்தில்தான் சமாதானம் நிலவிய அந்த 2003ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் நீண்டகாலத்தின் பின் ஒருநாள் அவளைச் சந்தித்தேன். அப்போது அவளுடைய அகன்ற நெற்றியிலே குங்குமப் பொட்டு இருந்திருந்தது. சுரிதாரின் துப்பட்டா மறைத்திருந்த கழுத்தில் 'கொடி'யும் இருந்திருக்கலாம். அதற்கு மேல் அவளது இடது கை விரலின் மோதிரம் குறித்து என் கவனம் படரவில்லை.

வெள்ளவத்தை மார்க்கட்டுக்கு நேர் எதிர்ப் புறத்தில், திரும்பித் திரும்பிச் சென்று கடற்கரையை அடைந்த தெரு அது. அதன் மூலையிலிருந்த செருப்புக் கடையை நான் தாண்டிச் சென்ற வேளையில், 'கேக்கேல்லப்போல' என்றபடி விரைந்து பின்னால் வந்த தொனியில் அவசரமாய்த் திரும்பினேன். எதிரில் வந்து சிரித்தபடி நின்றிருந்தாள் அவள்.

அவளை எனக்கு ஞாபகமிருந்தது. பள்ளியில் இரண்டு மூன்று வகுப்புகள் கீழே படித்தவள். அந்தக் காலத்தில் கவனத்தை ஈர்க்கும் எந்த அறிவார்த்த,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவார்த்த அம்சங் களும் அவளிடத்தில் இருந்திருக்கவில்லை. ஆனால் அன்றைக்கு அவள் மிக அழகானவளாய்த் தோன்றினாள். அதுவரை என் மனம் உணர்ந்திராத ஓர் உணர்வு வலயத்தை காலம் கனக்கக் கடந்திருந்த அக் காலத்திலும் மெல்லிய மயிலிறகால் வருடுவதுபோன்ற சுகத்தைச் செய்தது. ஓர் இழப்பின் பெருந் துக்கமும் மனத்தில் படர்ந்தது. பள்ளி போய்வரும் வழியில் எதிர்ப்படும்போதெல்லாம் விருப்பமான பார்வைகளில் அவள் விட்டிருந்த தூதுகளை ஒழுகலாற்றுக் கரிசனத் தோடு எவ்வளவு உதாசீனம் செய்திருக்கிறேன் நான்!

'கூப்பிட்டது காதில விழேல்ல.' மன ஆழ்ச்சியின் முக விறுக்கம் தளர்த்தி மெதுவாய்ச் சொன்னேன். மேலும் உரையாடலுக்கு ஊடு விடும்வகையில், 'இப்ப எங்க...கொழும்பிலயோ இருக்கிறியள்?' என்றேன்.

'ஓம், இஞ்ச... வெள்ளவத்தையிலதான். ஹம்டன் லேனில.'

'என்ன செய்யிறியள்?'

'செய்யிறதென்னத்தை, சும்மாதான் இருக்கிறன்.'

'அவர்...?'

'றட்மலானயில. ரீச்சிங் பண்ணுறார். நீங்கள் இப்ப எங்க...?'

'நோர்வேயில.'

'குடும்பமாயோ?'

ஓர் வெறுமையின் அலைத் திரட்சி உள்ளத்தில் திகைந்தெழுந்தது. அடக்கிக்கொண்டு, 'ஓ... எல்லாரும் அங்கதான்' என்றேன்.

'ஊர்ப்பக்கம் போகேல்லயோ?'

'வந்தது அதுக்குத்தான? கொழும்பில கொஞ்ச வேலையிருக்கு. முடிச்சிட்டு வெளிக்கிடுவன்.'

'இனி எப்ப பயணம்?'

'கொஞ்சநாள் நிண்டுதான் போவன்.'

'வீட்டுப் பக்கம் ஒருக்கா வாருங்கோவன். நம்பர் 16, ஹம்டன் லேன்.'

'16 ஹம்டன் லேன்தான? நேரமிருக்கேக்க கட்டாயம் வாறன்.'

ஊர் போய்வந்து கொழும்பில் நின்றிருந்த பொழுதில் அவளது வீட்டுக்குப் போனேன். ஆறேழு வயதில் ஒரு பையனும், அவனுக்கு ஏறக்குறைய இரண்டிரண்டு வயது குறைந்த இரண்டு பெண்பிள்ளைகளும், தாயாரும் கூடவிருந்தனர். ஒரே பள்ளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்ததாய்ச் சொல்லியபோதிலும் தாயின் பார்வையில் கொஞ்சமும் வரவேற்பிருக்கவில்லை. வீட்டுக்கு வரக்கூடியவளவான ஒரு பழக்கம், பள்ளிச் சிநேகிதத்திலிருந்து தொடர்வதாய்க் கூறுவதை ஏற்றுக் கொள்ள, அவற்றிற்கிடையிலான காலஇடைவெளி தடுத்தது போலும். அவள் கண்களிலும் எதனாலோ ஒரு பதற்றமும், அச்சமும் மெல்ல இறங்கத் துவங்கியிருந்தன. அது என்னை இடைஞ்சல் செய்தது.

ஒரு மேசை, அதன்மேல் ஒரு 18 இஞ்சி ரீவி, மூன்று கதிரைகள், ஒரு பழைய நீளமான சோபா, ஒரு அலுமாரி, அதிலொரு சின்ன அலார மணிக்கூடு மட்டுமாயிருந்த அந்தக் கூடத்தில் அவளது அச்சமும் பதற்றமும் எதன்மேலானதாய் இருக்கக்கூடுமென நான் கேலியோடு எண்ணினேன். ஒருவேளை உயிர்த் துடிப்புடனிருந்த மூன்று பிள்ளைகளின் தாயான அவளது மகள்தான் காரணமோ?

அது தெரிந்த பொழுதில் எனக்குச் சிரிப்பு வந்தது. ஆனாலும் அவளது எந்த அபிப்பிராயமும், மனநிலையும் அங்கே எதுவித செல்வாக்கும் பெற்றிருக்கவில்லையென்பதை சிறிதுநேரத்திலேயே உணர்ந்து கொண்ட எனக்கு, அவளது அச்சம் பதற்றம் இரண்டையும் சற்று உசுப்பிப்பார்க்கிற ஒரு குரூர மனநிலை உருவாகியது. அவளுட னான எனது பேச்சு பார்வை அணுக்கங்கள் நெருக்கமடைந்தன. அது, அதைவிட அந்நியோன்யத்தில்

முன்பேயும் இருந்திருந்ததுபோன்ற உணர்வினை தாயாருக்கு அளிப்பதிலிருந்து தவறியிருக்க முடியாது.

தன் தாயாரின் மனநிலையை அவளும் தெரிந்துகொண்டாள் போலவே தோன்றினாள். மட்டுமில்லை. அவளது அன்னியோன்ய மும் அதன் ஆகக்கூடிய எல்லையை நெருங்கிற்று.

அவளது தாயின் மனநிலைக்கான எதிர்வினையாக அதை நான் எண்ணிக்கொண்டாலும், பள்ளிக்கால இழப்பின் வலியை ஈடு செய்யும் கள்ளச் சுகத்தையும் அதில் அடைந்து கொள்வதை உணர்ந்தேன்.

சுவரில் அவர்களது திருமண அல்லது குடும்ப போட்டோ எதுவும் இல்லாதிருந்ததை ஏற்கனவே நான் அவதானமாகி யிருந்தேன். எனினும் தயக்கமாகவே கேட்டேன்: 'அவர்... வர நேரமாகுமோ?'

'அவர் றட்மலானயில. அதுதான் அண்டைக்குச் சொன்னனே.'

அவர் பற்றி தான் மேலும் பேசத் தயாரில்லை, அவர் சார்ந்த எந்தக் கேள்வியும் தனக்கு விருப்பமில்லையென்ற அத்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தங்களையும் அவளது பதில் கொண்டிருந்ததை நான் புரிந்தேன்.

எனது வசதிக்கேற்ப எவ்வாறும், அவர் தற்காலிகமானதோ அல்லது நிரந்தரமானதோ ஒரு பிரிவில் இருப்பதாக, நான் கற்பனை செய்துகொள்ள அவள் தந்திருக்கிற இடைவெளி அது. எவ்வாறான ஊகம் எனக்கு வசதியானதென்பதை நானே தீர்மானித்துக் கொள்ளலாம். ஆனால் எந்தத் தீர்மானத்திலும் வசதியைக் கொள்வது எனக்கு அவ்வளவு சுலபமாக இருக்காது. என் அப்போதைய அவளுடனான ஊடாட்டம், ஓர் இழப்பின் வலிநிவாரணியானது மட்டுமே.

தாய் வந்து கூடத்து லைற்றைப் போட்டதோடு நானும் நேரப் பிரக்ஞைகொண்டு புறப்படத் தயாரானேன்.

'பேச்சுப் பிராக்கில மறந்திட்டன். கொழும்பில எங்க தங்கி நிக்கிறியள்?'

'சிஸ்ரரின்ர வீட்டில. அவ இஞ்ச... கொட்டஹேனாவில தான் இருக்கிறா.'

'ஓ...!'

இரண்டாவது தடவை என் நினைவின் தடத்தை அந்த இடத்தில் பதித்த சம்பவம் இறுதி யுத்தத்தின் மூன்று ஆண்டுகளின் பின் சம்பவித்தது.

ஏறக்குறைய முந்திய இடத்திலேதான் அன்றும் எதிரெதிரே சந்தித்துக்கொண்டோம். ஆனால் என் அடிமனதின் ஆழத்தில் அவள் நினைப்பு ஒரு புகைமண்டலத்தின் படர்வுபோல நான் இலங்கை வரப் புறப்பட்ட நிமிஷத்திலிருந்தே என்னில் தொற்றிக்கொண்டு இருந்தது.

அப்போது நான் எதிர்கொண்ட அவளது கோலம் என்னை அதிரவைத்தது. அந்த அகன்ற நெற்றியில் குங்குமம் இருந்திருக்க வில்லை. கரும் சாந்துப் பொட்டு இட்டிருந்தாள். சேலை அணிந் திருந்ததால் மறைவின்றிக் கிடந்த கழுத்துப் புறத்தில் ஒரு மெல்லிய தங்கச் சங்கிலிமட்டுமிருப்பது தெரிந்தது. கைவிரலில் நீல பச்சை சிவப்பு நிறக் கற்கள் பதித்த ஒரு வெள்ளி அதிர்ஷ்ட மோதிரம்.

அவள் கலகலப்பாகவே பேசினாள். முந்திய சந்தர்ப்பத்தில் போல் முன்னே பின்னே எழுந்த யாழ்ப்பாணப் பேச்சுகளுக்குக் காட்டிய உஷார்த்தனத்தை அப்போது அவள் பட்டுக்கொள்ள வில்லை. எதுவும் அவதானத்தின் அவசியமற்றதுபோல் கொஞ்சம் நெருங்கியே நின்று, தலையைச் சாய்த்தபடி கண்களை மேலெறிந்து என்னைப் பார்த்துப் பேசினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது என்னை பத்து வருஷங்களுக்குப் முன்னே இழுத்துச் சென்றது. ஒருவேளை... பத்து வருஷங்களுக்கு முன்னால் நோர்வேயி லிருந்த சுப்பிரமணியம் தன் மகள் இந்திராணிக்கு வரன் தேடிவந்து சென்னையில் என் மாமாவைக் கண்டிருக்காவிட்டால், உள்ளம் கரிசனமற்ற ஒரு குடும்ப வாழ்க்கையை அத்தனை காலம் நான் வாழ்ந்து களைத்திருக்கத் தேவை இருந்திராதென்று தோன்றியது. அந்த வெளியை நான் அதிகமாய் அப்போது இச்சித்தேன்.

என் சிந்தனையைக் கலைத்து வீட்டுக்கு சாப்பிட அழைத் தாள். நானும் இன்னொரு நாள் பார்க்கலாமென்று சொல்லி ஒருநாள் சென்றேன். வீட்டில் தாயார் மட்டுமே இருந்தாள். பிள்ளைகள் எங்கே யென இயல்பாகக் கேட்டேன். அவளும் இயல்பாகவே, 'தேப் பனோட' என்றாள். நான் புதிர்கொள்வது தெரிந்து, 'றட்மலானயில தான்' என்றாள் மேலே.

நான் கேட்க எதுவுமிருக்கவில்லை. அவர் அப்போது அங்கே இல்லை, அவர் அங்கே எப்போதும் இருக்கமாட்டார் என்பதைத் தானே அவள் சொல்லியிருக்கிறாள்!

ஒருநாள் மதிய உணவுக்கும், இன்னொரு நாள் இரவுணவுக்கும் அவள் அழைத்து போனேன். அதே மேசையும் அந்த 18 இஞ்சி ரீவியும், அதே மூன்று கதிரைகளும் நீண்ட சோபாவும், அதே அலுமாரியும் அதன்மேல் அதே அலார கடிகாரமுமாக கூடமிருந்து வாழ்நிலை மாற்றத்தின் எந்த அசைவையும் காட்டியிராதபோதும், எனக்கான உணவை மிகச் திறமாகச் செய்திருந்தாள். சுவிஸிலுள்ள தனது தம்பி, அப்போது கரிசனை கொண்டுள்ளதை தன் சிரமமின்மையின் காரணமாகச் சொன்னாள். அவளது குழந்தைகள் தகப்பனோடு போய்ச் சேர்ந்த பின்னால் அந்த உதவி ஏன் கிடைக்கவேண்டுமென மனத்துள் சுழித்து ஒரு வினா எழுந்தது. அதற்குப் பின்னால் ஏதாவது சமூக நிலைமைகள் காரணமாக இருக்கக்கூடுமென நான் எண்ணினேன்.

அவளது தாயின் பார்வையில் முன்பிருந்த பதற்றமும் அச்சமும் தணிந்து போயிருந்தன. இரவுச் சாப்பாட்டிற்குச் சென்ற வேளையில்கூட லேசாகச் சிரித்து என் வரவை அனுசரிக்கச் செய்திருந்தாள்.

எல்லாப் பேச்சுக்களுக்கும் இடையிடையிட்ட மௌன வெளிகளில் இன்னும் தனது தலை சாய்த்து கண் நிமிர்த்திப் பார்க்கும் அவளின் அந்த வசீகரம் இருந்துகொண்டே இருந்தது. அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளக்கத்தில் நான் எவ்வளவற்றை எடுத்துக்கொள்ள முடியும்? ஆனால் அதை ரசிப்பது தவிர்ந்து வேறெதுவும் செய்வதற்கு எனக்குள் வெளி இருக்கவில்லை.

அவளோ சளைக்கவில்லை. ஒரு நம்பிக்கையோடுபோல் முந்திய அதே பள்ளிக்கூடப் பார்வையை வீசிக்கொண்டே இருந்தாள்.

காலம் மீண்டும் என் குடும்ப ஸ்திரத்திற்கு எந்த ஊறு மில்லாமல் என்னை நோர்வேக்கு அனுப்பிவைத்தது.

ஆனால் நான் நோர்வே சென்றபோது வீடு தாங்கமுடியாத ஒரு கொதிநிலையில் இருந்துகொண்டு இருந்தது. நான் சொல்லிச் சென்ற லீவு காலத்துக்கு அதிகமாக ஒரு வாரம் தங்கிவிட்டதிலும், தந்திருந்த அனுமதிக்கு மேலாக கடனட்டையிலிருந்து பணம் எடுத்துக்கொண்டதிலும் ஒரு பூகம்பமாய் உருமாறியிருந்தாள் இந்திராணி. அந்தக் காலத்திலும் பணத்திலும் நான் என்ன செய்தேனென்பதல்ல, அவற்றைத் தன்னிடம் முன்கூட்டியே ஏன் நான் கேட்கவில்லை என்பதே அவளது கோபத்தின் காரணமாய் இருந்தது. அவளது மனநிலை அப்படி.

தான் என்னைத் திருமணம் செய்து, என்னை நோர்வேக்கு வரவைத்தவள்; அதன்மூலம் எனது தாய்தந்தையரை தம்பியை நான் இங்கே கூப்பிடக் காரணமானவள்; வேலை, வீடு, கார், இரண்டு பிள்ளைகளென இப்போதுள்ள எனது வாழ்வு அவள் எனக்குத் தந்த பேறுகள்.

அதை அவள் எப்போதும் வார்த்தைகளில் சொல்வதில்லை. கண்களால் சொல்வாள். ஒரு துச்சம் தொடர்ந்து அக் கண்களில் பளிச்சிட்டுக்கொண்டிருக்கும். அவை மிகுந்த சாமர்த்தியமுடைய கண்களும். துளி அர்த்தம் பிசகாமல் தம் கருத்தைப் புலப்படுத்திவிடக் கூடியவை.

அன்றைக்கு வழக்கத்தில் இல்லாமல் இரண்டு மூன்று வார்த்தைகளை சொற்களில் உச்சரித்தாள். அவை ஆணாகிய என்னை ஒன்றுமில்லையென ஆக்கிய கணங்கள்.

சேதமெதுவும் ஏற்பட்டுவிடக்கூடாதென நான் மௌனத்தில் காத்து வந்த கோட்டை என் கண் முன்னால் சிதறியது.

தலையைச் சாய்த்து, கண் நிமிர்த்தி குறும்புடன் பார்க்கும் அந்தச் சொரூபம் அடிக்கடி நெஞ்சில் தோன்ற ஆரம்பித்தது. அந்த இரண்டாவது சந்தர்ப்பத்திலாவது அவளை நான் தவற விட்டிருக்கக் கூடாதென்று துக்கம் துக்கமாய் வந்தது. அப்போது, ஐயோவென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிப்போய் என் குடும்ப வாழ்க்கை சிதறிய சோகத்தை தலையைச் சாய்ந்துகொண்டு ஓலமிட எனக்கொரு மடி இருந்திருக்குமல்லவா?

அவசரமாகப் புறப்பட்டு நான் இலங்கை வந்தேன். அவளது வீட்டுக்கு ஓடினேன். அங்கே அவளில்லை. அக்கம் பக்க வீடுகள், அவள் சென்ற திசை சொல்லுமளவுகூட தகவலேதும் கொண்டிருக்க வில்லை.

அடிக்கடி இலங்கை வருகிறேன். அந்த வெள்ளவத்தை மார்க்கெட் முன்னாலுள்ள சந்து முனையில் தேடிக்கொண்டு திரிகிறேன். கடந்த இரு தடவைகளின் நினைவுத் தடங்களே ஒவ்வொரு பொழுதிலும் என்னில் இடறிக்கொண்டு இருக்கின்றன.

ஞானம்,
செப். 2019

0 3 MAR 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புக் கமம்

பாம்புக் கமத்தில் ஒரு வாரம் தங்கிவரலா மென்று சொல்லி நண்பன் கமலநாதன் என்னை அழைத்தபோது விருப்பமில்லாவிட்டாலும் எனக்கு மறுக்க முடிய வில்லை. அவசரமான எழுத்து வேலை கள் இருக் கின்றன என்று சறுக்க முயன்றபோது அங்கேயே வந்திருந்து எழுதென்றுவிட்டான்.

மேட்டு நில அந்த வயல் வீட்டிற்கு நாங்கள் ஒரு மதியத்தில் வந்துசேர்ந்தோம். பத்தாண்டுகளுக்கு உட்பட்டதானாலும் வீடு நீண்டகாலம் புழக்கமற்றுக் கிடந்ததில் ஒரு இருண்மையில் கிடந்திருந்ததாய்ப் பட்டது. பாம்புக் கமமென்ற பெயரும், அப்போதைய அதன் இருண்மையும் மனத்துள் எனக்கு சௌகரியத்தை விளைக்கவில்லை. அந்த இடத்தை ஏன் பாம்புக் கமம் என்கிறார்களென கமலநாதனிடம் கேட்டபோது தெரியாதென்றுவிட்டான்.

அதுபற்றி மேலே எதுவும் யோசிக்காவிட்டா லும், இருளத் தொடங்குகிற வேளையில் பாம்புக் கம நினைவு எழுந்தது.

அதுமாதிரியான வயற் பிரதேசங்களோடு அதிகம் தொடர்பற்ற எனக்கு, அந்தப் பெயரிலிருந்து எழுந்த கற்பிதங்கள் நூறு நூறாக என் மனத்துக்குள்ளே பாம்புகளை நெளியவைத்துவிட்டன.

அதனால் பாம்புக் கமமென்ற பெயர்க் காரணத்தை அப்போதே அறிந்துவிடும் தவிப்பு எனக்குள். அதற்காக றோட்டிலே போகிற ஒருவரிடம் ஓடிப்போய் இதைப்பற்றி நான் கேட்டுவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வாரம் வீட்டிலே நின்று சமைத்துத் தருவதற்காக கமலநாதனின் தூரத்து உறவுக்கார மனுஷியொன்று மறுநாள் காலை பத்து மணியளவில் வருவதாயிருந்தது. அவளிடம் கண்டிப்பாகக் கேட்பதென்று தீர்மானித்துக்கொண்டேன்.

அந்த மனுஷி சொன்ன நேரத்துக்கு தாமதமாகவே வந்திருந் தாலும் வந்தவுடன் விறுவிறுவென காரியங்களைப் பார்க்கத் தொடங்கிவிட்டது. அந்த வேகத்தில் அவளைக் குறுக்கிட முடியா தென தெரிந்த நான், சமையல் முடிக்கிற அளவில் சமையலறைக்குள் வந்து மெதுவாக என் ஐயத்தைக் கேட்டேன்.

அவள் புருவங்களை நிமிர்த்தி என்னை ஓர் ஏறுபார்வை பார்த்தாள். அப்போது அவள் தன்னின் பாதி வயது குறைந்தாள். நான் கமலநாதன் தெரிந்துவிடாதபடி ரகசியமாக அணுகியதற்கும், ஒரு சந்தர்ப்பத்திற்குப் போல் காத்திருந்ததற்கும் காரணம் அதுவாவென்ற இளக்காரப் பார்வைதான் அது. ஆனால் பதிலின் அவசியம் என் கவனத்தை அதில் சிதறவிடவில்லை. 'சொல்லு, எதாவது உனக்கு இதைப்பற்றித் தெரியுமோ?'

அவள் கையலுவலில் கவனமாகியபடியே சொன்னாள்: 'நானறிஞ்சு எல்லாரும் பாம்புக் கமமெண்டு தான் இந்த இடத்தைச் சொல்லுகினம். சின்ன வயசில இந்தப் பக்கத்தால போய்வரேக்க பாத்திருக்கிறன். எல்லைப் பக்கமெல்லாம் புதரா இருக்கும். இடை யிடை நாலைஞ்சு பாலை மரம் நிண்டிது. எல்லா மரத்தோடயும் புத்துகள் சுத்தி எழும்பியிருந்திது. மேட்டுப் பக்கத்தில ஒரு காட்டுமா... தள்ளி ஒரு பாலை... அந்தப் பாலையோட இருந்தது தான் பெரிய புத்து. அந்த ரண்டு மரத்துக்கிடையில மேல தகரம் போட்ட ஒரு சின்னக் கோயில் இருந்திது. அந்தக் கோயில்ல ஒரு சாமியாரை அடிக்கடி பாத்திருக்கிறன். அங்கயே தங்கிக்கொண்டு அப்பப்ப எங்கனயும் போட்டு வாற ஆள்போலத்தான் கிடந்திது.'

'அந்தக் கோயிலுக்கு என்ன ஆச்சு? சாமியார் எங்க போனார்?'

'என்னைக் கேட்டு வில்லங்கப் படுத்தாதயுங்கோ. சொன்னா, பயப்பிடுவியள். ஒரு கிழமை நிக்க வந்திருக்கிறியள். பேசாம வந்த அலுவலை முடிச்சுக்கொண்டு வீட்டை போற வழியைப் பாருங்கோ' என்றபடி முந்தானையை இழுத்து முகத்தை அழுந்தித் துடைத்தாள். பின் முகத்தில் காற்று விழ விசிறியபடி வெளியே சென்றாள்.

'நான் பயப்பிடமாட்டன். நீ சொல்லு' என்றபடி நான் வெளியே வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்றடியில் ஓட்டோ ஒன்று நின்றிருந்தது. கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்த கமலநாதன் வந்து வெளிக்கிட்டுக்கொண்டு தன்னை ஒரு உறவினர் அவசரமாய் சந்திக்க வரச் சொன்னதாய்ச் சொல்லி விட்டு ஓட்டோவில் ஏறிப் போனான்.

வெளியே சென்ற லீலாவதி வீட்டின் கிணற்றடிப் பக்க கதவுக் கூடாக உள்ளே வந்திருக்கவேண்டும். நான் மறுபடி உள்ளே வந்த போது அவளைச் சமையலறையில் திடீரெனக் கண்டு கொஞ்சம் திடுக் கிட்டுப் போனேன். பாம்புக் கமம்பற்றிய நினைப்பில் எத்தகைய வொரு சடுதியான தோற்றமும் சத்தமும் என்னைத் திடுக்கிடுத்துவதை அப்போது நான் உணர்ந்தேன்.

மறுபடி அவளிடம் சென்றேன். அவள் சிறிது கவனமிழந்த தருணமாய் இருந்திருக்கவேண்டும். அடுப்பிலிருந்து கறிச் சட்டியை இறக்கிவைக்க சரிந்தபோது, வாயுள் அதக்கியிருந்த வெற்றிலையை மீறி அவள் மூச்சில் சாராய வாசம் அடித்தது. அவளது முகமும் அதுவரையிருந்த இறுக்கத்தை இழந்திருந்தது. இனி அவளாகவே தெரிந்த கதை சொல்லுவாளென்ற நம்பிக்கை எனக்கு வந்தது.

என் நினைப்பு பிழைக்கவில்லை. நான் கூடத்துள் வந்தமர, 'கமலநாதன் தம்பி இப்ப வந்திடுமா?' என்றபடி கிட்ட வந்தாள் லீலாவதி.

'நான் கதையைச் சொல் எண்டிறன்; நீ அவனைக் கேக்கிறாய்.' என் குரலில் திட்டமாய்ச் சிறிது எரிச்சலைக் காட்டினேன்.

அவள் என்னெதிரே சுவரோடு சாய்ந்து குந்தினாள். அவன் இல்லாதிருந்தபோதும், எங்கே பலமாகச் சொன்னால் அவனுக்குக் கேட்டுவிடுமோ என்று பயந்ததுபோல் மெதுவாகச் சொன்னாள்: 'நீங்கள் இதை அந்தத் தம்பியிட்ட கேக்காம இருந்திருக்க மாட்டியள். அது சொல்லாம இருக்கேக்க நான் என்னெண்டு அந்தக் கதையைச் சொல்லேலும்?'

நான் அவளைப் பார்த்தபடியே பேசாமலிருந்தேன். கதை நான் எண்ணியதுபோல் சாதாரணமான தில்லையென அந்த மௌனங் களும், பதில் சொல்ல இழுத்தடிக்கும் காலத்தின் நீட்சியும் எனக்குத் தெரிவித்தன.

சிறிதுநேரத்தில் எழுந்து வெளியே சென்றாள். முற்றத்தி னோரம் வெற்றிலை துப்பியது கேட்டது. பின் திரும்பிவந்து மௌனமாய் மறுபடி வெற்றிலை போட்டாள். அவள் கதை சொல்ல ஆரம்பிக்கிறாளென்பதை நான் புரிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘அப்ப கனக்க கனக்க பாம்புகள் இருந்திதுகள் இஞ்ச. நானே கண்டிருக்கிறன். எல்லையோரமாய் மரங்களிலயும், மரங்களுக்கு கீழயும், புதர்களுக்கயும்... சுத்தினபடியும் பிணைஞ்சபடியும் கிடக்குங்கள். றோட்டிலயும் கண்டபடி ஊர்ந்துகொண்டு இருக்குங் கள். ராத்திரியில அறிஞ்ச தெரிஞ்ச மனிசர் ஆரும் இந்தப் பக்கம் வரமாட்டினம். அந்தளவு பாம்புகளும் விளைஞ்ச இடம் பாம்புக் கமம்தான். அதாலதான் இதுக்கு பாம்புக் கமமெண்டு பேர் வந்திது. கமலநாதன் தம்பிக்கு இந்தக் கதையெல்லாம் தெரிஞ்சிருக்குமெண்டு நான் நினைக்கேல்ல. அது படிச்சதெல்லாம் ரவுணிலதான். இருந்ததும் அங்க தாய் தேப்பனோட. பின்னால அங்கயிருந்தே வெளிநாட்டுக் கும் போட்டுது. கன காலத்துக்குப் பிறகு இப்பதான் நானே அதைப் பாக்கிறன்.’

‘பாம்புகள் கனக்க இருந்ததால பாம்புக் கமமெண்டு பேர் வந்தது சரிதான். நானும் கிட்டமுட்ட அப்பிடித்தான் நினைச்சன். ஆனா அதைச் சொல்லுறதுக்கு நீ தயங்கினதுதான் எனக்குப் புதினமாய் இருந்திது.’

‘காரணமிருக்கு. ஆனா அது கமலநாதன் தம்பியின்ர பரம்பரையோட சம்பந்தப்பட்டிருக்கு. அந்தக் குடும்பத்துக்குமேல இப்பவும் ஒரு பொல்லாப்பு இஞ்ச... இந்த கமப் பகுதியில... இருக்கு. அதைத் தெரிஞ்சவையும் இப்ப கனக்கப் பேர் இல்லை. தெரிஞ்சவை யும் அதைப் பெரிசா எடுத்துக்கொள்ளேல்லப்போல. அதுகளுக்கே ஆயிரம் பிரச்சினை இருக்கு.’

என்னுள் இன்னும் கொஞ்சம் புதிர்... இன்னும் கொஞ்சம் திகைப்பு... இன்னும் கொஞ்சம் பயமென அதிகரித்துக்கொண்டு இருந்தது.

நெடுநேரத்தின் பின் லீலாவதி லைற்றைப் போட்டாள்.

நான் இன்னும் அந்த இறுக்கங்கள் தளராதிருந்தபடி எதிரே றோட்டைப் பார்த்தேன். றோட்டு இருண்டு கிடந்தது. வெளிச்சத்தை விசிறியபடி ஒரு வேன் போனது. சில சைக்கிள்கள் கடகடத்தபடி சென்றன. சில மனிதர்கள் அவசர அவசரமாய் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். பார்வை விரிந்த இடமெங்கும் நெல்வயல் களாயிருந்த அந்தப் பிரதேசத்தில் இறுதியாக இருட்டு விழுந்தது.

அப்போது கேற்றடியில் வந்து நின்ற ஓட்டோவிலிருந்து கமல நாதன் இறங்கிவந்தான்.

இரவுச் சாப்பாடெல்லாம் முடிந்த பின் படுக்கப் போகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கமலநாதன் கேட்டான்: 'ரண்டொரு நாளைக்குள்ள கதை அனுப்ப வேணுமெண்டாய். எதாவது யோசிச்சியோ... எழுதினியோ... என்னமாதிரி?'

'புதிசா ஒண்டும் வரேல்லை. பாம்புக் கதையொண்டு மனசில இருக்கு. அதைத்தான் நாளைக்கு எழுதிப் பாக்கப்போறன்.'

'பாம்புக் கதையோ? எங்க மேலால சொல்லு பாப்பம், நான் சொல்லுறன் கதை எப்பிடி வருமெண்டு.'

பாண்டவர்களுக்கு அளிக்கப்பட்ட பூமியான இந்திரப் பிரஸ்தத்தின் பெரும் பகுதி ஆரம்பத்தில் அடர் வனமாகத்தான் இருந்தது. அதன் பெயராக காண்டாவனம் இருந்ததை மகாபாரதம் கூறுகிறது. விலங்குகளும் பறவைகளும் புற்று ஜந்துகளும் கொண்டிருந்த சரண பூமி அது. அதை ஒருநாள் களிபொங்கிய அர்ச்சுனனும் கிருஷ்ணனும் ஒரு மூர்க்கத்தில்போல் தீக்கணைகளை எறிந்து எறிந்து சாம்பராக்கினார்கள். காற்றின் வளமறிந்து எய்த தீக்கணைகளால் எழுந்த பெருந்தீ அதைச் சரணாலயமாக்கியிருந்த அனைத்துயிரையுமே குடித்து விடாய் தீர்த்தது. தப்பியோடிய சொற்ப உயிர்களில் ஐந்து சாரங்கக் குஞ்சுகளோடு நாகராஜனும் அடங்கியிருந்தான். அடர் வனத் தீயிலிருந்து தப்பிய நாகராஜனான தட்சகன் தன் மனத்துள் எழுப்பினான் பழி எனும் பெருந்தீ.

பாண்டவர்களின் பிரஸ்தானம் முடிந்து நீண்ட காலத்தின் பின் குரு குலத்தின் ஐம்பத்தோராவது மன்னனாக அரசேறுகிறான் பரீட்சித்து. காண்டவ தகனத்தால் தன்னுள் எழுப்பியிருந்த தீயை தருணம் அமைந்திருந்த ஒருவேளையில் விஷமாய் அவனுள் பாய்ச்சுகிறான் தட்சகன். பரீட்சித்து இறந்துபோகிறான்.

பழி நிறைவேற்றியாயிற்று.

ஆனால் பழியின் நீட்சி அத்தோடு முடிந்துவிடவில்லை. குருகுலத்து அடுத்த வாரிசான பரீட்சித்தின் மகன் ஜனமேஜயன் தன் பதின்மூன்றாவது வயதில் அரசு கட்டிலேறுகிறபோது, அவன் போரிட எதிரிகளே இருக்கவில்லை. ஆனால் அவனுள் ஒரு தீ மூண்டிருந்தது. தந்தை பரீட்சித்து ராஜாவுக்கான பழி வாங்குகை அது. அதற்கு சர்ப்ப சத்ரா வேள்ளி நடத்தும்படி அவனை உத்தங்கர் தூண்ட ஜனமேஜயன் வேள்வி தொடக்குகிறான்.

எண் திசையும் பரக்கிறது வேதவொலி. ஆயிரமாயிரமாய் சர்ப்பங்கள் ஆகுதியாய் ஓம குண்டத்தில் பலியாகின்றன. ஆனால் ஆஸ்தாகர் பழி தகாதென ஜனமேஜயனைத் தடுக்கிறார். தட்சகன் ஓம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டத்தில் வீழ்வதற்கிருந்த கடைசி விநாடியில் ஜனமேஜயன் யாகத்தை நிறுத்துகிறான்.

கதையை நான் விஸ்தாரமாகத்தான் சொன்னேன். கமலநாதன் சிரத்தையோடு கேட்டுக்கொண்டிருந்தான். கதை முடிந்து பார்த்த போது கூடத்துள் படுக்கை விரித்திருந்த லீலாவதியும் பாயின் மேலிருந்து கதை கேட்டுக்கொண்டிருந்தாள்.

என் கவனத்தைக் கலைத்து, 'பாரதத்தில வாற காண்டாவன தகனம் எனக்குத் தெரியும். ஆனா நீ சொன்னமாதிரி ஒரு கதை அதிலயிருக்கிறத நான் அறியேல்லை. கதை நல்லாய் வரும். அதுசரி... இதில உன்ர புனைவெதுவும் இருக்கோ...' என்றான்.

'புனைவு வந்தாத்தான் கதை...' நான் சிரித்தேன்.

'என்ன தலைப்பு வைச்சிருக்கிறாய்?'

'பழியின் சுழல்.'

மறுநாள் மதியம்போல் தேடிவந்த நண்பர்களுடன் நீண்ட நேரமிருந்து உரையாடிய கமலநாதன் மாலையில் அவர்களுடன் கிளம்பினான். 'வர மாட்டனெண்டு நிக்கிறாய். இஞ்ச தனிய இருந்து என்ன செய்யப்போறாய்?' என்றான் அப்போதும்.

'உடம்பு ஒரே அலுப்பாயிருக்கு, கமல். எழுத்து வேலையும் கொஞ்சமிருக்குத்தான. நான் இருக்கிறன், நீ போட்டு வா' என, 'அலுப்புக்கு சாராயத்தைவிட வேற மருந்தில்லை. றூமில கொஞ்சம் இருக்கு. அடிச்சுக்கொண்டிரு, வரேக்க வாங்கியாறன். பேச்சுத் துணைக்கு லீலா இருக்கிறாள்தான' என்றுவிட்டு போனான்.

வாய்க்காலில் குளிக்கப் போயிருந்த லீலா வந்தபோது என்னில் ஓரளவு போதை ஏறியிருந்தது. இண்டைக்கு அந்தக் கதை முழுதையும் அறியாமல் விடுறேல்ல என்ற தீர்மானத்தோடுதான் இருந்தேன்.

அவள் வந்ததும், 'லீலா, இஞ்ச வா, இதில இரு' என்று முன்னாலிருந்த கதிரையைக் காட்டினேன். 'நீ அந்தக் கதையை இன்னும் முடிக்கேல்ல.'

சிறிதுநேரம் அந்த இடத்திலேயே லீலா நிலைகுத்தி நின்றாள். சமையலறையிலிருந்த வெற்றிலைச் சரையை எடுத்து வெற்றிலை போட்டாள். கதிரையில் வந்தமர்ந்தபோது அவளிலொரு தெளிவு கண்டேன். அவள் கதையின் ரகசிய மூடியைத் திறக்கத் தயாராகி விட்டாளென்று எனக்குத் தெரிந்தது.

'இது எங்கட செல்லப்பாட்டி காலத்தில நடந்ததுதான்...'

'செல்லப்பாட்டி...?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘அம்மாவின்ர ஆச்சி. என்ர அம்மம்மா.’

‘ம்.’

‘அவ சொல்லித்தான் எனக்கு இந்தக் கதை தெரியும். முந்தி இந்தக் கதை இந்தச் சுற்றாடல்ல எல்லா ஆக்களுக்கும் தெரிஞ்சுதான் இருந்திது. ஒருதரும் ஒண்டையும் வெளிக்காட்டேல்ல. இப்ப பாதிக்கு மேல புதுச் சனம். ஆரும் இதைத் தெரிஞ்சிருப்பினமோண்டு எனக்குத் தெரியா. பாம்புக் கமத்துக் கோயில்ல ஒரு சாமியார் வந்து வந்து தங்குவாரெண்டு சொன்னனெல்லோ…’ என்றவள் மேலும் தன் குரல் பெருக்கத்தை விழுத்தினாள். ‘உண்மையில… பாம்புக் கமமே அவற்றதானாம்.’

‘ங்ஆ…?’

‘பாம்புக் கமத்து புத்திலயும், கோயில்லயும், மரத்திலயும், வேலியிலயும், றோட்டிலயும்… எங்கயும் பாம்புகளாய்த்தான் இருந்திது. அம்மம்மாவோட போய் வாற நேரத்தில பாம்புகள் றோட்டில வழிஞ்சு போறத நானும் கண்டிருக்கிறன்.’

‘சரி.’

“அப்ப… உழவு வேலையள் செய்யிறதுக்கெண்டு பக்கத்துக் கமத்தில கமலநாதன் தம்பியின்ர தாத்தா குடும்பமாய் வந்து கமக் கொட்டில்ல தங்கியிருந்தார். ஒருநாள் முத்தத்தில நிண்ட அவற்ர மனுஷியை பாம்பு கொத்தியிட்டுது. மனுஷியும் கனநேரம் தாக்குப் பிடிக்கேல்லை. விஷகடிப் பரியாரியைக் கூட்டிவாறதுக்குள்ள செத்துப்போச்சு. கமலநாதன் தம்பியின்ர தாத்தா அப்ப நல்ல இளந்தாரி. நல்ல தண்டுதரமான ஆளும். கேட்டியளோ? மனுஷி செத்த துக்கத்தில வெறியைப் போட்டிட்டு கோயிலும் இருக்கக் குடாது, புத்தும் இருக்கக்குடாதெண்டு சொல்லி அண்டு பின்னேரம் சவத்த சுடலைக்குக் கொண்டுபோறதுக்குள்ளயே பாம்புக் கமத்தில யிருந்த அந்தளவு புத்துகளையும் ட்றாக்ரரைக் கொண்டுபோய் ரில்லரால கிண்டிக் கிளறி இடிச்சுத் தள்ளிப்போட்டார்.’

‘கடவுளே!’

‘புடைச்சதும், நொடிச்சதும், குஞ்சும் குருமனுமாய்… ஆயிரம் பாம்பு அந்தாளின்ர விசரில துண்டு துண்டாய் போய்க் கிடந்துதாம். காகம்கூட வந்து ஒரு துண்டைக் கொத்திப்பாக் கேல்லையாம். வேற கமத்து ஆக்கள் வந்துதானாம் மண்ணைப் புரட்டிப் புரட்டி பாம்புத் துண்டுகளை எடுத்து நெருப்பு மூட்டி எரிச்சினம்.’

‘…’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அதோட மனிசன் நிக்கேல்லையாம். கோயில்ல இருந்த சாமி கையெடுத்துக் கும்பிட்டு மண்டாடியும் கேக்காம கோயிலையும் இடிச்சுத் தள்ளி, அந்தாள் நட்டுவைச்சுக் கும்பிட்ட நாகதம்பிரான் கல்லையும் கிண்டி எறிஞ்சு போட்டுதாம். சாமியும் மனமொடிஞ்சு போய் அங்கனயே கிடந்து கொஞ்சக் காலத்தில செத்துப்போனார்.'

நான் மௌனமாய் அல்ல, ஓர் உறைவில் இருந்திருந்தேன். காண்டவ வனம் தகனமாகியது என் மனத்துக்குள். ஆயிரமாயிரம் விலங்குகள், பறவைகள், ஊர்வனவென எல்லாம் எரிந்து நீறாகின்றன. தட்சகன் அந்த அனலிடையிலிருந்து தப்பியோடுகிறான். ஓடிய அவனுக்குள் தீ மூண்டிருக்கிறது.

'அதுசரி, நீ என்னத்துக்கு பின்ன கமலநாதன் தம்பி வருத்தப் படுமெண்டு சொன்னனீ? இதில அவன் வருத்தப்பட என்ன இருக்கு?'

'தாத்தா இப்பிடி கிறுக்குப் பிடிச்சு நடந்தது தெரிஞ்சா, அதுக்கு மனவருத்தமாய் இருக்கும்தான?'

நான் எழுந்துபோய் அவளது பக்கத்துக் கதிரையில் அமர்ந்து அவளது முகத்தைப் பிடித்துத் திருப்பினேன். ஏதோவொரு சந்தர்ப் பத்தில் அப்படி நடந்துவிடவேண்டுமென்று உள்ளே ஒரு திட்டமிருந் திருந்ததோ எனக்குள்? ஆனால் அது என் இரண்டாவது தேர்வுதான். நான் சொன்னேன்: 'லீலா, இன்னும் நீ இந்தக் கதையை முழுசாய் முடிக்கேல்லை. மறைக்காமச் சொல்லு. நான் ஒருதரிட்டயும் போய் இதைச் சொல்லப்போறேல்லை. கமலநாதனிட்டயும் சொல்ல மாட்டன்.'

நான் எழுந்தேன். அவள் தடுத்தாள். 'நான் என்னத்தைச் சொல்ல?' என்று சிறிதுநேரம் தடுமாறினாள். பின் சிறிது சுணங்கி விட்டு, 'அந்தளவில்லை கதை' என்றாள். 'கோயிலை இடிக்காமல் தடுத்த சாமியை, கமலநாதன் தம்பியின்ர தாத்தாதான் வேணு மெண்டே ட்றாக்ரரை ஏத்திச் சாக்கொண்டாராம்.'

'வேணுமெண்டே...?'

'அதுதான். சாமியின்ர தூரத்துச் சொந்தமாயிருந்த ரண்டு மூண்டு பேரைத் தேடிப்பிடிச்சு கொஞ்சக் காசைக் குடுத்து கமத்தை யும் தன்ர பேருக்கு மாத்தியிட்டாராம். அதுக்குப் பிறகுதானாம் அவையின்ர இந்த வசதியான வாழ்க்கை துவங்கிச்சுது. ஒரு கமம், பிறகு இன்னொரு கமம்... இப்பிடியே அவை பெரிய காணிக்காறர் ஆயிட்டினம். பின்னாலயென்னவோ உழைச்சுத்தான் சேர்த்திருக்கினம். ஆனா முதல் கமத்தை எடுத்த விதம் இப்பவும் பழியாய் இருக்கு.'

நீண்டநேரமாயிற்று அந்த ஸ்திதி என்னில் கலைய. ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை என்னில் துளிர்க்கவில்லை. கடைசியில் இன்னொரு ஐயம் என்னில் கிளர்ந்தது. ‘நான் பயப்பிடுவனெண்டு சொன்னியே, ஏன்?’

லீலா மௌனமாயிருந்தாள். பிறகு சளிந்து கதிரையில் கொள்ள இருந்தாள். ‘ஏனிண்டா... அந்தக் கோயிலும் புத்தும் இருந்த இடத்தில கட்டின வீட்டிலதான் இப்ப நாங்கள் இருந்து கொண்டிருக்கிறம்.’

என் உடம்பு சடுதியில் பதறியது.

கதை எப்படியோ சாமி கொலையில் முடிந்திருந்தாலும், அது மையங்கொண்ட இடம் வேறொன்றாக எனக்குத் தோன்றியது. பாம்புகளின் அழிப்பிலேதான் அது இருந்திருக்கிறது. அதனால்தான் பாம்புகள் வதம் செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட வீட்டென்று தெரிந்த கணத்தில் நான் பதறியிருக்கிறேன்.

‘பழியின் சுழல்’ கதையில் நாகராஜனான தட்சகன் காண்டவ தகனத்திலிருந்து தப்பியோடியதுபோலவே, சுமார் ஐயாயிரம் ஆண்டு களுக்குப் பின்னான கமலநாதனின் தாத்தாவின் அழிப்பிலிருந்தும் ஒரு தட்சகன் தப்பியோடிவிட்டதாகவே நான் உணர்ந்து கொண்டிருந்தேன்.

என் பதற்றத்தைக் கண்ட லீலா எழுந்து வந்து, ‘என்னைய்யா... என்ன செய்யுது?’ என என்னை உலுக்கினாள்.

‘ஒண்டுமில்லை.’

அந்தளவில் கமலநாதன் வந்தான். பார்க்க வேண்டியிருந்த நண்பர்களையும், உறவினர்களையும் பார்த்தாகிவிட்டதாகச் சொல்லி ஆயாசமாய் கதிரையில் சாய்ந்தான்.

‘அப்ப... நாளைக்கு நாங்கள் கொழும்புக்கு வெளிக்கிடலாம்’ என்றேன் நான்.

‘ஏன்? யாழ்ப்பாணம் போகவேணும்... வேலை யொண்டி ருக்கு எண்டாய்.’

எப்படி என் மனநிலையை அவனுக்கு விளங்கப்படுத்து வதென்று எனக்குத் தெரியவில்லை? பாம்புக் கமத்தைச் சூழ எங்கேயும் ஒரு புற்றுக்கூட அப்போது இருந்திருக்கவில்லை. ஒரு பாம்பை கண்ணாலும் கண்டதில்லை. இந்தக் கமத்தின் பெயருக்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது, ஒரு பழியை நிறைவேற்ற தட்சகன் இன்னும் காத்திருக்கிறானென்றால் கமலநாதன் சிரிக்கமாட்டானா? அதனால், ‘அதுக்கு இப்ப அவசரமில்லை. ஆறுதலாய் வந்து அதை நான் பாத்துக்கொள்ளுறன்’ என்றேன்.

‘அப்ப... காலமை போய் பின்னேர பஸ்சுக்கு ரிக்கற் புக் பண்ணுவம்’ என்றுவிட்டு கமலநாதன் படுக்கப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் விளக்கு எரிந்தகொண்டிருந்தது. மேலே ஃபேன் சுழன்றுகொண்டிருந்தது. அப்போதுதான் கவனித்தேன், இன்னும் லீலா சுவரோடு சாய்ந்து என்னைப் பார்த்தபடி இருப்பதை.

காலையில் நேரஞ்சென்று எழுந்து வெளியே வந்து, லீலா கொடுத்த தேநீரை வாங்கிக் குடித்துக்கொண்டிருக்கையில் கமல நாதன் எழும்பிவிட்டானாவெனக் கேட்டேன். இன்னுமில்லை என்றாள்.

எழும்பி வரட்டுமென இருக்க முடியவில்லை. மனத்துள் சஞ்சலம் அடைந்து கிடந்தது. எழுந்துசென்று கதவைத் தட்டினேன்.

உள்ளே பூட்டப்படாதிருந்த கதவு தானாய்த் திறக்க, கிழக்குப் பக்கத்திலிருந்த ஜன்னலூடு வெய்யில் கொளகொளவென பாய்ந்து வெளியே வந்தது.

அப்போதைக்கு அவன் எழும்பும் அறிகுறியெதுவும் தோன்றாமல் போக, வாசலில் நின்றபடி கூப்பிட்டேன்.

அசைவில்லை. மனத்தில் பதற்றம் விழுந்தது. அவசரமாய் உள்ளே சென்று அவனை உசுப்பி, 'கமல்... கமல்...' என அழைத்தேன். அசைவு தோன்றாதது மட்டுமில்லை, உடம்பில் உயிர்ச் சுரணையும் தென்பட வில்லை. மோசம் நடந்துவிட்டது தெரிந்தது. நான், 'கமல்...!' என அலறினேன்.

உள்ளே வந்த லீலா கமலநாதனைப் பார்த்துவிட்டு, 'ஐயோ!' என தலையிலடித்து ஓலமிட்டாள்.

நான் என் உறைவு தணிந்து ஜன்னலை நோக்கத் திரும்பினேன். தன்னை வளைந்த கம்பிகளில் சுற்றிக்கொண்டிருந்த ஒரு நாகம், நான் தன் பக்கம் திரும்புவது தெரிந்து உஷாராகி படத்தை விரித்தது.

நடு இணைய இதழ்,
மார். 2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுச் சாமி

நல்லதம்பி ஆசிரியருக்கு அது நம்பிக்கை அவ நம்பிக்கை என்பவைகளுக்கு அப்பால், புற்றுச் சாமியைக் காண்பதிலுள்ள பின்னடிப்பு நேரமின்மையின் காரணமாகவே இருந்தது. இல்லாவிட்டால் மனைவி அஞ்சனாதேவியின் விருப்பத்தை மீறுகிறவரல்ல நல்லதம்பி. அவரறிந்தவரையில் புற்றுச் சாமியைத் தேடிக் கண்டுபிடித்ததொன்றும் யாருக்கும் சுலபத்தில் இருந்துவிடவில்லை. மதியத்தில் தேடத் தொடங்கினால்தான் மாலைக்குள்ளாகவாவது அந்த அடர் பனங்கூடற் பற்றைக்குள் அவரைக் கண்டுபிடிக்க வாய்ப்பிருக்கிறது. அதுவும் நிச்சயமில்லாதது. தியானம் கூடும்வரை மனித சஞ்சாரமற்ற அப் பனங்கூடலுள் அங்கிங்காய் நடந்து திரியும் புற்றுச் சாமி, எந்த மரத்தினடியில் எந்த புற்றினோரத்தில் நிஷ்டைகூடியிருப்பாரோ? மற்றும்படி அவர் எந்த அயற் கிராமத்தையும் எது தேவைக்காகவும் அணுகுபவரில்லைத்தான். தன் காரியமாய் அவர் வெளியே செல்வதற்கு ஒரேயொரு நாள்தான் உண்டு. பூமியை இருள் முழுதுமாய்க் கவியும் மாதத்தின் அந்த ஒரேயொரு நாளான அமாவாசையாகவே அது இருந்தது. சாமி அன்று தன் விருப்ப தரிசனம் கொடுப்பதும் அவிநாசிக்கு மட்டுமாகவே இருந்ததென்பது பலரறிந்த ரகசியம். அது இரண்டு சக்திகளின் சங்கம காலமாகவன்றி வேறல்லவெனவே அறிந்தவர்கள் சொல்லிக் கொண்டார்கள். சாமிபோலவே அவிநாசி. சாமிக்கு தன் சக்தியை வெளிப்படுத்த சமயங்கள் கிடைத்ததோடு, தந்திரங்களும் தெரிந்திருந்தன. அவிநாசி அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவரப்பெறாதவள். ஆனால் சக்தி உள்ளவள். அதை திரிபட்ட சடையிலும், சிவந்த கண்களின் தோண்டியெடுக்கும் பார்வையிலும், கறுத்த பற்களிலும், குறைச் சுருட்டின் புகைப்பிலும் ஒருவரால் தெளிவாகக் கண்டு கொள்ள முடியும். சாமி பேசுவார் இரண்டொரு வார்த்தையேனும். அவிநாசி பேசா நாட்களே அதிகமிருந்ததெனச் சொல்வார்கள். அது சக்தியின் திளைப்பில்லாமல் வேறென்னவென கிராமங்கள் திகைப் போடு சொல்லிக்கொண்டன. அருகிலிருந்து கண்ட கிராமங் களிலிருந்து பரவிய தகவல்களை நகரமும் நம்பத் தொடங்கியிருந்தது. சிறிது சிறிதாக ஓட்டு வீடுகளின் மேல் நள்ளிரவுகளில் விழும் மாயக் கல்லெறிகள், காரணமின்றித் தோன்றி மருந்துக்கும் அடங்கா திருக்கும் வயிற்றுப் போக்குகள், தூக்கத்தையறுத்து பலத்த கதறல் களை உண்டாக்கும் பயங்கரக் கனவுகளுக்கு பரிகாரம்வேண்டி நகரமும் சாமியை அணுகத் துவங்கியது. அதற்கும் நேரமின்மை யென்ற பெருங்குறை இருந்தது. நல்லதம்பி ஆசிரியருக்குப்போல அடிக்கடி லீவுபோட்டு சம்பளப் பிடித்தமாகும் நிலைமையில் எத்தனை பேர் அவர்களில் இருந்தனரென்பது சொல்லமுடியாதது. ஆனால் நல்லதம்பி ஆசிரியரின் நிலை அதுதான். அவரது தயக்கம் நியாயமானதாகவே இருந்தது. ஆயினும் அஞ்சனாதேவியின் ராத்திரிக் கனவுகளின் பயங்கரத்தால் விளையும் அவளதும் தனதும் தூக்க இடர்ப்பாடும், அக்கம் பக்கத்தின் முறைப்பாடும் ஒருநாள் புற்றுச் சாமியைத் தேடிக் கண்டு தன் குறை சொல்வதென அவர் தீர்மானித்துக்கொண்டார்.

ஒருநாள் இரண்டு மணிக்கு பள்ளி முடிய புற்றுச் சாமி இருக்கிற இடத்தைக் காட்ட அந்தச் சூழலில் குடியிருக்கும் ஒரு மாணவனையும் அழைத்துக்கொண்டு சைக்கிளில் புறப்பட்டாவ நல்லதம்பி. பனங்கூடல் தெரிகிற இடத்தில் சைக்கிளிலிருந்து குதித்துக்கொண்ட மாணவன், தூரத்தில் நின்றுகொண்டே அதைச் சுட்டு விரலால் காட்டிவிட்டு திரும்பிப் போய்விட்டான். சைக்கிளை ஒரு வீட்டு வாசலில் நிறுத்தி அங்கிருந்த ஒரு முதியவரிடம் சாமிபற்றி விசாரித்து அனுகூலமற்ற தகவலுடன், சைக்கிளை அங்கேயே சொல்லி நிறுத்திவிட்டு அவர் பனங்கூடலை நோக்கி நடந்தார்.

வழியற்றுக் கிடந்த பற்றையைக் கண்டபோதே அன்றைக்கு சாமியைக் கண்டுவிடலாமென்ற நம்பிக்கை நல்லதம்பியிடம் விடை பெற்றுக்கொண்டது. ஆயினும் திரும்ப இன்னொரு தடவை வருகின்றதற்கான வாய்ப்பின்மையையும், யாரையும் கூட்டிவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமின்மையையும் யோசித்து கால் தடம் கிடந்த ஓர் ஒற்றையடி ஊட்டில் நல்லதம்பி நுழைந்தார். சிறிதுநேரமாக குனிந்தும் ஒதுங்கியும் நடந்தவர் திடீரென பனைகள் மட்டுமாயிருந்த ஒரு வெளியை வந்தடைந்தார்.

அங்கே ஒரு பெரும்புற்று ஓரிரு பனைகளைக் கவ்வியபடி பரந்து விரிந்து எழுந்திருந்தது. புற்றில் பனை வளஉந்திருந்ததா, பனையை அணைத்து புற்று வளர்ந்திருந்ததாவென கண்டறிதல் சிரமமாயிருந்தது. ஆளுயரத்திற்கு மேலிருந்தன புற்று முகங்கள். புதுக் களி மண்ணால் பூசியதுபோன்று செம்மை செழித்திருந்த புற்றில் ஆயிரம் கண்களும் புதியனவாய்த் தென்பட்டன. சாமியை அவ்விடத்தில் காணலாகுமென ஏனோ நம்பிக்கை பிறந்தது நல்லதம்பிக்கு. பயம் விளைந்ததாயினும் அவர் மேலும் நடந்து புற்றின் மறுகரையடைய மண் நிறத்துண்டு கட்டி புரிசடை, நீள் தாடியுடன் ஒரு கரிய உரு அங்கேயிருப்பதைக் கண்டார். அதுதான் சாமியென்பதை அறிய வேறு ஊகங்கள் வேண்டியிராத நல்லதம்பி, கண்மூடியிருந்த சாமியை நெருங்கினார்.

திடீரென, 'வாரும், என்ன விஷயம்?' என்றார் சாமி. நல்லதம்பிக்குத் திகைப்பாகப் போய்விட்டது. கண்மூடிய நிலையிலிருந்த சாமிக்கு தன் வரவு எப்படித் தெரிந்ததென அவரால் எதுவும் எண்ண முடியவில்லை. வாய் வார்த்தையிழந்து அவர் முன்னால் நின்று கும்பிட்டார். பின் சுதாரித்து, 'சாமி...' என்றார்.

'சொல்லும்.'

தன் மனைவிக்கு நள்ளிரவுகளில் சவ ஊர்வலங்கள், மரண வீடுகளின் ஒப்பாரி, கொலைகளும் வெட்டுண்ட அங்கங்களுமாய் கனவுகள் தோன்றுவதையும், அவள் விழிப்பும் உடனடியாகக் கொள்ளாமல் படுக்கையில் உருண்டு புரண்டு கதறுவதையும் நல்லதம்பி சொன்னார். சாமி வந்துதான் அவளுக்கு என்ன வியாதியென்பதை அறிந்து பரிகாரம் செய்யவேண்டுமென இரங்கினார்.

சிறிதுநேரம் மௌனமாயிருந்த சாமி கண் விழித்து அவரைப் பார்த்தார். 'வீடெங்க இருக்கு?'

'ரவுணில. ஆஸ்பத்திரிக்குக் கிட்ட.'

'கிட்டவாய் சவக்காலை எதுவுமிருக்கோ?'

'இல்லை, சாமி.'

'நீர் வேதமோ, சைவமோ?'

'சைவம்தான், சாமி.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ம்... மைபோட்டுப் பாக்கலாம். பிறகுதான் பரிகாரம் சொல்லேலும்.'

'சரி, சாமி.'

'சாமிக்கு காணிக்கை வைக்கவேணும், தெரியுமெல்லோ?'

'தெரியும், சாமி.'

'நல்லது. அதுகள் உண்மையில எனக்கில்லை. என்னோட வரப்போற ஆக்களுக்குத்தான்.'

'கூட வேற ஆக்களும் வருவினமோ, சாமி?'

'வருவின. ஆனா நீர் காணமாட்டிர். சாமியின்ர வீட்டை எப்பிடி வரவேணும்?'

நல்லதம்பி விளக்கமாகச் சொன்னார்.

'நல்லது. வாழையிலை, எலும்பிச்சம் பழம், வெத்திலை, குங்குமம், சாம்பிறாணிக் குச்சி, சூடம் எல்லாம் வேணும். குத்துவிளக்கு புதுத் திரியோட வேணும். ஒரு புது ஓலைத் தடுக்கு கட்டாயம்.'

'வாங்கி வைக்கிறன், சாமி.'

'வாற செவ்வாய்க் கிழமை ராத்திரி சாமான் றயில் போற சாமம் வருவன். முன்ன பின்ன ஆனா காத்திருக்கவேணும்.'

நல்லதம்பிக்கு அவர் சொன்ன நேரம் திகைப்பாயிருந்தது. ஆனாலும் தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.

அன்று செவ்வாய்க் கிழமை. சாமி அதிசயிக்கும்படிக்கு காலையிலிருந்தே புற்றரவெல்லாம் வெளிப் போந்து ஒரு கலகத் துக்குப்போல் எங்கெங்கும் ஊர்ந்து திரிந்துகொண்டு இருந்தன. கோள்கள் இடம்பெயரும் காலங்களில் பொய்களுக்கும் உண்மை களுக்குமான மோதல் இடம்பெறுமென்றும், அக் காலங்களில் அவற்றின் வேஷம் மாறி உண்மை பொய்யிடத்திலும், பொய் உண்மை யிடத்திலுமாய்த் தவிசேறிவிடுமென்றும் அவர் அறிந்தவர். அது அவரிலேயே அனுபவமாகியிருந்த ஞானம். தன் கோலமும் கொள்கையும் மாறிய அக் காலத்தை அவரால் எங்ஙனம் மறந்துவிட முடியும்?

புற்றுச் சாமியாக அவர் ஆவதற்கு முன்னால் அவரலைந்ததும் அமைந்திருந்ததும் மிகவும் பவுத்திரமான இடங்களாயிருந்தன. காசி ராமேஸ்வரம் கதிர்காமம் சிவனொளிபாதமலையென யாத்திரித்து திரிந்தவர் அவர். அவற்றையெல்லாம் யாரோவின் கட்டளைக்குப் போல் தான் பணிந்து செய்ததை சாமி சிலவேளை எண்ணுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியான காலத்தில்தான் ஒருநாள் 'கீரிமலை தீர்த்தக் கேணி உப்பேறப் போகிறது, போ அங்கே' என்ற உத்தரவு அவருக்கு செவியில் விழுந்தது. அதுவொரு கோள் நிலை பெயரும் காலமாயிருந்ததை சாமி கணித்தார். சாமிக்கு தயக்கமாயிருந்தது. ஆயினும் கீரிமலை சென்றார். ஒரு முன்னிராப்போதில் தீர்த்தக் குளமடைந்தவர் யாரு மறற்ற தனிமையில் ஏகாங்கியாய் எவ்விடமும் நோக்கிநின்றார். கால்களற்ற சில மனிதர் ஒருபால் மறைந்திருந்தது கண்டார். அவற்றினாலேயே தீர்த்தக் கேணி நன்னீருக்கு கேடு விளையப்போகிறது என்பதையறிய சாமிக்கு கனநேரம் பிடிக்கவில்லை. இலைகள் சரசரத்து அருகில் நின்ற அரசமரமொன்று தன்னடி கிடந்த ஒரு தேங்காயை அவருக்குக் காண்பித்தது. தெய்வம் காட்டியது வழியென தேங்காயை எடுத்துவந்து துஷ்ட ஆவிகளை தன்மயமாக்கும் எண்ணத்தோடு அதை வான்நோக்கி எறிந்தார். மேகம்வரை தன் முடியோடு சுழன்று பறந்த தேங்காய், தன் விசை தணிந்த எல்லையில் புவியீர்ப்புக்கு ஆட்படத் தொடங்கியது. பின் புவிநோக்கி கீழிறங்கத் தொடங்கிய தேங்காய் ஓரிடத்தில் அவ்வீர்ப்பினை எதிர்த்து அந்தரத்தில் நின்று சுழன்றது. துஷ்ட ஆவிகளெல்லாம் தம் மறைவிடம்விட்டு வெளிவந்து திகைத்து நின்று அது கண்டன. அவைகளை வசப்படுத்த பெருவாய்ப்புண்டென்று நம்பிய சாமி, ஒருபோது தீர்த்தக் கேணிப் பக்கம் திரும்ப, அங்கே சில துஷ்ட ஆவிகள் ஏற்கனவே நீராடிக்கொண்டு இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். அப்போது சாமி நினைத்தார், அவை தன்னையே ஏமாற்றிச் செல்லும் விசேஷ வல்லமைகொண்ட ஆவிகளென்று. அது தன் வித்தையில் தானுமே ஒரு கணம் மயங்கிய தன் தவற்றின் விளைவென்பதையும் அவர் அறியாமலில்லை. ஆனாலும் அவற்றை அங்கிருந்து விலக வைக்க அவருக்கு மார்க்கமிருந்தது. அவர் நீர் நிலையில் இறங்கியதும் தன் துண்டை உரிந்து கரையில் வீசினார். தன் ஆண்மையின் நீர்ப் பிரவேசம் அவற்றைச் சிதறியோட வைக்குமென்ற அவரது எண்ணம் பிழைத்துப்போனது. ஆவிகள் நாணிக் கலகலத்தாலும் சிதறியோடாது கேணிக்குள்ளேயே தங்கியிருந்தன. சாமி நீருக்குள் முங்கி எழுந்தார். நாவில் நீரின் உப்பு கரித்தது. இனி செய்ய ஒன்றுதான் உண்டு. அவ்வாவிகளின் கெட்ட அம்சங்களின் கலப்பை தனது நல்லம்சங்களின் அமிர்த உதிர்ப்பால் ஈடுசெய்யவேண்டும். அவர் அது செய்யத் தயாரானார். இரும்பைப் பொன்னாக்கும் வித்தை, தன்னுரு மறைத்தல், வருவது ஓர்தல் ஆதியாம் நற்கலைத் திறன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நீரில் விருப்பார்வத்தோடு கலந்தார். மறுபடி சாமி நீருள் மூழ்கி யெழுந்து நீரின் சுவையைப் பரிசீலித்தபோது அது மீண்டும் நன்னீராகியிருந்தது. நகுல முனியின் கீரிமுகத்தைப் போக்கிய புனித மான ஜலம் அதுதான். அப்போது சாமி கண்டார், கேணியில் நீராடி யிருந்த துஷ்ட ஆவிகள் கேணியைவிட்டு வெளியேறி கரந்து கொண்டிருப்பது. வெளியில் திரிந்துகொண்டிருந்த ஆவிகளும் காணாமலாகியிருந்தன. அவர் அந்தரத்தில் மிதக்கவைத்த தேங்காயும் எங்கேயென்று தெரியாமல் போயிருந்தது. தன் விஜயத்தின் பூர்த்தியை உறுதிப்பட்ட சாமி தன் அலைவைத் தொடங்கினார். சிறு தெய்வக் கோயில்களெல்லாம் திரிந்தார். அதையும் அவரால் தொடரமுடியாது போன நிலைமையில்தான் அந்தப் பனங்கூடல் வந்துசேர்ந்தார். புற்றின் அரவங்கள் அவர் பிரசன்னத்தில் வெகுண்டெழாமல் சாந்தரூபங்கொண்டு திரிந்தன. அந்த இடம் வாலாயமாய்ப் பட அங்கேயே சாமி தங்கிவிட்டார். அன்றிலிருந்து சாமி புற்றுச் சாமியுமானார்.

சாமிக்கு காலம் மறந்திருந்ததில் அதுவொரு நூற்றாண்டுக்கு முந்திய சம்பவமாக தோன்றிக்கொண்டிருந்தது. அதுபோலொரு கோள் நிலை திரியும் காலமே அப்போதும் உற்றுள்ளதென்பதை அறிந்துகொண்டாலும், சாமி நல்லதம்பி வீடுநோக்கிய புறப்பாட்டை நிறுத்திக்கொள்ளவில்லை. ஊரடங்கி நிலா வெளிக் கிளம்ப சாமி நடக்கத் தொடங்கினார்.

அப்போது வீதிகள் எல்லாவற்றிற்கும் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கவில்லை. தன் எல்லைக்குட்பட்ட பிரதான வீதி களுக்கும் வீடுகளுக்கும் மின் உற்பத்தி எந்திரங்கள்மூலம் பட்டண சபையின் மின் விநியோகம் இருந்தது. வீடுகளுக்கு முழு நேரமாயும், வீதிகளுக்கு மாலை 6 மணி முதல் காலை 6 மணிவரையும் அந்த விநியோகம். சாமி பட்டணசபை எல்லைக்குள் நுழைந்து மின்சார பல்புகளின் மங்கிய மஞ்சள் வெளிச்சமுள்ள பிரதான வீதியொன்றில் நடக்கத் தொடங்கினார். வீதிகளில் ஆளரவமும் வீடுகளில் அரவமும் அடங்கியிருந்தன.

அவர் நல்லதம்பி சொல்லியிருந்த குறிப்பின்படி சங்கத்தானை தெரு கண்டிவீதியில் ஏறும் சந்தியில் ஆஸ்பத்திரி பக்கமாகத் திரும்பிச்சென்று ரயில் பாதைப் பக்கத்தில் ஒற்றைச் சிறகுள்ள நீலநிற தகரக் கேற்றை அடைந்தார். யாரையும் அழைக்கும் சிரமம் சாமிக்கு இருக்கவில்லை. கேற்றுக்கு முன்னால் சாமியைக் கண்டதுமே ஓடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கேற்றைத் திறந்து நல்லதம்பி அவரை உள்ளே அழைத்துச் சென்றார்.

'முதலிலை காணிக்கை வையும்' என சாமி சொல்ல, உள் கூடத்துள் சாமியை அழைத்துச் சென்ற நல்லதம்பி, சுட்ட கரு வாட்டுத் தட்டையும் சாராயப் போத்தல் கிளாஸ்களையும் மேசை மேல் கொண்டுவந்து வைத்தார். சாமி மை பார்ப்பதன் முற்கிரியைகள் போல் சாராயத்தை வார்த்துக் குடித்து, சுட்ட பாரைக் கருவாட்டை யும் புசிக்க ஆரம்பித்தார். எல்லாவேளையிலும் அவரது செங்கண்கள் அந்த வீட்டின் நாலாபுறங்களையும் நோக்கியபடியே இருந்தன. சுவரில் கொளுவப்பட்டிருந்த குடும்பப் போட்டோக்கள், சாமிப் படங்களையும் உற்று உற்று நோக்கினார். பின் உறவினர்களின் போட்டோக்களைச் சமீபித்து மிகக் கூர்ந்து பார்த்தார். ஒவ்வொரு வரது கண்களின் ஊடாகவும் அவரவரது இதய ஆசைகள் விருப்பங்கள் வேட்கைகளை பிரித்தெடுப்பவர்போல் அவரது அத் தீட்சண்யம் தோன்றியது.

சாமி விறாந்தையில் ஏறும்போதே உள்கூடத்திலிருந்து அவரது தோற்றம் கண்ட அஞ்சனாதேவிக்கு அந்தக் கோலமும், உள்ளே வந்ததும் சாராயம் குடித்து கருவாடு தின்ற விதமும் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லையென்று தெரிந்தது. தன் வீட்டில் சரி, பிற வீடு களில் சரி அவள் யாரும் சாராயம் குடித்து நேரில் கண்டவளில்லை. அப்படியானவளுக்கு தன் வீட்டிலேயே சாராயம் வாங்கி குடிக்க அனுமதி கொடுத்த நிலைமை உவப்பில்லை. வேறு செய்ய இயலாமல் பேசாதிருந்தாள். ஆயினும் கூடத்துள் நின்று அவற்றைப் பார்க்கும் மனத் திண்மை அற்றவளாய், அடிக்கடி அறைக்குப் போய் சுழன்று வெளியே வருபவளாகவே அவள் இருந்தாள்.

பாதிப் போத்திலுக்கு மேல் சாராயமும் முடிந்துவிட்டது. சுட்ட கருவாட்டில் ஒரு சில துண்டுகளே தட்டில் மீதியாயும் இருந்தன. சாமி இன்னும் வந்ததற்கு இருக்கக்கூடச் செய்யவில்லை. மை பார்த்து பரிகாரங்கள் செய்து முடிப்பதானால் எவ்வளவு நேரமாகுமோவென எண்ணி அலுப்படைந்தார் நல்லதம்பியும். தப்பான ஒரு ஆளை தன் வீட்டிற்கு, அதுவும் அந்தநேரத்தில், வரவழைத்துவிட்டோமோ என்றுகூட அவருக்குத் தோன்றியது.

அப்போது சாமி, 'சாமி, இஞ்ச வாரும்' என்றார். நல்லதம்பி கிட்டவாய்ச் சென்றார். 'இந்தப் போத்திலையும் தட்டையும் முதல்ல உள்ள கொண்டுபோய் வைச்சிட்டு வாரும்' என்று சாமி சொல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதம்பி அவ்வண்ணமே செய்தார். அவர் திரும்பி வந்ததும், 'உம்மட மனிசியை கொஞ்சம் இப்பிடி வந்துநிக்கச் சொல்லும்' என்று சாமி கூற அதையும் செய்தார். அறைக்குள் நின்றிருந்த அஞ்சனாதேவி வெளியே வந்தாள். கொஞ்சம் உடம்பு தள்ளாடத் துவங்கியிருந்த சாமி அவளை நெருங்கி அவளது கண்களை ஊடறுத்து நோக்கினார். நெஞ்சுக் குவட்டுக்குள்ளும் பார்வை தடுமாறி சிலசமயம் விழுந் தெழுந்துகொண்டு இருந்தது. அஞ்சனாதேவிக்கு உடல் கூசத் தொடங்கியது. அவள் சமாளித்து நின்றுகொண்டிருந்தாள்.

'பிள்ளையள் எத்தினை?'

'எங்களுக்குப் பிள்ளையளில்லை' என்றாள்.

பிறகு சுவரிலிருந்த ஒரு படத்தை கையினால் சுட்டிக்காட்டி, 'அந்தப் போட்டோவில இருக்கிறவை ஆர்?' என்றார்.

'அது என்ர மாமாவின்ர குடும்பம்.'

போட்டோவை அண்மித்து அதிலுள்ள ஒரு வாலிபனைச் சுட்டிக்காட்டி, 'இது ஆர்?' என்றார்.

'அது என்ர மாமாவின்ர மோன்.'

'எப்ப எடுத்தது?'

'கனகாலம் ஆச்சு.'

'உமக்கு கலியாணம் ஆக முந்தியோ, பிந்தியோ?'

'அது... கலியாணம் ஆக முந்தித்தான்.'

'இவற்ர வேற படமெதாச்சும் உங்களிட்ட இருக்கோ?'

'அவற்ர கலியாணப் போட்டோ ஒண்டு இருக்கு. எல்லாரு மாய்ச் சேந்தெடுத்த படம். அது அந்த அறைக்குள்ள இருக்கு.'

'அதை எனக்குக் காட்டும் பாப்பம்.'

'அது சுவரில உயரமாய்க் கொளுவியிருக்கு, சாமி' என்று நல்லதம்பி நல்லதம்பி கூட்டிப்போய்க் காட்டினார்.

படம் உயரத்தில் கொளுவியிருந்தது. ஸ்ரூல் கொண்டுவரச் சொல்லி சாமி ஏறிநின்று அஞ்சனாதேவியின் மைத்துனன் முகத்தை சிறிதுநேரம் பார்த்தபடியே நின்றார். பிறகு வலமும் இடமுமாய் தலையை அசைத்தபடி இறங்கி முந்திய போட்டோவின் முன்னால் வந்தார். பின் தனது முடிவை உறுதிப்படுத்துபவர்போல் தலையை மேலும் கீழுமாய் ஆட்டினார். திரும்பி அஞ்சனாதேவியைப் பார்த்து, 'உம்மட உடம்பில இருக்கிற பவுண் நகை, தலைக்குக் குத்தின கிளிப்பு எல்லாத்தையும் கழட்டி வைச்சிட்டு வாரும்' என சொன்னார். அஞ்சனாதேவி தன் கணவனின் முகத்தைப் பார்த்தாள். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவாயில்லை, அறைக்குள் போய் கழற்றிவைத்துவிட்டு வரும்படி தலையில் சைகை பண்ணினார்.

அஞ்சனாதேவி அறைக்குள் சென்று நகைகளைக் கழற்றி வைத்துவிட்டு வெளியே வந்து, சாமி என்ன நினைத்தாலும் நினைக்கட்டுமென, தன் அதிருப்தியின் வேகமும் சேர்த்து அறைக் கதவை சற்று சத்தமெழ சாத்தினாள். 'அது நல்லது. அப்பிடித்தான் செய்யவேணும்' என்றார் சாமியும். அவளில், தன் மனத்தைப் படித்ததுபோல் சாமி சொன்ன வார்த்தைகள் இடியாய் இறங்கின. திடுக்கிட்டதுபோல் நல்லதம்பியைத்தான் அப்போதும் பார்த்தாள். அவர் சொல்ல ஒன்றுமிருக்கவில்லை.

வெளியில் வந்தவளை, கைகளைப் பக்கங்களில் விறைப்பாய்த் தொங்கவிட்டபடி மாமனின் குடும்பப் போட்டோவின் முன்னால் நிற்கப் பணித்தார். சாமி ஏன் அவ்வாறு சொல்கிறாரென தெரியா விட்டாலும், ஒரு கட்டளையில்போல் அவ்வண்ணமே செய்தாள் அஞ்சனாதேவி.

சிறிதுநேரம் கழிய, 'சதிரத்தில என்னமும் செய்யுதோ? நடுங்கிறமாதிரி... தலை சுத்திறமாதிரி... எதாச்சும்...?' என்று கேட்டார் சாமி.

'அப்பிடியொண்டும் தெரியேல்லயே.'

'சரி. இப்ப உம்மட மச்சான்ர கண்ணை நல்லாய் உற்றுப் பாரும் பாப்பம். ஆட அசையக்குடாது.' சாமியின் மேலுமான கட்டளை ஒலித்தது.

டிக்... டிக்... என்ற சுவர் மணிக்கூட்டின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. எத்தனை டிக்... டிக்...களை அது உதிர்த் திருக்குமோ? மேலும் சிறுபொழுது கழிய அஞ்சனாதேவியின் உடம்பு மெல்ல நடுங்கத் துவங்கியது.

'என்ன செய்யிது? என்ன செய்யிது?' என்றபடி முன்னே பாய்ந்துவர முயன்றார் நல்லதம்பி. 'அங்கயே நில்லும்' என்றதிர்ந்தார் சாமி. பிறகு திரும்பிக்கொண்டு சொன்னார்: 'எனக்கு இப்ப எல்லாம் விளங்கியிட்டுது. இனி நீர் இஞ்சால வரலாம்.'

அஞ்சனாதேவி சுவரோடு வந்துநின்று தன் நடுக்கம் தணிந்தாள்.

பின் புதுத் தடுக்கையெடுத்து வடக்குத் தெற்காய் விரிக்க நல்லதம்பியிடம் சொன்னார். அவர் அவ்வாறே விரித்ததும் கிழக்குப் பார்த்து அமர்ந்தார். கண்களை மூடிய சாமியின் நிஷ்டை கலைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதுநேரமாயிற்று. அதுவரை அஞ்சனாதேவியும் நல்லதம்பியும் மௌனமாய் காத்து நின்றிருந்தனர்.

கண் விழித்த சாமி எழுந்தார். சுவரிலிருந்த போட்டோவில் அஞ்சனாதேவியின் மைத்துனன் முகத்தைப் பார்த்து, 'இனி யொண்டும் சரிவராது. நான் எல்லாத்தையும் கண்டுபிடிச்சிட்டன்...' என்று தனக்கேபோல் முணுமுணுத்தார். பின் அவளை உள்ளே செல்ல பணித்துவிட்டு நல்லதம்பியின் பக்கம் திரும்பினார். 'உம்மட மனிசியும் இந்தளவு நாளாய் படாதபாடெல்லாம் பட்டிருப்பாண்டு நெக்கிறன். சாமி, ஒண்டுஞ் செய்யவேண்டாம். இந்தப் போட்டோ வின்ர சட்டங்களைக் கழட்டியிட்டு படத்தை துண்டு துண்டாய் நறுக்கி ஒரு துண்டு தவறியிடாம எல்லாத்தையும் போட்டு எரி யுங்கோ. பிறகு எரிச்ச சாம்பலை எடுத்துக்கொண்டு போய் எங்க யாச்சும் குளத்தில கரைச்சாப்போதும். அதை சூரியன் காலிக்கிறதுக் குள்ள செய்யவேணும். அவ்வளவுதான்.'

'அப்ப... மை பாக்கிறது...?' என்று இழுத்தார் நல்லதம்பி.

'இனி அது தேவையில்லை.'

'பரிகாரம்...?'

'நான் இப்ப சொன்னதுதான்.'

சாமி புறப்படத் தயாரான நிலையில், அஞ்சனாதேவி அவசர மாய் கதவைத் திறந்துகொண்டு வந்து, நல்லதம்பியின் காதோரம் போய் ஏதோ முணுமுணுத்தாள். நல்லதம்பி ஆச்சரியப் பட்டு அறைக்குள் ஓடி மேசை நிலமெல்லாம் குனிந்து தேடிவிட்டு மீண்டும் அவசரமாய் வெளியே வந்தார்.

'என்ன சிக்கல்?' நிதானமாய்க் கேட்டார் சாமி.

நல்லதம்பியால் சொல்ல முடியவில்லை.

நகைகளைக் கழற்றி அஞ்சனாதேவி அறைக்குள் வைத்து விட்டு வந்தாள்; மட்டுமன்றி, அறைக் கதவைத் திடமாகச் சாத்தவும் செய்தாள்; இப்போது தோடு தாலிக்கொடி எல்லாம் இருக்க மோதிரம் மட்டும் காணாமல் போயிருக்கிறது. அதற்கு என்ன விளக்கம் காணமுடியம்? ஆனாலும் அவர் தட்டுத்தடுமாறி, 'கழட்டி வைச்ச நகைகயளில மோதிரத்தைமட்டும் காணேல்லை, சாமி' என்றார்.

சாமி லேசாகச் சிரித்தார். 'நூல் சுத்தியிருந்த அந்த மோதிரம் தான?' என்றார். 'அது உங்கடயும் இல்லையெல்லோ? அது காணாமப்போயிருக்கும்' என்று தொடர்ந்து சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சனாதேவி நல்லதம்பி இருவருமே அதிர்ந்தனர். அதில் நூல் சுற்றப்பட்டிருந்ததை சாமி கண்டிருக்க எந்த முகாந்திரமும் இல்லை. அதுபோல அந்த மோதிரமும் அவர்களால் போன சிவன்கோவில் திருவிழாவிலே கண்டெடுக்கப்பட்டது என்பதும் அவரறிய வாய்ப்பில்லை. அவர்களால் அதிராமலிருக்க முடியாது.

ஆனால் நல்லதம்பியிடம் ஒரு தர்க்கம் இருந்தது. ஓரிடத்தில் வைக்கப்பட்ட ஒரு பொருள் காணாமல் போயிருக்கிறதென்றால், அதை யாராவது எடுத்திருக்கவேண்டும் என்பதே அது. அதை அவர் சொன்னார்.

சாமி இன்னும் தன் சிரிப்பு அகலாமலே, 'அது மறைஞ்சு போகிற வாய்ப்பும் இருக்கு, சாமி. அந்தமாதிரி நடந்திருக்கு முந்தி' என்றார்.

'அது தானாயே மறைஞ்சுபோச்சு எண்டிறியளா, சாமி.'

'பின்னை? இஞ்ச இருக்கிற மூண்டு பேரில நான்தான் வெளியாள். நான் அறைப் பக்கமே போகேல்லயெண்டது உங்களுக்கு நல்லாய்த் தெரியும். பின்ன மோதிரம் எப்பிடி காணாமப் போகும்? இப்ப பாரும், திடமாயிருக்கிற ஐஸ் கட்டி உருகி தண்ணியாகிது. அந்தத் திரவமும் கொஞ்சநேரத்தில வாயுவாய் காணாமப்போயிடுது. இஞ்ச நடந்த படிப்படியான உரு மாற்றம், மோதிர விஷயத்தில திடீரெண்டு நடந்திருக்கு, அவ்வளவுதான்.'

சாமி உள்கூடத்தைவிட்டு வெளியே வந்து விறாந்தையில் சிறிதுநேரம் தரித்து நின்ற பின் விறுவிறுவென படியிறங்கினார். நல்லதம்பி கேற்வரை ஓடிவந்தார். 'சாமி, எல்லாம் சரிதான். எனக்கு ஒண்டுதான் விளங்கேல்லை.'

'என்ன விளங்கேல்லை?'

'போட்டோவை எரிக்கச் சொன்னியளே, ஏன் சாமி?'

'அவன்ர நெஞ்சில ஆசை இருந்திது. அது பொல்லாத ஆசை. எதுக்கும் அடங்காது; நன்மை தின்மை, ஞாயம் அநியாயம் பாராது. அடங்காத தாபம் அவன்ர கண்ணில சாபமாய் வெளிவந்து கொண்டிருந்திது. அதாலதான் போட்டோவை எரிக்கச் சொன்னன்.'

'அவர் கலியாணமான கொஞ்சக் காத்தில செத்தும்போனார், சாமி. இப்ப ஆள் இல்லை.'

'தெரியும். அதாலதான் அப்பிடி. நீர் நான் சொன்னபடி போட்டோவை எரிச்சு சாம்பலை எங்கயாச்சும் கொண்டுபோய் தண்ணியில கரைச்சுவிடும். எல்லாக் கஸ்ரமும் முடிஞ்சுபோகும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி தெருவில் இறங்கி விரைந்து நடந்தார். வந்தபோதில் இல்லாதிருந்த அந்த வேகத்துக்கு ஒரு விசித்திரமானதும் முக்கிய மானதுமான காரணம் இருந்திருக்க வேண்டும். அவர் முகத்தில் ஒரு சந்தோஷத்தின் எறிகையும் அப்போதிருந்தது. நடந்து கொண்டி ருக்கையில் அவிநாசியை அவர் நினைத்துக்கொண்டார். தன் போலவே சக்தியுள்ள பெண் சாமி; தன்போலவே தாபங்களை உடம்பில் அடக்கித் தேக்கிய ஒரு மானுடத்தியும். அவளது சந்தோஷங்களும் மாதத்தின் ஒருநாளான அந்த அமாவாசைகளின் கூடற் காலங்களாக மட்டுமே இருந்தன. அவளை முடிந்தால் அந்த நூல் சுற்றிய மோதிரத்தின் மூலம் அவரால் வேறு காலங்களிலும் சந்தோஷப்பட்டிருக்க வைக்கமுடியும். அது அவளுக்கு எவ்வாறு பயனாகுமென அவருக்குத் திண்ணமில்லை. அவள் அவருடனான ஒரேயொரு பொழுதிலேயே பெண்ணாவாளென்றாலும் அவளை அந்த மோதிரம் சந்தோஷப்பட வைக்கும்.

தன் வித்தைகளின் பெரிய சொத்தை கீரிமலைக் கேணியிலே உருக்கி விட்டதற்கு ஈடாக அவர் கொண்ட துஷ்ட ஆவிகளின் துணையில் அந்த மோதிரத்தை அவரால் எடுக்க முடிந்திருந்தது. அது அவர்களது உடைமையல்லவெனத் தெரிந்த கணத்தில் திடீரென எழுந்த விருப்பமும், திட்டமும் அது. ஆனாலும் அவரின் ஒரு மன மூலையில் உறுத்தலொன்று அப்போதும் அகலாமல் இருந்து கொண்டே இருந்தது. சடத்தின் உருமாற்றங்களை விளக்குவதன் மூலம் ஒரு உண்மையை, நல்லதம்பிக்கு மட்டுமில்லை தனக்குமே, அவர் மறைத்திருக்கிறார். தன் தந்திரத்தால் வாதத்தை அவர் வென்றிருக்கலாம். ஆனால் உண்மை வலிதானதும், சாசுவதமானதும் ஆகும். ஆவியாகிப் போனாலும் திடத்தின் அம்சம் பிரபஞ்சத்தில் என்றும் இருந்துகொண்டு இருக்கத்தான் செய்யும். உண்மையும் அதுபோன்றதே.

அவர் அவிநாசி தரித்திருக்கும் ஊர்ப் புறத்துக் காளி கோவிலை அடைந்து, அவளிடம் மோதிரத்தைக் கொடுத்துவிட்டு, பனங்கூடலை அடைந்தபோது விடிந்து கொண்டிருந்தது.

படர்ந்துயர்ந்து நின்ற புற்றின் முன்னால் சப்பணிக்க அமர்ந்தார். சூரியன் வான மூலையில் எழுந்தது. நிலம் வெளித்தது. கண் மூடிய ஸ்திதியில் இன்னும் தன் அபகரிப்பின் புளகம் மாறாத சாமி. புற்றிலிருந்து பாம்புகள் ஒவ்வொன்றாய் வெளிவந்தன. சில அப்பால் நகர, சில புற்றைச் சுற்றியே சுழன்றுகொண்டு இருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதுநேரத்தில் சில சாமியின் மேலிலேறி ஊரத் துவங்கின. ஸ்பரிசத்தில் தன்னில் பாம்புகள் ஊர்வதை உணர்ந்தார் சாமி. அவை தன்னை அழுத்தமாய்ப் பற்றி இறுக்குவதும் தெரிந்தார். அப்போது மேனியில் சில இடங்களில் சுள்ளென்று தீயால் சுடும் உணர்வெழப் பெற்றார்.

சிறிதுநேரத்தில் அவருக்கு எல்லாம் புரிந்தது. ஒருவகையில் அதை அவர் எதிர்பார்த்தே இருந்தார். இன்றில்லாவிடின் நாளையாக.

அப்போது காற்று சற்று பலமாக அடித்தது. உண்மையின் ஓங்கிய குரல்போல அது இருந்தது. அது காணும் நிலையில் சாமி இருந்திருக்கவில்லை. அவரது கண்கள் மூடியிருந்தன; உடல் அசலனித்திருந்தது.

திண்ணை.கொம்,
ஜூலை 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் அன்ரி

மலர் அன்ரி எனக்கு நேரடியான சொந்தமில்லை. ஆனாலும் மலர் அன்ரியென்றே அழைத்தேன். அவளது அக்காளை மேரி மாமி என்று அழைத்து வருகையில், அவளேதான் தன்னை மலர் அன்ரியென அழைக்கச் சொன்னாள். அப்போதுதான் எனக்கும் தெரிந்தது அந்தப் புதிய சொல் மாமியென அர்த்தம் கொண்டதென. அவள் என்னோடு வெகு அன்பா யிருந்தவள். என்னை அர வணைத்து எந்நேரமும் அருகில் வைத்துக் கொண்டவள்.

இப்போது அவளையேயல்ல, என்னையே எழுதப்போகிறேனாயினும், இதில் அவளின் உள்ளும் வெளியும் தெரிய வரவேதான் போகின்றன. எனினும் இது வேறொரு அர்த்தமும் நோக்கமும் கொண்டது.

இக் கதை நிகழ் காலத்தில் அவளுக்கு சுமார் இருபது வயதிருக்கலாம். எனக்கு ஏழுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட ஒரு வயது. அவள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் அந்த வயதில் என்னில் எவ்வாறு புரிதலாகினவென்பதை, இவ்வளவு காலத்துக்குப் பின்னான அறிவு அனுபவங் களின் விளக்கப் பின்புலத்தில் நான் எழுதுவதென்பது சிரமமான விஷயம். ஆனாலும் அவள்மீதான பிரியமுடனும், சிறு பிள்ளைத்தனத்தின் சிந்தனை செயற் பாங்குகள் வெளிப் பாடு அடையும்படியுமே இதைச் செய்ய நான் முனைவேன்.

மலர் அன்ரி மாநிறம். கல்யாணமாகி வாழப் போய் கணவனை இழந்த பின் அங்கே தனியனாய்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வந்த அவளது அக்கா மேரி மாமியைவிடவும் நிறமாயிருந் தாள். அவர்களது அம்மாவின் நிறத்தோடு ஒப்பிட்டால் அவர்களைச் சிவப்பி களென்று தாரளமாகச் சொல்லிவிடலாம். அதுபோல் அவள் அழகானவளென்பதை யும் நிச்சயப்படுத்திச் சொல்லவேண்டும்.

அந்த வட்டாரத்திலேயே எஸ்.எஸ்.சி. படித்தவள் மலர் அன்ரி மட்டும்தான். பரீட்சையில் றிசல்ற் என்னவெனக் கேட்பவர்களுக்கு ‘றிபேர்ட்’ என சிறிது தயக்கமாக அவள் சொல்கிறபோது, அவள் பாஸ் செய்யவில்லை என்பதை நான் புரிந்துகொண்டிருந்தேன்.

ஊர் நாற்சந்தியின் ஒரு மூலையில் அவர்களது வீடென்றால், அதன் எதிர் மூலையில் எங்களுடைய வீடிருந்தது. அதனால் நான் அங்கேதான் நிற்கிறேனாவென்பதை மலர் அன்ரியைக் கூப்பிட்டே விசாரித்துவிடும் சுலபமிருந்ததில் நான் அங்கே போய்வருவதற்கான இடைஞ்சலேதும் என் அம்மாவிடமிருந்து ஏற்பட்டுவிடவில்லை. அது என் தம்பிக்கும் மிக அனகூலமாக இருந்திருக்குமாதலால், அம்மாவுக்கு அதில் இரட்டைத் திருப்தி. எந்நேரமும் தம்பியுடன் சண்டை பிடிக்கிறேனென்று அம்மாவுக்கு என்னில் குறை.

மலர் அன்ரி வீட்டில் வேறு சிறுவர்கள் இல்லாததோடு, அங்கே வந்து விளையாடுகிற வேறு அயற் சிறுவர்களும் இல்லாததில் அந்த வீட்டு குட்டி இளவரசனாக நான் அரவணைக்கப்பட்டேன். பள்ளி முடிந்த நேரத்திலிருந்து வார நாட்களிலும், சனி ஞாயிறுகளில் பெரும்பாலான நேரமும் எனது வீடு அதுவாகவே ஆகியிருந்தது.

மலர் அன்ரி கதைப் புத்தகங்களும், கல்கி குமுதம் ஆனந்த விகடன் அம்புலிமாமா கல்கண்டு என சஞ்சிகைகளும் நிறைய வாசிப் பாள். மேரி மாமிக்கும் அந்தப் பழக்கம் இருந்தது. கல்கண்டு சஞ்சிகை யில் வரும் கத்தரிக்காய் துப்பறியும் சித்திரக் கதை அவளுக்கு மிகவும் பிடிக்கும். அந்தப் பிடிப்பு அவள் கதை சொல்லும் விதத்தில் குறிப் பாகத் தெரியும். சொல்லாவிட்டால் அவதி தீராதென்பது போல், என்னைக் கூப்பிட்டு கூப்பிட்டு வைத்து ஒரு தீவிரத்தோடு கதை சொல்வாள்.

சில காலம் ஆக, மேரி மாமிக்கு இரண்டாம் கல்யாணம் நடந்து அவள் கணவனூர் போக, மலர் அன்ரி வீட்டிலே தனித்துப் போனாள். மலர் அன்ரியின் தாய்க்கு சந்தையிலே காலமைப்பாட்டில் மீனும், பின்னேரப்பாட்டில் கருவாடும் வியாபாரம். காலை யிலே போனாளென்றால் அவள் வீடு திரும்ப எப்படியும் இருண்டுவிடும். தகப்பனுக்கு ரயில்வேயில் சிங்களப் பகுதியிலே வேலை. இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வீட்டுக்கு வருவதே அபூர்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும் தங்குவது குறைவு. ஒரு சனிக்கிழமை காலையிலே வந்தாரென்றால், ஞாயிறு மாலையில் பையைத் தூக்கிக்கொண்டு கிளம்பி விடுவார். அவர் அங்கே ஒரு சிங்கள மனுஷியோடு குடும்பம் நடத்துவதாக ஊரிலே ரகசியப் பேச்சு இருந்தது.

அவர் அவ்வாறு வந்து வீட்டிலே தங்கும் நாட்களில் நான் அங்கே போவது கிடையாது. அவரைக் கண்டாலே எனக்குப் பயம். அப்படியொரு சிரிப்பற்ற முகமும், தொனி பெருத்த குரல்வாகும் அவருக்கு.

மலர் அன்ரியின் தாயோடு அவரை ஒப்பிடுகை யில் அவருக்கு அவளைவிட பத்து பதினைந்து வயதாவது குறைவுபோல் தோன்றும். ஆனால் அந்த மாயத் தோற்றத்தில் நான் மயங்கியதில்லை. ஏனெனில் கணவர்களுக்கு எப்போதும் மனைவியரைவிட வயது கூடவெனவே நான் நம்பியிருந்தேன்.

மேரி மாமி கல்யாணமாகிப் போன பின், தாயும் சந்தை வியாபாரத்திலிருந்து திரும்பி நடந்து வர இருண்டுவிடுமாதலால், மலர் அன்ரி தனியாகத்தான் வீட்டிலே இருந்துவந்தாள். பள்ளி முடிந்து வந்த நான் வீட்டிலே சிறிது தாமதித்துவிட்டாலோ, ஒழுங்கையில் நடக்கும் போளை அடி, காசுகட்டு, புள்ளடி விளையாட்டுகளில் பராக்காகி நின்றுவிட்டாலோ மலர் அன்ரியே தேடிவந்து என்னைக் கூட்டிப்போய் விடுவாள்.

அப்போது மாரி தொடங்கியிருந்தது.

நத்தாருக்கு சில நாட்கள் இருந்தன.

ஒருநாள் பொழுது சாய்கிற நேரமாய் தேவ சகாயம் மலர் அன்ரி வீட்டுக்கு வந்தான். தேவ சகாயத்தை எனக்குத் தெரியும். ஊர்த் தொங்கலில் வயல்கரைப் பக்கமாய் அவனது வீடு இருந்திருக்க வேண்டும். அங்கிருந்துதான் சைக்கிளில் வேலைக்குப் போய் வருவான். பெல் தேவையில்லாத சைக்கிள் அவனது. அதுவாகவே சப்தித்துக்கொண்டுதான் வரும்; போகும். கொஞ்சக் காலத்துக்கு முன்புதான் பாஸை யூரிலிருந்து அங்கே அவனது தாய் தகப்பன் காணி வாங்கி வீடு கட்டிக்கொண்டு வந்திருந்தார்கள். ஐயா யாருடனோ கதைக்கும்போது சொன்ன ஞாபகம். பல சிறுவர்களும் அவனை சகாயமண்ணை என்றும், பெரியவர்கள் சகாயம் என்றும் அழைத்தார்கள். நானும் அவனை விளிக்க நேர்ந்தவை குறைந்த சந்தர்ப்பங்களென்றாலும் சகாயமண்ணையென்றே அழைத்திருக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வந்த சகாயமண்ணை பின்வளவில் போய் பனை மட்டையொன்று வெட்டிவந்தான். கருக்குச் சீவி, அதைப் பிளந்து, தேவையான அளவுகளில் துண்டு துண்டாக வெட்டினான். முக் கோணம், சதுரங்கள் வரும்படியாக அவற்றை தடித்த நூலெடுத்து கட்டத் தொடங்கினான். 'ஏனிது, மலரன்ரி?' யென நான் கேட்க, 'வெளிச்சக் கூட்டுக்குத்தான்' என்றாள் அவள். வேதக்காரர் அதிகமாய்க் குடியிருக்கும் அந்த ஊரிடத் தில் நத்தார்க் காலத்திலே அவ்வாறு சில வீடுகளில் கட்டுவதை நான் கண்டிருக்கிறேன்.

பனைமட்டைக் கீறுகள் கட்டப்பட்டு முடிந்த தும் வர்ண ரிசூப் பேப்பர்களை அளவாக வெட்டி ஒவ் வொரு கட்டத்துக்கு ஒவ்வொரு வர்ணம் வரக்கூடிய வாறு சகாயமண்ணை அவற்றை பசையினால் ஒட்டினான். பிறகு காயும்வரை தொடவேண்டாமெனக் கூறி வீட்டுக் கூரையின் உட்புறத்தில் ஒரு வசதியான இடம் பார்த்து வெளிச்சக் கூட்டைக் கட்டி தொங்கவிட்டான். 'ரண்டொரு நாள் போகட்டும், வந்து பாக்கிறன்' என்றவன், பின் சிறிது நேரம் முற்றத்தில் நின்றபடியே மலர் அன்ரியோடு கதைத்துவிட்டு போய்விட்டான்.

அங்கே வருகிற நேரமெல்லாம் வீட்டுக் கூரையில் கட்டித் தொங்கவிட்டுள்ள வெளிச்சக் கூட்டை அண்ணாந்து அண்ணாந்து பார்ப்பதே எனக்கு வேலையாகிப் போனது. 'வெளிச்சக்கூடு இன்ன மும் காயேல்லயோ, மலரன்ரி? எப்ப கட்டுவியள்?' என அன்ரியை அடிக்கடி கேட்கவும் ஆரம்பித்துவிட்டேன். அவளும், 'சகாய மண்ணை வந்துதான் பாத்துச் சொல்ல வேணும்' என்று சுலபமாகச் சொல்லி தப்பித்துக் கொண்டு இருந்தாள்.

சகாயமண்ணை நாளுக்கு இரண்டு மூன்று தடவைகள் வேலைக்கோ வேறு அலுவல்களுக்கோ அந்த றோட்டால் சைக் கிளில் போய்வருகிறான், முற்றத்தில் அல்லது படலையில் மலர் அன்ரி நிற்பதைக் கண்டால் சைக்கிளை மறித்து நின்று பேசுகிறான், வெளிச்சக் கூடு காய்ந்திருக்குமா என்பதை அன்ரி கேட்டிருக்கலாமே யென எனக்குத்தான் துக்கமாகிப் போகும்.

மேரி மாமிக்கு குழந்தை பிறந்ததாய் போஸ்ற் கார்ட் தகவல் வந்து, மலர் அன்ரியின் அம்மா அவளைப் பார்க்க போயிருந்த வேளையில், நத்தாருக்கு இன்னும் நாலு நாள் இருப்பதாக மலர் அன்ரி கணக்குப் பார்த்துச் சொன்னதற்கு அடுத்த நாள் மாலையில் சகாய மண்ணை மறுபடி அங்கே வந்தான்.

நான் அப்போது அங்கேதான் நின்றிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மழை வாற சிலமனும் இல்லை; நேரமுமிருக்கு; அப்ப... இண்டைக்கே வெளிச்சக் கூட்டை கட்டியிடுவம், மலர்' என்றான்.

மலர் அன்ரி குளித்து வந்து, உடுப்பு மாற்றி, தலையிழுத்து, பவுடர் போட்டு, பொட்டு வைத்து நல்ல வடிவாய் நின்றிருந்தாள். 'அதைப் பாக்கத்தான நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறம்' என தன் தெத்துப் பல்லின் ஒருவித அழகு சிதற சிரித்தாள் அவள்.

சகாயமண்ணை மலர் என்று அழைத்ததையே பிடிக்காதிருந்த எனக்கு, மலர் அன்ரி சிரித்துக்கொண்டு பதில் சொன்னது விசரைத் தான் கிளப்பிற்று. ஏன் பிடிக்க வில்லையென்றெல்லாம் தெளிவாய்த் தெரிய வில்லையே தவிர, அந்தப் பிடிப்பின்மை இருந்தது மட்டும் நிச்சய மாய்த் தெரிந்தது.

சூரியன் மேற்கே சாய்ந்துகொண்டு இருந்தது. இருள வெகுநேரமில்லை இனி. சகாயமண்ணை அவசர மானான். அவன் எதிர்ப் பக்க வளவிலுள்ள வெறுங் காணி நாவல் மரத்தில் ஒரு முனைக் கயிற்றைக் கட்டி, மலர் அன்ரியின் வளவு வேப்ப மரத்துக் கிளையிலே மறுமுனையை முதலில் தொங்கவிட்டான். பிறகு வெளிச்சக் கூட்டை, கயிற்றின் முனையை இழுத்தால், அது றோட்டின் மத்தியில் உயர்ந்து நிற்கக்கூடியவாறு கட்டி முடித்தான்.

வேலை ஆரம்பிக்கும் முன்னரே தன் சேர்டைக் கழற்றி விறாந்தையில் மறைப்புக்குக் கட்டியிருந்த மூங்கில் தட்டியிலே போட்டிருந்ததில், சகாயமண்ணையின் கரிய வெறுமேனியில் வியர்வை குளித்ததுபோல் வழிந்துகொண்டிருந்தது. துளி துளியாய் அவை வழிந்து உதிர்வதை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டி ருந்தாள் மலர் அன்ரி.

புதுச் சைக்கிள் வைத்திருக்கிற நாகராசா வோடும் சிலவேளை மலர் அன்ரி கதைப்பதுண்டு. 'டேய்... வாடா... போடா' என்று 'டா' போட்டுத் தான் பேசுவாள். அவ்வாறு பேசினால் பரவாயில்லை யென்றுதான் அப்போது நான் நினைத்திருந்தேன். ஆனால் சகாய மண்ணையோ பேய்க் கறுப்பாயிருந்தாலும், நாகராசாவைவிட அழகானவாய் இருந்தான். தன்னைக் கவனிக்கும்படி செய்யும் ஒரு வசீகரம் அவனிடத்தில் இருந்தது. அவனது வெறுமேனியில் வழிகிற வியர்வை எனக்கோ பார்க்கவே அருவருப்பாய் இருக்க, மலர் அன்ரி அதையே உற்று உற்றுப் பார்ப்பதும், அவனுக்குக் கிட்டக் கிட்ட வாய்ப் போய் நிற்பதும் எனக்குப் பிடிக்கவேயில்லை.

என்ன நினைத்தாளோ, திடீரென மலர் அன்ரி அடுக்களைக்கு

13398CC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடினாள். சிறிதுநேரத்தில், 'செபமாலை மாதாவே...!' என்று அவள் அங்கிருந்து கூவியது கேட்டது. பின் என்னைக் கூப்பிட்டாள். நான் செல்ல, 'ராசா, சகாயமண்ணை பாவமெல்லே, எவ்வளவு களைச்சுப் போய் இருக்கிறார், நீயும் பாத்தியெல்லே, ஒரு தேத்தண்ணியாச்சும் நாங்கள் வைச்சுக் குடுக்கவேணு மெல்லோ, காலமையே சீனி முடிஞ்சுபோச்செண்டது எனக்கும் இப்பதான் ஞாபகம் வந்திது, சின்னக் காலால ஓடிப்போய் கடையில கா றாத்தல் சீனி வாங்கிக் கொண்டு வந்திடுறியா' என்று கேட்டாள்.

நான் தயங்கினேன். கணபதி கடைதான் சுற்று வட்டாரத்தில் எங்கள் வீடுகளுக்குக் கிட்ட உள்ள கடை. என்றாலும் போய்வர இருண்டுவிடும். அதற்குள் வெளிச்சக் கூட்டை சகாயமண்ணை மேலே கட்டி யிட்டால்...? நான் அதைச் சொன்னேன்.

'கட்டமாட்டார். நீ வாறமட்டும் கட்ட வேண்டாமெண்டு நான் மறிச்சு வைப்பன்' என்று உறுதி சொன்னாள் மலர் அன்ரி. நான் சம்மதித்தேன்.

மலர் அன்ரி அடுப்படிப் பரணிலிருந்த அடுக்குப் பெட்டி யெடுத்து காசு பொறுக்கி எண்ணித் தந்தாள். அவள் குனிந்து காசு தந்த போது, பின்னேரத்தில் குளித்திருந்தவளின் மேனியிலிருந்து வாசச் சோப்பின் வாசனை மூச்சில் அடித்தது. பெரிய கழுத்துச் சட்டைக் கூடாக நெஞ்சப் பிளவு தெளிவாய்த் தெரிந்தது. முன்பெல்லாம் அவளை நான் அந்தமாதிரிக் கண்டதே யில்லை. ஆனாலும் எனக்கு பறந்துபோய் கடையில் சீனி வாங்கிக்கொண்டு வருவதே முதன்மைச் சிந்தனையா யிருந்தது.

காசு கையில் கிடைத்தமாத்திரத்தில் எடுத்தேன் ஓட்டம்.

கடையிலே அந்தநேரத்தில் சனமாய்த்தான் இருந்தது. ஒருமாதிரி துளைத்துக்கொண்டு நுழைந்து, முன்னாலிருந்த மேசைக்கு மேலாக தலையை உயர்த்தி, 'கா றாத்தல் சீனி தாருங்கோ... கா றாத்தல் சீனி...' எனச் சொல்லிக்கொண்டே நின்றேன். விளக்கு வைக்கிற நேரத்தில் எங்கிருந்து வந்த பெடியனோ, இருட்டு முன்னம் போகட்டுமென எண்ணிப்போலும் கடைக் காரர் சீனியை கட்டித் தந்தார். சரையை வாங்கியதும் அம்மா அவ்வப்போது சொல்லி யனுப்பும் 'கடையில எப்பவும் மிச்சக் காசை கேட்டு வாங்கவேணும், இல்லாட்டி அவை மறந்துபோவின' என்ற வார்த்தைகள் ஞாபகமாக, 'மிச்சக் காசு' என்றேன்.

'கா றாத்தல் சீனி எட்டுச்சதம்தான்; மிச்சமில்லை.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மறுபடி விசையெடுத்தேன்.

மேற்குத் திசைப் பனங்கூடலுக்குள் மஞ்சள் பெரு வட்டத்தில். இன்னும் சூரியன் நின்று கொண்டிருந்தது.

சென்ற வேகத்தில் நான் தகரப் படலையைத் திறந்த சத்தம் பெரிதாய்க் கேட்டிருக்கும். விறாந்தை மூங்கில் தட்டி மறைப்பில் நின்றிருந்த சகாயமண்ணை யும் மலர் அன்ரியும் இறங்கி முற்றத்துக்கு வந்தார்கள்.

மலர் அன்ரி சீனிச் சரையை என்னிடமிருந்து வாங்கிப் போய் சகாயமண்ணைக்கு தேத்தண்ணீர் போட்டுவந்து கொடுத்தாள்.

சகாயமண்ணை தேநீர் அருந்தி முடிந்ததும், வெகு ஆர்வமாய் வெறும் கோப்பையை வாங்கி விறாந்தையில் மலர் அன்ரி வைக்க, வெளிச்சக் கூட்டு வேலையில் கவனமானான் சகாயமண்ணை. தூரத்தில் பக்குவமாய் வைத்திருந்த கடதாசிச் சரையிலிருந்து இரண்டு மெழுகுதிரிகளை கொளுத்தி வெளிச்சக் கூட்டின் சப்பையான தடித்த நடுத் தண்டில் நன்கு பொறுத்திருக்கும்படி அமைத்தான். பின் மெதுவாக வேப்ப மரக்கிளையில் தொங்கவிட்டிருந்த கயிற்றை இழுத்து இழுத்து வெளிச்சக் கூட்டை மேலே வரச் செய்தான்.

வெளிச்சக் கூடு கட்டியாகிவிட்டது. இனி அங்கே எனக்கு வேலையில்லை. வெளிச்சக் கூட்டை கீழேயிருந்தல்ல, தூரவிருந்து பார்த்தாலே அதனழகு இன்னும் கூடவாய்த் தெரியுமென்று எனக்குத் தெரிந் திருந்தது. நான் வெளிச்சக் கூட்டைப் பார்த்தபடி றோட்டில் பின்னோக்கி நடந்து நடந்து எங்களது வீட்டை யும் தாண்டிப் போய் றோட்டு முகரியில் நின்றேன்.

இருள் கவியக் கவிய வெளிச்சக் கூட்டின் மஞ்சள் பச்சை சிவப்பு வெள்ளை நீல காவி நிறங்கள் விகசிப் படையத் துவங்கின. ஒருபொழுது பார்த்த போது மலர் அன்ரியும் சகாயமண்ணையும் படலைக்கு முன்னால் நின்றிருந்தது தெரிந்தது. மறுபொழுது பார்த்தபோது இருள் அவர்களை விழுங்கியிருந்தது. எனக்கு அது பற்றி ஒன்றும் தோன்றவில்லை. என் நெஞ்சு முழுக்க வெளிச்சக் கூடு காண்பதின் பரவசம் நிறைந்திருந்தது.

என்னை அழைத்த அம்மாவின் குரல் வீட்டிலிருந்து எழுந்தது. அப்போதுதான் கவனித்தேன், றோட்டில் அங்கங்கே வீடுகளின் முன்னால் நின்று வெளிச்சக் கூடு காண்போரின் தொகை.

மறுநாள் பொழுதுபடும் வேளையிலும் மலர் அன்ரி வீட்டுக்கு சகாயமண்ணை வந்தான். வெளிச்சக் கூட்டை புது மெழுகுதிரிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொளுத்திவைத்து உயர ஏற்றிக் கட்டிய பின் சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு போய்விட்டான். மறுநாளும் அவன்தான் வந்து வெளிச்சக் கூட்டை ஏற்றினான்.

இப்போதெல்லாம் மலர் அன்ரி வீட்டில் நான் அதிகநேரம் தங்குவதில்லை. வெளிச்சக் கூடு ஏற்றியதும் றோட்டு முகரிக்கு வந்து விடுவேன். மலர் அன்ரி பாவம் தனிய என்ற எண்ணம் அவ்வப்போது எழத்தான் செய்யும். ஆனாலும் இன்னும் சிறிதுநேரத்தில் பக்கத்து வீட்டு அன்னம்மா ஆச்சி படுக்கைத் துணைக்கு வந்து விடுவாள் தானேயென்று சமாதானம் ஆகிக் கொள்வேன்.

'வெளிச்சக் கூடு வைச்சாப் பிறகு நீ இஞ்ச வந்தாலும் கனநேரம் நிக்கிறாயேயில்லையே, ராசா. மலரன்ரி பாவம்... தனியா இருப்பா வெண்டு நெக்க மாட்டியோ?' என ஒரு நாள் மலர் அன்ரி கேட்கவும் செய்தாள். 'அன்னம்மா ஆச்சி வருவாவெல்லோ?' என்றேன் நான். 'அவ வர எவ்வளவு நேரமாகுமோ? கொழும்புக் கோச்சு வாற சத்தம் கேட்டாப் பிறகுதான் அவ வீட்டைவிட்டு வெளிக்கிடுவா.'

நான் அதற்கு ஒன்றும் சொல்வதில்லை.

நத்தாருக்கு முந்திய நாள் மாலையில் மலர் அன்ரியின் அம்மா மேரி மாமியின் வீட்டிலிருந்து திரும்பிவிட்டாள்.

நத்தாரிலன்று சகாயமண்ணை வெளிச்சக் கூடு வைக்க வர வில்லை. சிறிதுநேரம் காத்திருந்து ஏமாறிய நான் மலர் அன்ரியிடம், 'இண்டைக்கு வெளிச்சக் கூடு ஏத்திறேல்லையோ?' என்று கேட்டேன். அவள்தான் சொன்னாள், 'இண்டைக்கு சகாயமண்ணை வர மாட் டார்; பாஸையூர் போயிட்டார்; நான்தான் கூடேத்தப் போற' னெண்டு.

எனக்குப் பரபரப்பாகிப் போனது. மலர் அன்ரி யாலும் அது ஏலுமாவென்று பார்க்க ஆர்வம் மேவிப் போனேன். அவள் கொய்யாப் பழம் பிடுங்க கொய்யா மரமென்றும், நாவல் பழம் உலுப்ப நாவல் மரமென்றும் ஏறி இறங்கிற ஆள்தான். மலர் அன்ரி யால் முடியுமென்றால் இனி சகாயமண்ணை அங்கே வரத் தேவையில்லையென எனக்குச் சந்தோஷமாக இருந்தது.

சிறிதுநேரத்தில் எதுவித சிரமமுமில்லாமல் வெளிச்சக் கூட்டில் மெழுகுதிரி கொழுத்திவைத்து கூட்டினை மேலே ஏற்றினாள் மலர் அன்ரி. 'உங்களுக்கும் வெளிச்சக் கூடேத்த தெரியுது, மலரன்ரி' என நான் புளகித்து நிற்க, 'சகாயமண்ணைதான் சொல்லித் தந்தவர்' என்றாள் அவள்.

எனது புளுகம் பொத்தென்று மடிந்தது. அத்தனை நாட்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகாயமண்ணை வெளிச்சக் கூடேற்றுவதைக் கண்டு தானாகவே தான் அவள் அதைத் தெரிந்துகொண்டாளெனவே நான் கருதியிருந்தேன். சகாயமண்ணையிடமிருந்து அல்லாமல் நாகராசாவிடமிருந்து அறிந்திருந்தால் நான் அவ்வாறு எண்ணியிருப் பேனோ தெரியாது.

புது வருஷம் வந்தது. முன்னதோ பின்ன தோவாக இரண்டொரு தடவைகள் சகாயமண்ணை அங்கு வந்துபோனான்.

வருஷம் முடிந்து ஒரு வாரமாகியது.

இப்போது வெளிச்சக் கூடு இறக்கி வைத்தாகி விட்டது. இனி அடுத்த நத்தாருக்குத்தான். அப்போதும் மழை வராவிட்டால்தான் வெளிச்சக் கூடு ஏற்றலாம்.

ஆனாலும் எனக்கு தைப்பொங்கல் கொண்டாட்டம் விரைவில் வரவிருந்தது.

தைப் பொங்கல் வருகிறதென்றால் சீன வெடிச் சத்தங்கள் எழத் துவங்குவது மட்டுமில்லை, வீடுகளும் கலகலப்பு கொள்ளத் துவங்கு கின்றன. அடுப்பு பிடிப்பதி லிருந்து, பொங்கல் பானை வாங்குவது வரை எல்லாமே ஒரு கொண்டாட்டத்தின் களிநிலையையே உருவாக்குகின்றன.

ஒருநாள் மாலை, தைப்பொங்கலுக்கு முன்னதாகத்தான், மலர் அன்ரி வீடு போயிருந்தேன். படலையைத் திறக்கத்தான் தெரிந்தது, சகாயமண்ணையும் அங்கே நின்றிருப்பது. நான் அதை எதிர்பார்த் திருக்கவில்லை. அவனது சைக்கிள்கூட படலைக்கு வெளியில் நின்றிருக்கவில்லையே.

சிறிதுநேர உரையாடலின் பின் மலர் அன்ரி அடுக்களைக்குப் போனாள். என்னை அழைத்தாள். நான் போக, கடைக்குப் போய் வருகிறாயாவெனக் கேட்டாள். வெளிச்சக் கூடேற்றுவது பார்க்கும் ஆவல் அப்போது இல்லாததில் நானும் பிகுவின்றிச் சம்மதிக்க, அடுக்குப் பெட்டியில் தேடி எட்டுச் சதம் எடுத்துக் கொடுத்தாள். குனிந்து என்னிடம் காசு தருகையில் அப்போதும் கண்டேன், அவள் அணிந்திருந்த பெரிய கழுத்துச் சட்டைக் கூடாக அவளது துல்லியமான நெஞ்சுப் பிளவை.

நான் கடைக்குப் போய்க்கொண்டிருந்தபோது தான் தெரிந்தது, சகாயமண்ணை தன் சைக்கிளை எங்கே விட்டிருந்தா னென்று. அவனது பழஞ் சைக்கிள் பக்கத் துக் காணியோடுள்ள வேலிப் புதருக்குள் நின்றிருந்தது.

மறுநாள் பொங்கலென்றிருந்த குதூகலமான ஒருநாளில் நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் அன்ரி வீட்டுக்குப் போனபோதும் சகாயமண்ணை அங்கே நின்றிருந்தான். நான் படலை திறந்து உள்ளே நுழைய இருவருமே சத்தமின்றிச் சிரித்தார்கள்.

மலர் அன்ரி அன்றைக்கு மிகவும் வடிவாக விருந்தாள். பெரிய கழுத்துச் சட்டை அணிந்திருந்தாள். பவுடர் பூசியிருந்தாள். இரட்டைப் பின்னலிட்டு றிப்பன் கட்டியிருந்தாள். பின்னல் தன் அசைவுக்குத்தக்க ஆடும் படி அவள் இங்குமங்குமாய்ச் சரிந்து சரிந்து கிணு கிணுத்தாள்.

பின்னரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். அப்போது நான் நினைத்துக் கொண்டேன், மலர் அன்ரி இனி அடுக்களைக்கு பாய்ந்தோடுவாளென. அப்படியே அவள் செய்தாள். இனி கடைக்குப் போய்வர என்னை அழைப்பாளென நான் எண்ணினேன். அவளும் அப்படியே என்னை அழைத்து கடைக்குப் போய்வர கேட்டாள்.

அவர்களது கொடுப்புச் சிரிப்பு மனத்தைக் குடைந்து கொண்டிருந்ததில் இந்தமுறை கடைக்குப் போக எனக்கு விருப்ப மிருக்கவில்லை. நான் மௌன மாய் நின்றுகொண்டிருக்க என்னை மெதுவாக மலர் அன்ரி அணைத்து, 'அச்சாப் பிள்ளையெல்லே... ' எனக் கெஞ்சினாள்.

நெஞ்சோடு சேர்த்த அந்த இதமான அணைப்பு என்னைச் சம்மதிக்கச் செய்தது. நான் காசை வாங்கிக் கொண்டு புறப்பட்டேன்.

மலர் அன்ரிமீதான எனது கோபம் போய் விட்டிருந்த தென்றாலும், சகாயமண்ணைமேல் கொண்டது இன்னுமிருந்தது. அதில் இன்னும் என் முகம் கடுகடுப்பாகவே இருந்தது. சகாய மண்ணை அதைக் கவனித்திருப்பான்போலும். படலைவரை என்னையே பார்த்தபடி நின்றிருந்தான்.

போகும்போது அவன் வழக்கமாக தன் சைக்கிளை மறைவாய் விடும் வேலி மூலையைப் பார்த்தேன். சைக்கிள் நின்றிருந்தது. ஏதோ கள்ளத்தின் காரணமே அவன் சைக்கிளை அவ்வாறு விட காரண மென்று நெஞ்சுக்குள் சந்தேகம் குமைந்தெழுந்தது. போகும் வழி முழுதும், சீனி வாங்கிக்கொண்டு வரும் வழி நெடுகிலும் அதுபற்றியே நான் யோசித்திருந்தும் அக் கள்ளத்தின் காரணத்தை என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. அதனால் கோபம்தான் ஏறியது.

கோபம் சகாயண்ணைமீது மட்டுமல்ல, இப்போது மலர் அன்ரியிலும். அவள் ஏன் என்னையே எப்போதும் சீனி வாங்கிவர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்கு அனுப்புகிறாள் என்பதினால் அது. ஒவ்வொரு தடவை சகாயமண்ணை வரும்போதும் அவளுக்குச் சீனி ஏன் முடிந்து போகிறது; அப்படி முடிந்திருந்தாலும், ஒவ்வொரு தடவையும் அவனுக்கு தேத்தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று இல்லையே யென நான் மறுகினேன்.

அந்தக் கோபத்தில் சீனிச் சரைக்குத்தான் ஒரு நுள்ளுக் கொடுத்தேன். மழைக்கு உவனித்திருந்த மண்ணிறச் சீனி அந்தத் துவாரத்திலிருந்து பதுங்கிப் பதுங்கி செய்யலாமா வேண்டாமா என்பது போல்தான் கொட்டுண்டது. அதுபோதும். என்னவிருந்தாலும் மலர் அன்ரி அல்லவா? அவளது அன்பும் அணைப்பும் எவ்வளவு இதமானவை?

ஆனால் சகாயண்ணை மீதான கோபம் அப்படியேதான் இருந்தது. மலர் அன்ரி என்னைப் பார்த்துச் சிரித்தாலும், அவன் எப்படிச் சிரிக்கமுடியும்? மேலும் அவனிடம் ஏதோ கள்ளமுமிருக் கிறது. அவனுக்கு ஏதாவது தீங்கு செய்தே ஆகவேண்டுமென நான் நிச்சயித்தேன். அதற்கேற்ற ஐடியாவும் உடனடி யாக உதித்தது.

நான் றோட்டின் இரு பக்கங்களையும் திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன். யாருமில்லை. மெதுவாக அவன் சைக்கிள் விட்டிருந்த இடத்தை அணுகுகிறேன். மறுபடியும் றோட்டைக் கவனித்து யாரும் காண வாய்ப்பில்லையென்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, சைக்கிளின் பின் சில்லில் 'வால்வ் கட்டை' எங்கே இருக்கிறதென தேடுகிறேன். அதைக் கண்டுகொள்ளப் போதுமான வெளிச்சம் இன்னும் வெளியில் இருக்கிறது. நான் 'வால்வ் கட்டை'யை இளக்க முயன்றேன்.

'மூதேவி...' எரிச்சலாக வந்ததெனக்கு. அது கழர சிரமப் பட்டது. கையிலிருந்த சீனிச் சரையை கழிசான் பொக்கற்றுக்குள் திணித்துவிட்டு, ஒரு கையை சைக்கிளில் ஆதாரத்துக்குப் பற்றிக் கொண்டு மறுபடி என் வலிமையெல்லாவற்றையும் திரட்டி கட்டையை முறுக்கினேன். அது மெல்ல அசைந்து கொடுத்தது. நான் மேலும் திருகினேன். இப்போது இன்னும் சுலபமாகிப்போனது எனக்கு.

ஆனால் மறுகணம் திறபட்ட வேகத்தில் காற்று புஸ்ஸென்று சீறிக் கிளம்ப கைப்பிடிக்குள்ளிருந்த 'வால்வ் கட்டை' அப்படியே பாய்ந்து எங்கோ மறைந்தது.

மெதுவாக காற்றைத் திறந்துவிடும் எண்ணம் தான் என்னிடத்தில் இருந்தது. இப்போதோ 'வால்வ் கட்டை'யே பறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்துவிட்டது. எனக்கு பெரிய அதிர்ச்சி. அதிலிருந்து விடுபடு முன்னம் காற்று சீறி வெளிவந்த இரைச்சல் மலர் அன்ரி வீட்டிலிருக்கும் சகாய மண்ணைக்கு கேட்டிருக்குமோவென்று இப்போது பயமாகிவிட்டது. 'வால்வ் கட்டை' கையிலிருந்தாலாவது மறுபடி அதைப் பூட்டிவிட்டு போய்விடலாம். காற்று போனதற்கு அந்தக் கல் றோட்டில் காரணம் தேடவேண்டிய அவசியமில்லை. இப்போது பெரும் பிழை செய்து மாட்டிக்கொள்ளப் போகிற அவதி என்னில்.

நான் றோட்டில் ஏறி மெதுமெதுவாக மலர் அன்ரி வீட்டை அடைந்தேன். மலர் அன்ரி சிரித்தபடி வந்து, 'ஏன் ராசா இவ்வளவு நேரம்' என்று கேட்டு சீனிச் சரையை என்னிடமிருந்து வாங்கினாள். 'கடையில சரியான சனம், மலரன்ரி' என நான் சொன்னேன்.

அன்றிலிருந்து மலர் அன்ரி வீடு போவதை சகாயமண்ணையின் பயத்தில் குறைத்துக்கொண்டேன். அதிசயமாக சகாயமண்ணையின் வரத்தும் அங்கே குறைந்துகொண்டு வந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. சிறிதுகாலத்தில் அது நின்றே போனது. எனது மனப்பயம் ஒரு முடிவுக்கு வந்தது.

நான் சுதந்திரமானவனாக பழையபடி மலர் அன்ரி வீடு போய்வரத் துவங்கினேன்.

சிறிது காலத்தில் அவளது தந்தை ஒரு சிங்கள தேச மாப்பிள்ளையைக் கூட்டிவந்து அவளுக்கு கல்யாணம் செய்து வைத்தார்.

ஏனோ, அந்தச் சிங்கள ஆள்மீதும் எனக்கு வெறுப்புத்தான் வந்தது.

ஜீவநதி,
செப்.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லில் மறைந்தவள்

யாழ் பல்கலைக் கழக கலைப் பீடத்திலிருந்து 2000இல் வெளியேறி, அப்போது வெளிநாடுகளில் அகதிகளாகவும் குடியுரிமை பெற்றவர்களாகவும் வசித்தவர்களில் பன்னிரண்டு குடும்பங்கள் தமது ஐந்தாவது ஒன்றுகூடலுக்காக அந்த 2018 ஒகஸ்ற் 11 சனிக்கிழமை மாலை டென்மார்க்கிலுள்ள சிவநேசன் வீட்டில் கூடியிருந்தன. அதன் உறுபயன் அவர்களால் உணரப்பட்டதோ இல்லையோ, அந்த இடம் மட்டும் வெகு கலகலப்பிலும், மகிழ்ச்சியிலும் இருந்து கொண்டிருந்தது. வெடிச் சிரிப்பு, கிணுகிணுச் சிரிப்பென பல வகைச் சிரிப்புகளும் அங்கே பொங்கிக் கொண்டிருந்தன.

இறுதி யுத்தத்தின் உடனடிப் பின்னாக இலங்கை சென்ற சர்வேஸ்வரன், பல்கலைக் கழகத்தில் தன்னுடன் படித்தவனும், அப்போது ஜேர்மனியில் குடியிருந்தவனுமான மூனா. கனகசபையை கொழும்பு செட்டித் தெருவில் எதிர்பாராதவிதமாகச் சந்தித்த போது நிகழ்த்திய உரையாடலில்தான் அந்த ஒன்றுகூடலுக்கான திட்டம் விழுந்தது. மூனா.கனகசபையும் அதை ஆதரிக்க, செட்டித்தெரு தேநீர்ச்சாலையொன்றில் அதற்கான நடைமுறைத் திட்டங்கள் உடனடியாக இருவரிடத்திலும் விரிவுபெற்றன.

சர்வேஸ்வரன் பிரான்சுக்கும், மூனா.கனகசபை ஜேர்மனிக்கும் திரும்பிய பின்னரும் ஆறு மாதங்களாயிற்று தம்மோடு படித்தவர்களைத் தொடர்பு கொண்டு திட்டத்தைக் காரிய சாத்தியமாக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவொன்றும் உண்மையில் சுலபமான காரியமாக இருக்கவில்லை. மிகுந்த பிரயாசையில் போன் நம்பர்களை எடுத்துத் தொடர்பு கொண்ட போது, தமக்கெல்லாம் அந்தமாதிரி நேரத்தைச் செலவிட வாய்ப் பில்லையென பலபேர் வெளிப்படையாகவே அவர்களது மனம் சோரும்படி அந்தத் திட்டத்தைத் தட்டிக்கழித்தார்கள். மூனா. கனகசபை முற்றாகச் சோர்ந்துவிட்டபோது, சர்வேஸ்வரனே மூச்சாக நின்று 2011 ஓகஸ்ட் மாதம் பிரான்சில் ஐந்து நண்பர்களின் ஒரு ஒன்றுகூடலை ஏற்பாடுசெய்தான். அவர்களும் மனைவி பிள்ளைகள் சகிதம் வந்து தத்தம் உறவினர்களதோ நண்பர்களதோ வீட்டில் தங்கிக்கொண்டு மாலைகளில் சர்வேஸ்வரன் வீட்டில் நான்கு சந்திப்புகளைச் செய்தனர். மூனா.கனகசபையின் மகள் ரூபிணி பரத நாட்டியமாடி ஒன்றுகூடலின் முதல் கலை நிகழ்ச்சியை நிகழ்த்தியது அப்போதுதான்.

அடுத்த ஆண்டுச் சந்திப்பு மேலும் சில நண்பவுகளின் அதிகரிப்போடு நோர்வேயில் நடந்தது. சர்வேஸ்வரன் எவ்வளவு தான் உற்சாகமாக அந்த ஒன்றுகூடல்களை ஒழுங்கமைக்க உழைத் திருந்தாலும் 2013இல் ஒரு சந்திப்பை ஏற்பாடுசெய்ய முடியாது போனான். அதிலிருந்து இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை சந்திப்ப தென முடிவானது. அதன்படி 2014இல் லண்டனிலும், 2016இல் சுவிஸிலும் அவை நடைபெற்றன. டென்மார்க்கில் அப்போது நடந்து கொண்டிருக்கிற அந்தச் சந்திப்பு ஐந்தாவதாக இருந்தது. சிறியவர் களின் மிருதங்கம் வயலின் வீணையென இசைக் கருவிகளின் தனித் தனி வாசிப்பும் அந்த மாலைகளில் நடைபெற்றன. அடுத்தடுத்த ஆண்டுகளில் இன்னும் சிறப்பாக அடுத்த தலைமுறையினரின் கூடு தலான கலைப் பங்களிப்புடன் நடக்குமென்பதற்கு அவர்களிடத்தில் நம்பிக்கையையும் அது ஏற்படுத்தியது.

பிள்ளைகளும் பெண்களும் உள்ளே இரவுச் சாப்பாட்டு மும்முரத்திலிருக்க, ஆறு நண்பர்கள் தனியாக பின்புற புல்தரையில் உற்சாக பானம் அருந்திக்கொண்டு இருந்தனர். மூனா.கனகசபை யென்ற பெயரின் விசித்திர அமைவை யாரோ குறிப்பிட, அதற்கான விளக்கத்தின் பின்னால் அங்கே தானா.கனகசபையின் பிரஸ்தாபம் வந்தது. தொடர்ந்து ஆனா.கனகசபையை யாரோ குறிப்பிட்டார்கள். அவன் அப்போது வெள்ளவத்தையில் ட்ரவல்ஸ் நடத்துவதான தகவலை வசீகரன் சொன்னான். பின் அவனே பல்கலை வளாகத்துச் சூழலில் குடியிருந்த அமரசுந்தரி ஆனா.கனகசபையின் ட்ரவல்ஸில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது வேலைசெய்கிற விபரத்தையும் தெரிவித்தான். உண்மையில், கூடிப் படித்த அத்தனை பெண்களைவிடவும் ஓ.எல். படித்துவிட்டு வீட்டிலிருந்த அமரசுந்தரி அப்போது கம்பஸ் மாணவர்களுக்கிடையே பெரும் ஆதர்ஷம் பெற்றிருந்தாள். அதற்கு அவளது கனத்த தனங்களும், தடிப்பமான கீழுதடுமே காரணமென்று அவரவரும் தமக்கிஷ்டப்படி போதையில் வர்ணித்தனர்.

அவர்களது கொச்சையான ரசனை சர்வேஸ்வரனுக்குப் பிடிக்கவில்லை. அமரசுந்தரிக்கு அப்போது முப்பத்தைந்து வயதாவது இருக்கும், கல்யாணமாகி இரண்டொரு பிள்ளைகளுக்கு தாயாகவும் இருக்கக்கூடும், அவர்களது ரசனை அவளது நடத்தைமீதான கேள்வியாக தொனிக்கக்கூடுமென எச்சரித்தும் அவர்களது உற்சாகம் நின்றுவிடவில்லை. அவ்வாறான ஒன்றுகூடல்களை பண்பாட்டின் வேர்களைத் தேடுவதற்கும், அவற்றை தம் அடுத்த சந்ததியினரிடத்தில் கடத்துவதற்குமான நடவடிக்கையாக அவன் எப்போதும் கருதியும் சொல்லியும் வந்திருந்தான். ஆனாலும் பழைய நண்பர்களின் ஒன்றுகூடல் வேளைகளில் யாரையும் நேரடியாகப் பாதிக்காத அவ்வகைப் பேச்சுக்களை தடைசெய்துவிட முடிவதில்லை என்பதும் அவன் அறிந்ததே.

ராஜலிங்கம்கூட அந்தப் பேச்சுக்களை உதாசீனப்படுத்துவது போல் அடிக்கடி அங்காலே போய் சிகரெட் புகைத்தபடி நின்றுகொண்டிருந்தான்.

சர்வேஸ்வரன் அதை ஏற்கனவே கவனித்திருந்தான். அவ்வாறு மூன்றாவது முறை செய்கிறபோது அவனும் பின்னால் எழுந்து சென்றான். ‘எல்லாம் கவனிச்சுக்கொண்டுதான் இருக்கிறன்’ என்று மெல்ல பேச்சைத் துவக்கினான். ‘நீயேன் எழும்பியெழும்பி இஞ்சால வந்து நிக்கிறாய்? அமரசுந்தரிபற்றிப் பேசுறது பிடிக்கேல்லையோ...?’

தன் முன்னால் நின்றவனை ராஜலிங்கம் தீர்க்கமாய்ப் பார்த்தான். அந்த ஆர்வம் சிறிது எரிச்சலைக் கொடுத்தாலும், சர்வேஸ்வரனுக்குச் சொல்வதில் எந்தப் பாதிப்பும் வந்துவிடாதென அவனுக்குத் தெரியும். அவன் நீண்ட கால நண்பன் மட்டுமில்லை, தூரத்து உறவினனும். ஆனால் பிரச்னை என்னவெனில், விஷயம் மிகவும் நுண்மையாக இருந்ததில் அதைப் புரிந்துகொள்ள அதிகமானவர்களால் முடியுமா என்பதுதான். ஒரு நுண்மையான மனவுணர்வு ஓர் அபவாதமாக உருமாறக்கூடிய அபாயம் அதில் இருக்கிறது. அதுவொரு மனித சபலத்தின் பலஹீனமான ஒரு தருணத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளுள் அடித்த அலைகள் மட்டுமே. அவை சம்பவங்களாக விரிவதன் முன்னால் ஒரு சொல்லில் அவிந்துபோய்விட்ட கனவு களும். அதனால் அந்த விஷயத்தை மூடிவைத்துவிடுவதே சிலாக்கிய மானதென எண்ணினான் ராஜலிங்கம்.

இரவுணவு முடிந்து பத்து மணிக்கு மேல் அவரவரும் தாங்கள் தங்கியிருந்த நண்பர்களதோ உறவினர்களதோ வீடுகளுக்குச் செல்ல, சிவநேசனும் படுக்க உள்ளே போனான். தான் படுக்க நேரமாகு மென்று சொல்லிவிட்டு ராஜலிங்கம் கூடத்துள் வந்தமர்ந்தான்.

அவன் யோசிக்க நிறைய இருந்தது. அமரசுந்தரியை ஒருமுறை யோசிக்கலாம். கூட, ஆனா.கனகசபையையும் கொஞ்சம். சபலத் திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான வெளி ஒரு விந்தையால் போல் கடக்கப்பட்டதையும் அவன் எண்ணவேண்டும். ஒழுக்கத்தி லிருந்து ஆசைக்கும், ஆசையிலிருந்து ஒழுக்கத்திற்கும் சறுக்கிச் செல்லும் தந்திரம் அவன் அறிந்தானாயினும், அதைச் செய்வதில் அறத்தைக் கடந்துசெல்லும் தருணங்களை அவன் எப்போதும் விலக்கியே வந்திருக்கிறான். அதில் அமரசுந்தரி கதை ஒன்று. நேற்றைய அனுபவத்தை அவனுக்கு இன்றும் நாளையும்கூட தேவை. அதற்காக அந்த யோசிப்பு அவனுக்கு அவசியமாகப் பட்டது.

மகரகம ஆஸ்பத்திரியில் இருந்த தனது சின்னம்மாவைப் பார்க்க ராஜலிங்கம் நோர்வேயிலிருந்து கொழும்பு சென்றிருந்த வேளையில், அவனது சின்னம்மாவின் நிலைமை மோசமாகத்தான் இருந்தது. தாய்க்குத் தாயாகவிருந்து வளர்த்தவளின் நிலைமையைப் பார்த்துத்தான் ஊர் வரமுடியுமென வீட்டுக்கு அறிவித்துவிட்டு அவன் காத்திருந்தான்.

கொழும்பு செட்டியார் தெருவில் அப்படியென்ன விஷேச மிருக்கிறதோ? ஒரு முருகன் கோவில், சற்றுத் தள்ளி ஒரு பிள்ளையார் கோவில், இன்னும் தள்ளி கதிரேசன் தெரு வந்து சேருகிற அரசமரச் சந்தியில் ஒரு சிவன் கோவிலும் எதிர்ப்பக்கத்தில் ஒரு பாரும் சமீபமாய் பூபாலசிங்கம் புத்தகசாலையும் இருக்கின்றன. இருந்தும் வெளிநாடு களிலுள்ள இலங்கையரின் பெரும்பாலான சந்திப்புக்கள் அந்தத் தெருவிலேயே நிகழ்ந்துவிடுகின்றன. ஜேர்மனியிலிருந்து வந்திருந்த ரமணனை செட்டியார் தெருவில்தான் ராஜலிங்கமும் சந்தித்திருந் தான். அவன்தான் ஆனா.கனகசபையென்கிற தன்னூர் நண்பன் ட்ரவல்ஸ் நடத்துகிற விபரம் சொல்லி பயணத் திகதி மாற்றங்களுக்கு, உள்ளூர் வெளியூர் வாகனத் தேவைகளுக்கு அவனை அணுகலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று ஆலோசனை கூறியது.

ஒருநாள் மாலை வெள்ளவத்தை சென்றிருந்த இடத்தில் ஆனா.கனகசபையின் ட்ரவல்ஸை தேடினான் ராஜலிங்கம். ஒரு நீலக் கட்டிடத்தின் முதலாம் மாடியில் கே.அழகரட்னம் ட்ரவல்ஸ் இருப்ப தாய் ரமணன் சொன்னது அவனது ஞாபகத்தில் இருந்தது. அவன் மேலே சென்றபோது ட்ரவல்ஸ் திறந்திருந்தது. ஆனா.கனகசபை ட்ரவல்ஸில் இருந்திருந்தான். அங்கேதான் அமரசுந்தரியையும் ராஜலிங்கம் முதன்முதலாக நேரில் சந்தித்தான்.

அதிகமாகப் பேசவோ, கலகலவென வாய் திறந்து சிரிக்கவோ தெரியாத அமரசுந்தரியிடத்தில் ஒரு அம்சம் சிறப்பாயிருந்தது. கழுத்தைச் சாய்த்து அவள் வீசுகின்ற பார்வையில் அவளது கண்களில் தோன்றும் வசீகரம் அற்புதமாயிருக்கும். அவள் மூக்குமின்னி அணிந்திருந்தாள். மிகச் சாமான்யம் ஆனதாய்த்தான் இருந்திருக்கும். ஆனாலும் அவள் கழுத்தை ஒருக்களித்துச் சாய்த்து நோக்குகையில் அது பளீர் பளீரென முகமே மின்னலடிப்பதுபோல் தோன்றச் செய்தது. அந்த முகத்தில் இயல்பாய்ச் சிவந்திருந்தன இதழ்கள். அதில் கொஞ்சம் பெருத்த கீழுதடு. அதுதான் காமத்தை அந்த ஒல்லித்த உடம்பில் அழுத்தமாய் எழுதியிருந்ததோ?

ஒருநாள் அவளது குடும்ப நிலைபற்றி விசாரித்தான் ராஜ லிங்கம். சொல்லும்போது ஒரு கணம் கண்கலங்கினாள். 'யாழ்ப் பாணம் போட்டு வாறனெண்டு போனவர்தான். என்ன நடந்ததெண்டு தெரியா. இப்ப நாலு வரியமாச்சு. ரண்டு வருஷமா தேடாத இட மில்லை. பிறகு... மூண்டு வாய்க்கு சாப்பாடு தேடுற தேவையிருக்கே, வேலை... அலைச்சல்... இப்பிடியே காலம் போய்க் கொண்டிருக்கு.'

கணவனைக் காணாமல் ஆகியவளென்பது பச்சாத்தாபம் மட்டுமில்லை, சிலருக்கு ஒருவகைச் சபல எண்ணமும் உள்நுழையும் வாசலாக இருந்துவிடுகிறது. ராஜலிங்கமும் அந்தச் சலனத்துக்குத் தப்பவில்லையென்று தெரிந்தது. இரவுகளிலே அமரசுந்தரியின் நினை வேற்றிய உடலின் தகிப்புகளினால் அவன் வதங்கத் தொடங்கினான்.

நோர்வே திரும்பி ஓராண்டுக்குள்ளாக மறுபடி கொழும்புக்கு வந்தான். வரும் வழியெங்கும் அமரசுந்தரியின் நினைவுகளே அவனை உடற்றிக்கொண்டிருந்தன. அவளின் நினைவுகளே அவனை அங்கே விரட்டினவென்றும் சொல்லலாம். ட்ரவல்ஸ் பூட்டிவிடப் போகிறதேயென்று அந்தரப்பட்டு சென்றான். அங்கே அமரசுந்தரி இருந்திருந்தாள். அப்போதுதான், ஆனா.கனகசபையின் வீட்டிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தங்கியிருப்பதை அவள் சொன்னாள். அது தனக்கு பாணந் துறையிலிருந்து வந்துபோகும் மூன்று மணி நேரத்தையும் அதன் அலைச்சலையும் மிச்சப்படுத்துவதாகக் கூறினாள். கொட்டாஞ் சேனை, மருதானைப் பகுதிகளில் சிறிய வீடொன்றுக்கு ஏஜன்ரிடம் சொல்லிவைத்திருப்பதைச் சொன்னபோது அது நல்லதென்றான் அவன். அவனது அழுத்தத்தின் புள்ளியில் தன் கவனம் பட்டதுபோல் தலையைச் சாய்த்து இயல்பானதும் கவர்ச்சிகரமானதுமான தன் பார்வையை விசிறினாள் அமரசுந்தரி.

ஒருநாள் மாலையில் தன்னோடு விமானத்தில் வந்திருந்த ஒரு நோர்வே வெள்ளைப் பயணக் குழுவினரை ராஜலிங்கம் வீதியில் சந்தித்தான். போர் நடந்த இடமெல்லாம் சென்று பார்க்க அவர் களுக்கு வேனொன்று வேண்டியிருந்தது. அவர்களைக் கூட்டிவந்து அறிமுகமாக்கியதில் ஆனா.கனகசபை வெகு உற்சாகமாகிப் போனான். அன்று எப்படியும் 'தண்ணி' அடிக்கவேண்டுமென்று ட்ரவல்ஸை பூட்டிவிட்டுச் செல்லும்போது அமரசுந்தரியுடன் வீட்டுக்குப் போகும்படி அவனிடம் சொல்லிய ஆனா.கனகசபை வேறு வேலையாகக் கிளம்பிவிட்டான்.

அமரசுந்தரியோடு கூடிக்கொண்டு ராஜலிங்கம் கடற்கரைப் பக்கமிருந்த ஆனா.கனகசபையின் வீட்டிற்கு நடந்தான். கூடிச் செல்லும் புளகிதம் கைகோர்த்துச் செல்லும் பரவசத்துக்குத் தூண்டின. அவன் மனம் அடங்கிச் சென்றான். பழைமை பொருந்திய உயரமான மதில்களுக்குள்ளே இருந்தது அந்த வீடு. பழைய வீடானாலும், பெரிதாக இருந்தது. பெரிய பெரிய காட்டுக் கற்களில் பொழிந்துவைத்த படிகள் தேய்மானத்தின் மினுப்புக் காட்டியபடி இருந்தன.

உள்ளே குமிழ் பல்புகள் இரண்டு முழு வீச்சில் வெளிச்சத்தைப் பிரவாகித்தபோதும் கூடத்துள் ஈர வாசனையோடு கூடிய இருளே நிறைந்திருந்ததாய்ப் பட்டது ராஜலிங்கத்திற்கு. சமையலறைக்கு அப்பாலிருந்த இரண்டு சின்ன அறைகளுள் ஒன்றிலிருந்து பழைய பாடல்களை ரேப் ரிக்கோடரொன்று சத்தமாக இரைந்து கொண்டி ருந்தது. அத்தனையும் பிரிவுச் சோகத்தின் நெஞ்சுசிதைக்கும் சினிமாப் பாடல்களாக இருந்தன

பாடலொலித்த அறையிலிருந்து அவ்வப்போது வந்து கூடத்துள் காலாற நடக்கும் பாவனையில் எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள் ஒரு முதியவள். அவளை சாந்தகுமாரியென்றும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா.கனகசபையின் உறவினளென்றும் அமரசுந்தரி சொன்னாள்.

ஆனா.கனகசபை பத்து மணிக்கு மேலே வந்தான். அவஉகள் குடித்து, சாப்பிட்டு முடித்தபோது இரவு பன்னிரண்டு மணி ஆகியிருக்க, அந்தநேரத்தில் ஹோட்டலுக்கு போகவேண்டாமென்று அவனை அங்கேயே படுக்கச்சொல்லிவிட்டான் ஆனா.கனகசபை.

அது பெரும்பாலும் அடிக்கடி நடவடிக்கையாக ஆகி வந்திருந்தும், அவளோடான அந்தரங்க உரையாடல் ஒன்றுக்கான வசதியை அங்கே ராஜலிங்கம் காணவில்லை. எட்டு மணியளவில் அமரசுந்தரியோடு ஆனா.கனகசபையின் வீடு செல்கிறான்; தொங்கல் அறையிலிருந்து சோகம் திணிந்த சினிமாப் பாட்டொலி கிளர்ந்து கொண்டிருக்கிறது; கேட்கும் மனங்களையும் அது தன் சோகத்துள் இழுத்து ஆழ்த்துகிறது; அவர்கள் கூடத்துள் அமர்ந்ததும் அவ்வப் போது வெளியே வந்து காலாற நடப்பதுபோல் வேவு செய்கிறாள் சாந்தகுமாரி; அவளது அறையிலிருந்து றேடியோப் பாடலும் தன்னிச்சாபூர்வமாய் அவ்வப்போது வெளியே வந்து வேவின் மாயம் புரிவதுபோல் தோற்றம் காட்டுகிறது; அது அவனை நினை வெல்லாம் உறைந்துபோக வைக்கிறது. அவன் எப்போதும் எதையும் பேச எண்ணியதில்லைப்போல் வெறுமை பூணுகிறான். போகிற நாளெல்லாம் நிலைமை அதுவாகவே அவனுக்கு அமைந்துவிடுகிறது.

ஒருநாளிரவு வெகுநேரமாய் ஆனா.கனகசபைக்காக காத் திருந்து விட்டு அமரசுந்தரியும் ராஜலிங்கமுமாகச் சாப்பிட்டு முடிய அவன் ஹோட்டலுக்கு கிளம்பினான். 'றோட்டில ஆமியும் பொலிசு மாயிருந்திது பின்னேரம் முழுக்க. வீண் கரைச்சல் என்னத்துக்கு, காலமை போங்கோவன்' என்றாள் அமரசுந்தரி. அவள் சொல்வதன் நியாயம் அவனுக்குப் புரிந்தது.

ஏறுவெய்யில் ஜன்னலூடாய் சுளீரென்று அடித்து எழும்ப, சமையலறையில் ஆனா.கனகசபையும் அமரசுந்தரியும் கதைவழிப் பட்ட சத்தம் கேட்டது. ராஜலிங்கம் கதவைத் திறந்து வெளியே வர, சந்தடியில் திரும்பிய ஆனா.கனகசபை அவனைக் கண்டுகொண்டு, 'ரா முழுக்க நித்திரை முழிச்சு வான் ஓடினது. படுக்கப்போறன்' என்றுவிட்டு போய்ப் படுத்துவிட்டான்.

ராஜலிங்கம் வெளிக்கிட்டுக்கொண்டு கிளம்பினான்.

மனதின் கனதியில் அவனது நடைகூட வழமையான வேகம் குன்றியிருந்தாய்த் தோன்றியது, பின்னால் அவனையே பார்த்தபடி நின்றிருந்த அமரசுந்தரிக்கு. திரும்பிய அவனும் அவளைக் கண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்போல் அவளுக்குள்ளும் நினைவின் சுமைகளாக அந்த விருப்பங்களின் முடிவின்மைக்கான அவலம் இருந்திருக்குமா? அவன் எண்ணினான்.

ஆனால் ராஜலிங்கத்தின் ஏக்கம் கடைசிவரை தீராமலே இருந்துவிட்டது, அவன் அவசரமாக நோர்வே திரும்ப நேர்ந்ததில்.

வாரங்கள் சில கழிந்து மனத் தவனத்தின் அருட்டல் மிகுந்த ஒருபொழுதில் கே.அழகரட்னம் ட்ரவல்சுக்கு ராஜலிங்கம் போனெடுத்தான். அமரசுந்தரியே பேசினாள். 'போனதுக்கு இப்பதான் நினைப்பு வந்துதோ?' என்றாள். பின்னால் கிணுகிணுப்பைத் தொடர்ந்தாள்.

'நினைப்பு வந்திது. ஆனா என்ன பேசுறதெண்டுதான் தெரியேல்ல...'

'முந்தி நீங்கள் பேசுறதுக்கு கன விஷயம் இருந்திது. இப்ப ஒண்டுமில்லைப்போல?'

அவள் தன்னின் மனத்தை வாசித்திருப்பதை ராஜலிங்கம் புரிந்தான். 'மனத்தில எவ்வளவோ விஷயம் இருந்திதுதான். அப்ப நேரில பேசேலாதத, இப்ப...'

'தெரியும். அந்த மனிசி உங்களைப் பேச விடேல்லை. மனசி... பாட்டு... வெளிச்சம் குறைஞ்ச வீடு... எல்லாம் எந்த விஷயத்தைப் பேசுறதுக்கும் ஏற்ற மனநிலையை அங்க தந்திடாது. எனக்கிருந்த அதே தடையள்தான் உங்களுக்கிருந்ததும்.'

அதுபோதுமே! அவள் பேச நினைத்திருந்தாள் என்பதே ஒரு பதில்தானே. அவன் எண்ணிக் களித்திருக்கையில், 'இப்ப நான் மருதானையில வீடெடுத்து இருக்கிறன்' என்றாள் அவள். அவனது மெய் சிலிர்த்தது. அதுவொரு அழைப்பு, சிறிதாகவோ பெரிதாகவோ.

'அது நல்லது. ம்.... இன்னொரு விஷயம் சொல்லவேணும். நான் அங்க பேசுறதுக்கு எனக்கு இன்னொரு தடையிருந்திது' என்றான் ராஜலிங்கம். 'ஆனா.கனகசபை என்னை முழுதுமாய் நம்பியிருந்தான். அது என்னைப் பேசவிடேல்லை. காவலெண்டா மீறியிருப்பன். ஆனா... அந்த நம்பிக்கை... உங்களுக்கு விளங்குதா?'

சிறிதுநேர மௌனத்தின் பின் அவள் சொன்னாள்: 'எனக்கொண்டும் விளங்கேல்லை. நான் நானாய்த்தான் அங்க இருந்தன். ஆற்றையும் சொத்தாயில்லை. என்னை வைச்சு ஆரும் தங்கட நம்பிக்கையை வளர்த்திருக்கத் தேவையில்லை.'

'இல்லை... அவன்ர வீட்டில இருக்கிறமட்டும் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்ர பாதுகாப்பிலதான? அதை நான் மதிக்கவேணும்.'

'அப்ப... என்னையும் ஒரு ஜடமாய்த்தான் பாத்திருக்கிறியள், இல்லையே? சரி, எப்பிடியெண்டான்ன நினைச்சிட்டுப் போங்கோ. இப்ப என்ன பேச எடுத்தியள்... அதைச் சொல்லுங்கோ...' அவள் சிறிது கோபம் அடைந்திருந்தாள்போல் ராஜலிங்கத்துக்குத் தோன்றியது. நிலைமையை சரியாகவேதான் அவள் கணித்திருக்கிறாள் என்றும் அவன் எண்ணினான். ஆனால் அவளும் தன்போல் அடங்கிப் போனவள் என்பதையும் அவனால் அப்போது நினைக்காமிலிருக்க முடியவில்லை. அவன் சடுதியில் கேட்டான்: 'அவன்ர நம்பிக் கையை அழிச்சிடக்குடாதெண்ட பயம் உங்களுக்கு இருக்கேல்லையோ, அமரசுந்தரி?'

அவள் சிரித்தாள். 'அது நம்பிக்கை சார்ந்த விஷயமில்லை. என்ர அன்றாடச் சீவியம் சம்பந்தமானது. ஒரு வேலை... ஒரு தங்கிற இடம்... இப்ப கொழும்பு இருக்கிற நிலைமையில இதையெல்லாம் கவனிக்காம இருந்திடேலாதெல்லோ? இப்ப பாருங்கோ...'

சொல்லிவருகையில் புதிய காட்சிக்கான பின்னணியிசை மாற்றம்போல் அவளது பேச்சின் தொனி மாறியது. சொற்கள் இடறுப்பட்டன. 'ஓமண்ணை... ஓமண்ணை... நல்லாயிருக் கிறன்... இஞ்ச... சேரும் வந்திட்டார், குடுக்கிறன், கதையுங்கோ' என்றாள் அமரசுந்தரி அவசரமாக.

'யாரை அண்ணையென்று விளித்தாள்? என்னையா, முன்னால் நின்ற யாராவது வாடிக்கையாளரையா? அல்லது வேறொரு சொல்தான் அந்தமாதிரி எனக்குக் கேட்டுதோ?' அவன் ஒன்றும் விளங்காமல் போனை காதோடு வைத்தபடி விறைத்து நின்றிருந்தான். சிறிதுநேரத்தில் ஆனா.கனகசபையின் குரல் வந்தது. சுகம் விசாரித்தான்... அடுத்த கொழும்புப் பயணம் எப்போதென கேட்டான்... பின் அவசரமாய் மட்டக்கிளப்பு பயணமாவதாகச் சொல்லி ரிஸீவரை அவளிடம் கொடுத்துவிட்டு போய்விட்டான்.

அவள் தெளிந்து கிணுகிணுத்தபடி எதுஎதுவோ பேசிக் கொண்டிருந்தாள். அவன் செவித் துளைகளில் அவை விழுந்திருக்க வில்லை. அவள் அவசரத்தில் உதிர்த்த அந்த ஒற்றைச் சொல் இன்னும் அவன் காதுகளில் ஓர் அடைப்பாயிருந்து சப்த வெளியையே சூன்யமாக்கிக் கொண்டிருந்தது. அது அவனை அவளிலிருந்து வேறாக்கியது; எட்டத்தில் தள்ளியது.

ஒரு வார்த்தையே அந்த ரசவாதத்தை நிகழ்த்தியதெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவொரு மந்திரச் சொல்.

தன் உள்ளை ஆனா.கனகசபையிடம் மறைக்க அமரசுந்தரி எடுத்த சொல், அதன் மாயத்தின் வழி அவளையே ராஜலிங்கத்தி லிருந்து மறைத்துவிட்டதை அவனது மௌனத்தில் உணராதவள், 'ஹலோ... ஹலோ...!' என்றுகொண்டிருந்தாள்.

தொடர்பிருந்தும் சொல்லற்ற இடைவெளியொன்று அவர்களுக்குள் நெடுநேரமாய் விழுந்திருந்தது.

ஆண்டுகள் சிலவாய் அமரசுந்தரி அவன் மனத்தில் மறதியாகி யிருந்தாள். அன்றைக்கு அந்த ஒன்றுகூடலில் அவளை மறுபடி ஞாபக மாகும் நிலை நேர்ந்துவிட்டது. அதை அவன் அஞ்சவில்லை. அந்தச் சொல் இன்னும் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்து அவளை அணுகக்கூடாதவளாய் அவனிடத்தில் செய்துகொண்டு இருக்கும். ஏனெனில் அச்சொல் பண்பாட்டின் இருசில் வேர் கொண்டிருக்கிறது.

தாய்வீடு,
நவ. 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 MAR 2021

# லவ் இன் த ரைம் ஒஃப் கொரொனா

பகலிலே அந்த இடத்தில் தோன்றியிருக்கக் கூடிய அவசங்கள், வெளிச்சம் படராது இருள் விழுந்த முற்றத்தின் ஓரத்தில் அமர்ந்திருந்த அவனிடத்தில் அப்போது எழுந்திருக்கவில்லை. உருவத்தை இருட்டில் கரைத்துவிட்டு இருப்பதுபோல் ஓர் நிறைவு.

அதுவரை பக்கத்திலிருந்த நண்பன் முருகவேல் சிறிதுநேரத்திற்கு முன்னர்தான் டான் தொலைக்காட்சி யில் செய்தி பார்க்கவென உள்ளே எழுந்துபோனான். அவனுக்குமே அந்த உந்துதல் எழுந்தது. பின் ஏதோ வொரு சலிப்பில் பேசாமல் இருந்துகொண்டான்.

அவன் வானெறிந்த நட்சத்திரங்களும், அதன் மேலலைந்த மேகங்களும் கவனமின்றிக் கண்டபடி இருந்தான். திடீரென கோவில் வளவு மரக்கூடலிலிருந்து ஒரு சாக்குருவி திடீரென அலறியடித்துப் பறந்தது. அவனது உடம்பு லேசாக ஆடியது. கடந்த சில தினங்களாக அவ்வாறுதான் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. தன் அடையாளத்தை மறைத்துக்கொண்டு இருக்கின்ற ஒரு ஆத்துமம் அந்தமாதிரித்தான் எந்த வொரு திடீர்ச் சத்தத்திலும் சந்தடியிலும் திடுக்காட்டம் அடையுமோ?

கீழ் வான் மூலையிருளினுள் சாக்குருவியின் கதறல் போய் மறைய, சூழல் அவதானத்துக்கு வந்தது. சிறிதுநேரத்தில் தெருவில் நிலந் தீற்றிய காலடிச் சத்தம் அவன் கேட்டான். அது மெலிந்து மெலிந்து வந்து வேலிக்கு வெளியே ஓரிடத்தில் சடுதியாய் நின்றது.

வேலியின் கீழ்ப் பகுதியிலுள்ள முட்கம்பி வரி களுக்கு மேலாக பக்கப்பாட்டில் தகரங்கள் அடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தன. போன மாரியின் கடும் காற்றுக்கு அதில் நட்டிருந்த காட்டுக்கட்டை சரிந்து தகர இணைப்பு ஊடு விட்டிருந்த இடத்தில் தான் காலடி அரவம் அடங்கியிருந்தது. அவனுக்கு எழுந்து உள்ளே போய்விடுகிற அவதி. ஆனாலும் இருளில் இன்னும் நம்பிக்கை வைத்து விநாடிகளை விழுங்கிக் கொண்டிருந் தான்.

அரவம் மறுபடி சத்தமாய் விரிந்தெழாததைக்கொண்டு ஆகிருதி இன்னுமே அந்த இடத்தில் நிலைத்திருப்பதாக அவன் நினைத்தான். அந்த உருவத்தின் கண்கள்கூட அந்த நீக்கலினூடே தன் மேல் நிலைத்திருப்பதாக ஒரு கணம் தோன்றிற்று. கடந்த சில நாள் களின் பகல்கள் கவனத்தில் விழுத்தியிருந்த முகங்களை அவன் நினைவுக்குக் கொண்டுவர முயன்றபோது சில முகங்கள் கலவரத் துடன், சில முகங்கள் எரிச்சலுடன், இன்னும் சில எந்த உணர்வுமற்ற வெறுமையுடனென வரச் செய்தன. ஆனால் எந்த முகத்தை அந்த உருவத்தில் பொருத்தி அவன் அடையாளம் காண்பது? இல்லை, கண்டுதான் என்ன செய்துவிடப் போகிறான்? தன்னிருப்பை அங்கே ஒழித்து வைத்திருப்பவனால், 'ஆரங்க நிக்கிற' தென உறுக்கிவிடவா முடியும்?

ஒரு எட்டு மணியின் முன்னிரவுக் காலடிச் சத்தமும் பின் அது கொண்ட மௌனமும் ஒருவரில் அந்தளவு அச்சத்தைக் கிளர்த்துவது சாதாரண சூழ்நிலைமைகளில் எங்கேயும் சாத்தியமில்லை. முன்பு யுத்த காலத்தில் அதிலொரு திகில் இருந்திருக்கலாம். அவ்வாறு இருந்ததை அந்யோன்யமாய் அந்த வீடு வந்துசெல்லும் அக்கம் பக்கத்தவர் அவனுக்குச் சொல்லியிருக்கிறார்கள். சந்திராகூட சொல்லியிருக்கிறாள். அவளது அனுபவங்கள் அவர்களதைவிட இன்னும் பயங்கரமானவை.

அவ்வூர்க்காரனாக இல்லாததால் அவனுக்கு அந்த அனுபவங் களில்லை. அப்போது அந்த நாட்டவனாகக்கூட அவன் இல்லை. என்ன பாதகம் அதனால் நேர்ந்துவிடக்கூடும்? அவன் பாஸ்போர்ட் வைத்திருக்கிறான்; மூன்று மாதங்களில் ஒரு மாதம் கழிந்த விசா அதில் இருக்கிறது. ஆனாலும் அவை எதுவுமே இப்போது முக்கியமில்லை யென நிலைமை மாறியிருக்கிறது. பிரச்சினை அங்கே, அந்த ஊரில், அவனது இருப்புப்பற்றியதாக மட்டுமே இருக்கிறது.

தன் பயணத்தில் இலங்கையின் வடபகுதியிலுள்ள அந்த சின்னக் கிராமத்திற்கு வருவதான எந்தத் திட்டமும் அவனிடத்தில் இருந்திருக்கவில்லை. அவன் மிகவும் வசதியாக யாழ் நகர எல்லைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் ஒரு சிறிய வாடகை வீட்டில் தங்கி, திறமான கடையொன்றிலே சாப்பிட்டுக்கொண்டு கொழும்பென்றும் திருகோணமலையென்றும் மட்டக்கிளப்பென்றும் கிளிநொச்சியென்றும் அலைந்தபடி வசதியாகவும் சந்தோஷமாகவும்தான் கடந்த ஒரு மாதத்தைக் கடத்தினான். அரியாலையில் அண்ணன் வீட்டின் புதுப்பித்தல் வேலைகள் முடிந்துவிட்டால் திட்டமிட்டபடி ஏப்ரல் 19இல் அவன் நாடு திரும்பி விடுவான்.

ஆனால் எதிர்பார்த்திராத நிலைமையொன்று நாட்டிலே சடுதியில் வந்து விழுந்துவிட்டது. அவன் கனடாவிலிருந்து ஜனவரி 2020இல் புறப்பட்டபோது தொற்று நோய் டிசம்பர் 2019 அளவில் சீனாவிலேதான் பரவத் துவங்கியிருந்தது. மரணங்கள் அங்கேதான் விழுந்துகொண்டிருந்தன. ஆனால் அப்போது ஆசியாவே, முழு உலகமுமே, ஒரு பதகளிப்பில் இருந்துகொண்டு இருந்தது. எல்லாமும் எல்லாரும் ஒரு முடக்கத்தில் ஒடுங்கிக் கிடக்கும்படியான அவதியாக நிலைமை மாறிவிட்டது. அது அவனது சகல இயக்கங்களையும் குலைத்துப்போட்டது. ஒரு திட்டமின்றி தீவடங்கப் பரந்து திரிந்தவன் ஒரேயடியாக முடங்கிப்போனான். அத்தனை மனிதர் களைக் கொண்டிருந்த நல்லூர் பூமி உற்றம் சுற்றமென யாருமில்லாத தால் அவனுக்கு தரிசு பூமியாய் மாறிவிட்டது. அறிந்தவர் தெரிந்தவர் இல்லாத இடத்தில் அந்தப் புதிய நிலைமை தன்னை திசையறியாப் பாலைவனத்தில் தூக்கி வீசிவிட்டிருந்ததாய் உணர்ந்தான்.

உடனேயே கொழும்பு போய் அடுத்த விமானத்தைப் பிடித்து அவன் கனடா சென்றுவிடலாம். ஆனால் அண்ணன் சொல்லிவிட்ட வேலையை முடிக்க இன்னும் குறைந்தது ஒரு மாதமாவது ஆகும் போலிருந்தது. அண்ணன் தந்த காசில் ரிக்கற் போட்டு வந்தவனுக்கு அது அவசியமானது. அவன் அண்ணனிடம் பட்டுள்ள வேறு கடப்பாடுகளும்கூட இருந்தன. அவன் அண்ணனிடம் அபிப்பிராயம் கேட்டாவது மேல்நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உடனடியாக கனடாவுக்கு போனெடுத்தான். அண்ணிதான் பதிலளித்தாள். ‘ஒரு கிழமை முந்தி வந்திருக்கலாம். இப்ப இஞ்சயும் அது பரவத் துவங்கியிட்டுது, மூர்த்தி. ரொறன்ரோவில முதல் சாவும் விழுந்திட்டுது. இலங்கை தீவாயிருக்கிறதால அங்க பாதுகாப்பாய் இருக்குமெண்டு எல்லாரும் கதைக்கினம்’ என்றாள் அண்ணி.

‘தீவாயிருக்கிற பாதுகாப்பு இனி இஞ்சயில்லை, அண்ணி. இத்தாலியிலயிருந்து வந்த ரூறிஸ்ரால இஞ்சயும் நோய் பரவத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்கியிட்டுது.'

'எதுக்கும் கவனமாயிரு. அண்ணை இப்பதான் கடைக்குப் போயிருக்கு, வந்தோடன எடுக்கச் சொல்லுறன்...'

அண்ணனும் போனெடுத்து அந்தப் பதிலையே சொன்னான். 'அவசரப்படாத. எப்பிடியும் இஞ்ச இருக்கிறதவிட அங்க பாதுகாப் பாய்த்தான் இருக்குமெண்டு நினைக்கிறன். இஞ்ச பள்ளிக்குட மெல்லாம் லீவு விட்டிட்டாங்கள்; பக்டரியெல்லாம் பூட்டு. நான் இப்ப ஒரு கிழமையாய் வீட்டிலதான் நிக்கிறன். அண்ணி வீட்டில யிருந்து வேலைசெய்யிறா. கொஞ்சம் பொறுத்துக்கொள், பாத்துச் செய்யலாம்.'

'பாத்துச் செய்யலாமெண்டு அண்ணன் சொல்லியிட்டா, பாத்துத்தான் செய்யவேணும்.' அவன் காத்திருக்கத் தீடமானித்து அன்றைய இரவைக் கழித்துவிட்டு காலையில் எழும்ப தகவல் தெரிந்தது, அங்கே பள்ளிகளுக்கு மறு அறிவித்தல்வரை விடுமுறை விட்டிருப்பதாக. பல்கலைக் கழகங்களும் இரண்டு வாரங்களுக்குப் பூட்டப்படுவதாக யாரோ சொன்னார்கள். பலசரக்குக் கடைகளில் கூடிய கூட்டமே ஓரவதியின் முன்னறிவிப்பாய் கண்களில் விழத் துவங்கிவிட்டது. சிலர் அது கண்டு கேலியாய்ச் சிரித்தார்கள்; பின்னர் அவர்களுமே கையுறை முகக் கவசங்கள் இல்லாமல் ஒரு வெக்கறைச் சிரிப்போடு கடை வாசல்களில் மாவும் சீனியும் அரிசியும் பருப்பும் வாங்க கியூவில் நின்றார்கள்.

அந்தப் பரபரப்பில் ஆழ்ந்துபோயிருக்கையில் அதை அதிகரிக்கிறமாதிரி அன்று மாலை தகவல் படர்ந்தது, மறுநாளி லிருந்து இரண்டு நாட்களுக்கு அரச பஸ்கள் ஓடாவென.

நிலைமை மெல்ல மெல்ல இறுகுவதாக அவனுக்குத் தெரிந்தது.

அன்று சரியாக 2020 மார்ச் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை. அன்றைய காலையில் செய்தி பரவியது, மாலை ஆறு மணியிலிருந்து திங்கள் காலைவரை நாடளாவிய பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக.

அவன் கதிகலங்கிப்போனான். அவன் வாடகைக்கெடுத்த வீட்டிலேயே தங்கிக்கொள்ளலாம்தான். ஆளரவம் ஒடுங்கப்போகும் ஊரில் தனிமைக் குகையாக வீடு மாறிவிடுமென்றாலும் சமாளித்துக் கொள்ளலாம். சாப்பாட்டிற்குத்தான் என்ன செய்வதென்று தெரிய வில்லை. அக்கம் பக்கத்தில் கண்ட பழக்கத்தில் இரண்டு வேளைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டிற்கு அருள் சுரக்கும் முகங்களேதாவது தென்படுகின்றனவா வென கணேஷானந்தமூர்த்தி அலையாத தெருவில்லை.

அந்த நிலைமையில்தான் தனியார் பஸ்கள் கிளம்புவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவும், ஊரடங்கு விழுவதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னருமாக பழைய நண்பனொருவனை நல்லூர் கந்தசாமி கோவிலெதிரில் சந்திக்கிற அதிர்ஷ்டம் அவனுக்கு நேர்ந்தது. அவன் அந்தவூர்க்காரனில்லை. அவனும் பஸ்ஸெடுத்துத் தான் வீடு போகவேண்டியவனாய் இருந்தான். அந்த அவசரத்துள்ளும் நண்பன் நின்றான்.

கணேஷானந்தமூர்த்திக்கு கண்கலங்கி வந்தது. அவன் தன் அவலம் சொல்லி நண்பனிடமாயினும் அபயம் கேட்கிறான். அப்படி யொரு நிலைமை அவனுக்கு எப்போது வாய்த்திருந்தது? நண்பன் இதழ்களால் சிரித்தான். பிறகு அவனைத் தன் வீட்டில் தங்கலாமெனக் கூறி சூட்கோஸை எடுத்துவரச் சொன்னான்.

மனிதர்களைவிட்டு மனிதர்களை விலகியிருக்கச் சொன்ன காலமாயிருந்தது அது. யுத்தகாலத்தைவிடவுமே கொடுமையான காலம். இருந்தும் தம் பழைய நட்பைப் பாராட்டி ஒருவரை வீட்டில் வைத்து யாராவது ஆதரிப்பாரென அவனால் நம்பக்கூட முடிய வில்லை. வீட்டில் அவனை தன் மனைவிக்கு நண்பன் அறிமுகப் படுத்தியபோது அவளும் அவன்போலவே இன்முறுவல் காட்டினாள்.

ஆயினும் அங்கேயும் அவதியும் பயமும் நேர்வது சூழ்நிலைக் கனதியின் விளைவாகிவிட்டது.

அந்தளவு அவலம் படாமல் அவற்றையெல்லாம் தாண்டிச் செல்ல அவனால் முடிந்திருக்கும். கொஞ்சம் சூட்சுமமாக அந்த நிலைமையை அவன் அணுகியிருக்கவேண்டும். அண்ணனின் பதிலுக்கு காத்திராமல் பயணத் திகதியை மாற்றிக்கொண்டு அவன் கொழும்பு சென்று விமானம் எடுத்திருந்தால் அவன் இப்போது கனடாவில் இருந்துகொண்டிருப்பான். அயலவன் எட்டிப்பார்ப்பா னென அஞ்சவேண்டி இருந்திராது. காலடிச் சத்தம் கேட்கிறதென கலங்கவேண்டி நேர்ந்திராது.

இனி அனுபவிக்க வேண்டியதுதான்; ஓடிவிட முடியாது. படுக்க பாய் இருக்கிறது; இரண்டு வேளைச் சாப்பாட்டுக்கும் வழி யில்லாமல் போகாது; சமாளிக்க வேண்டியதுதான் என எண்ணிக் கொண்டான். இருந்தும் மேலே பிரச்னை இருந்தது. ஓடிவிட முடியாது என்கிறபோதுதானே தரித்திருப்பதில் அந்தரம் பிறக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் தரித்திருக்கும் அந்தரம் மட்டுமெனில் அவன் தாங்குவான். இது அதுவல்ல. அதுபோன்ற எதுவும்கூட அல்ல. அது அவனது அடையாளம் சார்ந்தது. அது முதலாம் நாளில் இரண்டாம் நாளிலென மெல்லமெல்லமாகத்தான் விஸ்வரூபமெடுத்தது. ஆனாலும் எடுத்துவிட்டது.

யுத்த காலத்தின் பின் அங்கே வந்த ஒவ்வொரு சமயத்திலும் அந்த நாட்டில் அவன் வெளிநாட்டுப் பிரஜையென்கிற அத்தனை பெருமிதங்களையும் சுமந்தபடி அலைந்து திரிந்தவன். கனடிய பாஸ்போர்ட் அவனது அடையாளம் மட்டுமில்லை, அது அங்கே எழுதப்படாத ஓர் அதிகாரமும் தந்தது. ஆனால் இன்று ஊரவனுக்குள்ள மதிப்பு அந்த கனடிய பாஸ்போர்ட்காரனுக்கு இருக்கவில்லை. அவன் அங்கே ஏன் வந்தானென்று சிலராவது நினைக்கும், எரிச்சல் படும் நிலைமையிலேயே இருந்துகொண்டிருக்கிறான். அது அவனுக்கு பயத்தை அளித்தது. திடீர்ச் சத்தங்களில், சலனங்களில் அவனுக்கு திடுக்காட்டம் பிறந்தது. 'நான் சுவிஸிலிருந்து வந்த மத போதகரின் அரியாலைக் கூட்டத்திற்குப் போகவில்லை; நோய்த் தொற்றுக் கொண்டவனில்லை'யென அலறிவிடுகிற அந்தரம் சிலவேளை கொண்டுவிடுகிறான். நித்திரையில் அவன் வாய்பிதற்றுவதாக அவனது நண்பன் சொன்னான். ஒருவேளை அந்த வார்த்தைகளைக்கூட அவன் பிதற்றியிருக்க முடியும். அவன் தானாக இல்லாத சீணம் அடைந்தாகிவிட்டது.

அதனால்தான் தெருவிலெழுந்த அந்த தீற்றல் சத்தமும், அது சடுதியில் ஓரிடத்திலே தங்கிக்கொண்டதும் அவனை அந்தரித்துப் போக வைத்தன. இருட்டை ஊடுருவி அவனை நோக்கியதாய்த் தோன்றிய யாரோவின் அந்தக் கண்களினுள்ளே திகைந்து திகைந்து வெளிக் கிளம்பிக்கொண்டிருந்த ஒற்றை உணர்வான வெறுப்பினையும் அவன் கண்டான். அந்த வெறுப்பில், நீயேன் என்னூரில் தங்கியுள்ளாய் என்பதான ஒரு கேள்வியும்கூட தொக்கிநிற்பதைப் புரிய முடிந்தது. இனி அதுவே மெல்ல மெல்ல ஒரு கோபத்தின் உக்கிரமாய் மாறி அனல் பிறப்பிக்கும். பொறி சிதறிய அந்த அனலில் அவன் தேகம் வெந்தழியும்.

அதுவொரு அபூர்வமான, மொத்த ஊருமே அவதி கொண்டிருக்கிற தருணம். அதுபோல் அந்த நாடும் ஒரு அவலத்தை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறது. உலகமே அவ்வனுப வத்தில் திணறிக்கொண்டு இருக்கிறது. அவனறிந்து உலக வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோல் பதினான்காம் நூற்றாண்டிலே 'பிளாக் டெத்' என்ற பற்றீரியாத் தாக்குதல் நோய் இத்தாலியில் பரந்தது. பல லட்சம் மக்களைக் காவு கொண்டது. 'சில்க் றூட்' எனவழைக்கப்பட்ட கிழக்கின் பழைய வர்த்தக வழி ஒன்றினூடாக அது மொங்கோலியாவிலிருந்து பரந்ததாக வரலாறு சொல்கிறது. இதுவோ சீனாவின் வுகான் மாகாணத்திலிருந்து பரவியது. ஆனால் அதிவேகமாகப் பரவியது. பரவப்போகிறது என எண்ணுவதன் முன்னால் பல தேசங்களின் வாசல் கடந்துவிட்டிருந்த வைரஸ் நோயது.

ஆரம்பத்தில் சீனாவில் நோய் பரவிக்கொண்டிருக்கிறது என்றார்கள். அப்போதுதான் அவன் கனடாவிலிருந்து இந்தியாவுக்கு விமானமேறினான். இந்தியாவில் அந்த நோயை முதன்முதலில் சந்தித்த மாநிலம் கேரளாவாக இருந்தது. ஸ்பெயினிலே சாவுகள் விழுகின்றதாய்த் தகவல்கள் வெளிவந்தபோதே கேரளாவிலும் மரணம் தொடங்கிவிட்டதை தொலைக்காட்சிச் செய்தி அறிவித்தது. கேரளா எங்கே, சென்னை எங்கே? அவனுக்கு அச்சம் கொள்ள வேண்டி இருக்கவில்லை. அவன் அங்கிருந்து திட்டப்பிரகாரமே சென்னையிலிருந்து கொழும்புக்கு விமானமேறினான்.

தடுப்பு மருந்து மட்டுமில்லை, அந்த நோயைக் குணமாக்கும் மருந்துமே இருக்கவில்லையென்ற பீதி மக்களை ஒரு புகாராய் மூடியிருந்தது. முக கவசம் அணிந்துகொள், கையுறை போட்டுக்கொள், யாரையும் இரண்டு யார் எல்லைக்குள் அணுகாதே, யார் தொட்ட எதையுமே தொடாதே, அவ்வப்போது இருபது விநாடிகளுக்கு கைகளை சவர்க்காரம்கொண்டு கழுவிக்கொள், கண்களை வாயை ஏன் முகத்தையே கைகளால் தொட்டுக்கொள்ளாதே, மொத்தத்தில் வீட்டைவிட்டு வெளியே வராதிருப்பதே பாதுகாப்பென தகவலூடகங்கள் மணிக்கு மணி அறிவிப்புகளை உதிர்த்துக்கொண்டிருந்தன. பயங்களின் கதைகள் நிஜங்களென சம்பவங்கள் ருசுப்பித்துக்கொண்டு இருந்தன. அந்தளவில் உலகின் சில லட்சம் மக்களை அந்நோய் காவு கொண்டிருந்தது.

இலங்கையின் தீவான நிலைமையின் பாதுகாப்புக் கவசம் எப்படிச் சிதறியது? எல்லோருக்கும் ஆச்சரியம். இத்தாலிய உல்லாசப் பயணிகள் காரணமென சில அவதானங்கள் தெரிவித்தன. சுவிஸ் மத போதகரின் பொதுமக்களுடனான அரியாலைச் சந்திப்பு இன்னொரு காரணமென வேறுசில அவதானிப்புகள் அறிவித்தன. மொத்தத்தில் தீவடங்கலும் நோய்த் தொற்றின் அடையாளங்கள். ஆஸ்பத்திரிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தன. நோய்த் தொற்றுள்ளவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தல் முகாங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். வீடுகள் அடங்கிக் கிடக்க, நாட்டின் வெளியில் ஒரே அல்லோலகல்லோலம். அதனால் ஒற்றை முடிவாக 'வெளியிலிருந்து வந்திருக்கும் உல்லாசப் பயணிகள் நோய்க் காவிகள்' என்ற வெகுஜன அபிப்பிராயம் உருவாயிற்று. அது ஒரு பூதத்தினைப்போல திரிந்து கொண்டிருந்தது.

அந்த அந்தரம் ஒருவரிலிருந்து ஒருவரை ஒதுங்கிப்போகச் செய்துகொண்டிருந்தது. ஒதுங்குவது எரிச்சலைத் தந்தது. அது இறுகியிறுகி கோபமாக வெடித்தது. என்றாற்போல் என்ன செய்துவிட முடியும்? அது உள்ளடங்கி கொதிநிலையடைந்தது. அந்த அவதிக்குள் அவனடங்கியது துரதிர்ஷ்டம். அவனுக்கு அது வடிவங்கொண்ட விதம் தெரியும். அதனால்தான் ஆமையைப்போல ஐம்பொறிகளும் அடக்கி அந்த வீட்டுக்குள் தன்னிருப்பை அவன் மறைத்துக்கொண்டு இருக்கிறான்.

செய்தி அறிக்கை முடிந்திருக்கவேண்டும். திறந்திருந்த கதவினூடு கதிரையில் அமர்ந்திருந்த தன் மனைவியோடு நண்பன் குசுகுசுத்துக்கொண்டு நின்றிருப்பது தெரிந்தது. அந்தக் காட்சியும் மனத்தை அதைத்தபடி உள்ளிறங்கிப் பாரமாகியது.

அவன் அங்கு வந்த அந்த மார்ச் 20ஆம் திகதியிலிருந்து அன்றைய மார்ச் 26ஆம் தேதிவரை தன்மேலான அவர்களின் அன்பு, நட்பு, அபிமானம் அனைத்தையும் கடந்த ஓர் இரகசியத்தின் திருகல் அங்கே எழுந்துகொண்டிருந்ததை அவன் யூகித்தான்.

நண்பனின் மனைவி மருதிக்கு இரண்டு நாட்களாக காய்ச்சல். வேலைசெய்ய முடியாமல், நடக்கவும் சிரமப்பட்டுக்கொண்டு இருந்தாள். சட்டி பானை கழுவி, வீடு முற்றம் கூட்டி, காய் கறி நறுக்கி, தேங்காய் துருவியென நண்பன் முருகவேல் கல்யாணமான நாளிலிருந்து தனக்கு அப்படி நேர்ந்ததில்லையென சொல்லிக்கொண்டு எல்லாம் செய்தான். பிறகு மருதி பிரயாசையோடு எழுந்துவந்து கறியை மட்டும் சமைத்து வைத்துவிட்டு சாப்பிடக்கூடச் செய்யாமல் போய்ப் படுத்துக்கொண்டாள். பிள்ளைகளை முற்றத்தில் போய் நின்று விளையாடும்படி அடிக்கடி கத்தினாள். எதிர்பாராதவிதமாக அவனை பார்வையில் எதிர்ப்படுகிற சமயங்களில் வெறுப்பாய் உமிழ்ந்து தள்ளினாள். அது தன்னில் விழுந்திருந்த நோயின் மேலா அல்லது அவனின் மேலாவென யாருக்கும் சந்தேகம் வரலாம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேஷானந்தமூர்த்திக்கு வரவில்லை.

மார்ச் இருபதாம் தேதி மாலையில் சொல்லாமல் கொள்ளாமல் அவனை முருகவேல் கூட்டிச் சென்றவேளையில் அங்குள்ள வசதியீனங்களின் சிறிய சிந்தனையுமின்றி சிரித்தபடி தன்னை வரவேற்றவளை கடந்த இரண்டு நாள் காய்ச்சலா அந்த வெறுமையுள் விழுத்தியது? இல்லை. அந்தக் காய்ச்சலுக்கு அவளுக்கு ஒரு காரணத்தின் அனுமானமுண்டு. அவள் கேட்கிற பேச்சுக்களும் செய்திகளும் அதைத்தவிர வேறொரு காரணத்தை நினைக்க அவளைச் செய்வனவாயில்லை. அது அவளை அச்சப்படுத்தியது; கலவரப்படுத்தியதுஞ் அவசரப்பட்டு வீட்டில் ஒரு வெளிநாட்டாளுக்கு இடம் கொடுத்துவிட்ட வருத்தத்தை எழவைத்தது. அவளது நிலைமை அவளைவிடவுமே அவனை அதிகம் பாதித்ததென்பது அவளுக்குத் தெரியுமா?

அப்படித்தான் அவன் வந்த மூன்றாம் நாள் அந்த வீட்டிற்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்த எதிர்வீட்டு சுந்தரத்திற்கு காய்ச்சல் பிடித்தபோதும் அவனே ஏங்கினான். மறுநாள் படுக்கையில் அவன் விழுந்தபோது துடித்துப்போனான். 'என்னிலிருந்தா...? இருக்குமா...? கடவுளே...!'யென அவனது அந்தராத்மா கூவியது. தனக்கு என்பதைவிட தன்னாலென்ற தாக்குதல் அதிகம் கொண்டான் அவன்.

நல்லவேளையாக மூன்றாம் நாள் காய்ச்சல் சுகமாகி மாலையில் குளித்துவிட்டு சுந்தரம் கோயிலுக்கு போய்விட்டு வந்தான். பின்னர் தான் கணேஷானந்தமூர்த்திக்கு உயிரவலம் தணிந்தது.

அன்று மாலை சுந்தரம் அங்கே வருவதன் முன்னால் அவன் சிதறிப்போய் இருந்தவேளை நண்பன் ரகசியம்போல் காதின் கிட்டக் குனிந்து சொன்னான்: 'நீ என்னத்துக்காண்டி உப்பிடி இருக்கிறாயெண்டு எனக்குத் தெரியும். அதுதான் வேணுமெண்டா சொல்லு எடுத்துத் தாறன். இஞ்ச ரண்டொரு வீட்டில அது விக்கினம்.'

அதுவே காரணமில்லாதபோதும் அவன் சொன்னான்: 'வீட்டில விக்கிறதெண்டா எனக்கு வேண்டாம். என்னென்ன கலந்திருப்பாங்களோ? அதுவேற பிரச்சினையாய் வந்திடப்போகுது இந்த நேரத்தில.'

'அப்ப... தெளிவாயிரு. எல்லாருக்கும் பொதுவில வந்த கஷ்ரம்தான. உப்பிடி யோசிச்சுக்கொண்டிருந்து என்ன செய்யிறது?'

'யோசிக்காமல் என்ன செய்யிறது? சிறீலங்காவுக்கு வாற பிளைட் எல்லாம் நிப்பாட்டியாச்சு. லண்டன், கனடா, துபாயெண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடங்களுக்குத்தான் இப்ப இஞ்சயிருந்து பிளைற் ஓடுது. அதையும் கெதியாய் நிப்பாட்டியிடுவாங்கள்...'

'வாற வெள்ளியிலயிருந்து அதுவும் ஓடாது... ரீவியில சொல்லிச்சுது; என்றாள் எதிரிலிருந்த மருதி. பிறகு, ஈஷஇஞ்ச இருக்கிறது உங்களுக்கு கொஞ்சம் வசதிக்குறைவாய்த்தான் இருக்கு மெண்டு எங்களுக்குத் தெரியும்...' என்று அவள் இழுக்க, அவன் இடைமறித்தான். 'ஐயோ... வசதி ஒரு பிரச்சினையே இல்லை. நிடைப்பந்தமாய் ஒரு இடத்தில இருக்கிறதுதான் கஷ்ரமாயிருக்கு. எண்டாலும் சமாளிக்கத்தான வேணும். சமாளிப்பம்.'

'நீங்கள் ஒதுங்கியொதுங்கி இராமல் வாற ஆக்களோட கதைச்சு சிரிச்சுப் பேசிக்கொண்டிருந்தா நேரம் போறது தெரியா. எல்லா ரீவிச் சனலிலயும் இப்ப படம் போடுறான்; படம் பாருங்கோ. எப்பிடியும் மார்ச் முடியிற அளவிலயெண்டாலும் ஊரடங்கை எடுப்பானெண்டுதான் சனம் கதைக்கிது.'

அவன் ஒதுங்கியொதுங்கிப் போவதின் காரணம் அவளுக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது? நண்பன் சொன்னது சரிதான். இடரென்னவோ எல்லார்க்கும் பொதுவில் வந்ததுபோல்தான் தோன்றுகிறது. ஆனால் அவனுக்கு மட்டும் வந்ததுமாதிரியல்லவா அவனை ஆடிப்போக வைத்துக்கொண்டிருக்கிறது! இன்ன காரணத் தால்தான் தனக்கு அந்த அவதியென்று நண்பனுக்குக்கூட அவனால் சொல்லமுடியாமலிருக்கிறதே! அது எவ்வளவு பெரிய அவதி? எனக்கு வந்துவிடுமென்று அல்ல, உனக்கு வந்துவிடும், உன் மனைவி பிள்ளை களுக்கு வந்துவிடும், இங்கே வந்துபோய்க்கொண்டு இருக்கிறவர் களுக்கு வந்துவிடுமென்றுதானே நான் கலங்கிக்கொண்டிருக்கிறேன் என்றால் நண்பனே அப்போது என்ன நினைப்பானோ?

அவனுக்கு வேலிக்கு வெளியில் ஆள் நிற்பதான சிந்தனையே மறந்துபோயிற்று. நண்பனதும் அவனது குடும்பத்தினதும் பாது காப்பு என்கிற எண்ணம் மனத்துள் மேலோங்கியது. அதற்கு என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் நினைவுகளை வேறு திசையில் திருப்பத் தீர்மானித்தான். தீர்மானிக்க மட்டும்தான் அவனால் முடியும்; மற்றும்படி நினைவைத் திருப்புவது வேறு யாரோ என்பதுபோல் நினைவு திரும்ப பெரும் சிரமம்பட்டது.

வந்த புதிதில் அவ்வப்போது தலைகாட்டிய சந்திராவின் நினைவுகூட அப்போது தூரமாகிப் போயிருந்தது. முதல்நாளில் கண்டு, இரண்டாம் நாளில் பேசி, மூன்றாம் நாளில் கதையின்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்த சிரிப்பில் இதயம் திறந்தவள் அவள். ஒரு தொடர்பு, கால மெல்லாம் நீளுமென்ற எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையிலும் மானசீகமாக தன்னைக் கொடுக்க அவள் விரும்பியிருந்ததை அவன் கண்டிருந்தான். அவனது வெளிநாட்டு பாஸ்போர்ட் கண்டல்ல, அவனைக் கண்டதில் தன் உள்ளம் கிறங்கியவள் அவள். அந்த முதல்நாளில் அவள் கண்களிலிருந்து அந்த முறுவல் கொட்டுப் படவே இல்லை; ஆச்சரியங்களையே கொட்டினாள். அவளது அந்த விருப்பத்தில் எந்த எதிர்பார்ப்பும் இருந்திருக்கவில்லை. அது காதலில்லைதான். ஆனாலும் பரிபூரணமான சமர்ப்பணம். நீண்ட காலமாய் அவனது மனம் சுமக்கும் வெற்றிடத்தை அவளால் நிறைக்க முடியுமெனில், அந்தச் சமர்ப்பணமே அதற்கான அவளது முதல் தகுதியாகவிருக்கும். அவனுக்கு அது தெரிந்திருந்தது. ஆனாலும் நெருங்காதிருந்தான். எந்தவிதமான ஒழுக்கம் சார்ந்த, அறம் சார்ந்த இடறலுமில்லை. நிகழ்விலிருந்த காலமே நினைவின் சுவட்டை பிரயாசையின்றி அழித்துக்கொண்டிருந்தது. டான் மற்றும் வசந்தம் தொலைக்காட்சிச் செய்திகள் அதற்குக் கூடுதலான ஒத்தாசை புரிந்தன. அவன் விழிக்கும் ஒவ்வொரு விடியலிலும் அவளது நினைவு சாணாக, முழமாக, பாகமாக எட்டவாய்ச் சென்றுகொண்டிருந்தது.

தெருவிலே மோட்டார் சைக்கிளொன்று உறுமிக் கேட்டது. கணேஷானந்தமூர்த்தி அவசரமாக எழுந்து வேலியைச் சமீபித்தான். சைக்கிளின் வெளிச்சம் தெருவெங்கும் விளாசியடித்தது. வேலி மேலால் எட்டிப்பார்த்தான். யார் நின்ற தடயமுமில்லை.

மறுபடி கதிரையில் வந்தமர்ந்தவன் நண்பன் சமையலறையில் ஏதோ செய்துகொண்டிருப்பது கண்டான். அவன் வர இனி நேரமெடுக்கும். கணேஷானந்தமூர்த்தி சந்திரா அங்கு வந்த அந்த இரண்டாம் நாளை அவதியின்றி நினைத்துப் பார்த்தான்.

ஊரடங்கின் இரண்டாம் நாளின் அந்தப் பொழுது மாலை யாகயிருந்தது. அது மெல்ல முதிர்ந்து வானிலிருந்து இருள் இறங்கிக் கொண்டு இருந்தது. 'மாடிழுத்து விழுத்திப்போட்டுதக்கா' வென றோட்டிலே யாரோவின் குரலெழுந்த உடனடிப் பின்னால் படலை திறந்த சத்தம்.

அப்போது நுளம்பின் படையெடுப்பைத் தடுக்க நிலைக் கதவு, ஜன்னல் கதவுகளைச் சாத்தி நேரத்தோடேயே லைற் போட்டாகிவிட்டிருந்தது. கணேஷானந்தமூர்த்தியும் ஹோலுக் குள்ளேதான் இருந்திருந்தான். அந்தநேரத்தில் வீட்டினுள்ளே ஒதுங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதுதான் நுளம்புக் கடியிலிருந்து தப்புவதற்கான எல்லாரின் உபாயமாகவும் இருந்தது. எதுவும் புதிதில்லையென்றாலும் அந்த நடைமுறைகள் அவனுக்கு பழக்கத்தில் இல்லாதவை. மற்றவர்களின் ஆலோசனையில் அவனும் உள்ளே வந்து ஒடுங்கிக்கொண்டான். முருகவேலின் பிள்ளைகள் மூன்றும் அறைக்குள்ளிருந்து படுக்கைக்கு முன்னான விளையாட்டில் நாளின் சோர்வுடன் ஈடுபட்டிருந்தன. பெரியவர்கள் எல்லாரும் தொடங்கப்போகும் ரோஜா சீரியலை எதிர்பார்த்தபடி. சீரியல் ஆர்வம் அவனுக்கில்லை. அவன் திட்ட மிட்டபடி அமையாது குலைந்துபோன தன் பயணம் இனி எப்போதோவென்ற கவலைமட்டுமே கொண்டிருந்தான்.

சந்திரா காலைத் தாங்கித் தாங்கி வருவதைக் கண்டு மருதி நடந்தது கேட்க, மாடு இழுத்து விழுத்திவிட்டதை சந்திரா சொல் கிறாள். சொல்லியவள் கேளாமலே முழங்காலளவு கவுணை சற்று மேலே தூக்கி சிராய்ப்புக் காயத்தைக் காட்டுகிறாள். 'லேசான காயம் தானக்கா.'

கணேஷானந்தமூர்த்தியும் பார்க்கிறான்.

கவுண் அணிவது அங்குள்ள பெண்கள் பலருக்கும் அப்போது பழக்கமாகிவிட்டிருந்தது. யுத்த கால உபயம். சைக்கிள் ஓடலாம், காலாலும் ஓடலாம், வயல்வேலை தோட்டவேலை எதுவும் செய்யலா மென்று பெரும்பாலான பெண்கள் இப்போது கவுண்தான் அணிகிறார்கள் பெருநகரங்கள் தவிர்ந்த கிராமங்களிலும்.

சந்திராவினது மெலிந்த வெள்ளைக் கால். முழங்கால் சில்லுக்கு மேலே தார் றோட்டு தோலைச் சிராய்த்திருந்தது. உடனடி யாக ரத்தம் கசிந்திருக்கலாம். அப்போது உரஞ்சுப்பட்ட இடம் வெளாரித்துக் கிடந்தது. அந்தக் காலில் இன்னும் நிறைய பழைய காயங்களின் தழும்புகள் இருந்தன. காலில் பதிந்திருந்த பார்வை நிமிர்த்தி கணேஷானந்தமூர்த்தி சந்திராவின் முகத்தில் பதித்தான். சந்திராவின் கண்கள் பின்வாங்குதலின்றி அதை நேரெதிர்கொண்டன. இன்னும் முழங்காலைக் காட்டியபடியிருப்பதும் மறந்து பிறகு சந்திரா மெல்லச் சிரித்தாள். அவளது அந்நியோன்யம் அவனுக்கு சிறிது அசௌகரியமாகவே இருந்தது. அதன் ஈர்ப்பு விசையும் அவன் தெரிந்தான். இருந்தும் அந்தக் கண்களின் ஆழத்திற்குள் தான் இழு பட்டுப் போவதைத் தடுக்க முடியதவனாயிருந்தான்.

அவன் வெளியே சிகரெட் பத்த எழுந்துவந்தான். தொலைக் காட்சிச் செய்தி முடிந்து ரோஜா சீரியல் தொடங்கிருந்தது சத்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தது. சிறிதுநேரத்தில் சந்திரா வெளியே வந்தாள். வீடு செல்கிறாள் போலும். தன்னைக் கடந்து செல்கையில் கணேஷானந்த மூர்த்தி கேட்டான்: 'சந்திரா, நீ வெத்திலை சப்புவியா?'

அவள் நின்றாள். 'சப்புவன். கனக்க இல்லை' என்றவள், 'ஏன்?' என்றபடி அண்ணாந்து பார்த்துக்கொண்டே தன் கண்கள் பளீரிட அவனை நெருங்கினாள்.

'கடையெல்லாம் பூட்டியிருக்கு. எப்பிடி வாங்குவாய்?'

'திறந்திருக்கிற கடையில வாங்குவன்.'

'வெத்திலையோட பொயிலையும் தருவினமோ? இல்லாட்டி பொயிலை தனியா வாங்குவியோ?'

'தனியாயும் வாங்கலாம்.'

'நீ பொயிலை வாங்கிற கடையில சிகரெட் இருந்தா சிகரெட்... இல்லாட்டி, பொயிலை வாங்கித் தாறியா?'

'அங்க சீக்கிறெட் விக்கிறேல்ல, வீடி விப்பினம். வீடி இருந்தா வீடி வாங்கட்டா?'

'வீடி பொயிலையைவிட நல்லம்தான்.'

'நாளைக்கு பின்னேரம்தான் போவன். வாங்கியாறன்.'

'கால்ல பெரிய காயம்போல. பிளாஸ்ரர் இருக்கு, தரட்டே?"

'அதொண்டும் வேண்டாம். இப்பவே பாதி மாறியிட்டுது.'

'உன்ர மனிசன் மாடு கட்டுற அவுக்கிற வேலையள் செய்யமாட்டாரோ...?'

'அந்தாள் பாதி ராத்திரியில வந்து படுத்திட்டு, விடிஞ்சு விடியிறதுக்குள்ள எழும்பி ஓடுற மனிசன். மாட்டை நான் பாத்திடுவன். சாந்தமான மாடுதான். இப்ப... சினைப்படுறதுக்கு கத்திக்கொண்டு நிக்குது. அதிலதான் அந்த மூர்க்கம்.'

'நாளைக்கு வீடி விஷயம் என்னமாதிரியெண்டு சொல்லு.'

'செய்தி நேரத்துக்கு வருவன்.'

வீட்டுக்கு முன்னால் ஒத்தாப்பிலிருந்த பல்ப் சுட்டுப் போயிருந்தது. அதனால் இருட்டிலே நின்று பேசியபோது அவள் கண்கள் அத்தனை நேரமும் இரண்டு நட்சத்திரங்கள்போல் மின்னிக் கொண்டே இருந்ததை அவன் கவனிக்கத் தவறவில்லை. போகும் போது மின்னலைப்போல் ஒரு பளீர்! அதுபோதும் அதன் உள்ளோடிய அர்த்தம் புரிய. ஆனாலும் அவ்வளவு வெளிப்படையே அப்படித்தானா என்றொரு சந்தேகத்தையும் படவைத்தது. அது தெளிய அடுத்தநாள் வரவேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் எட்டு மணி ஆகிறவரையில் வீடியை இல்லாட்டி புகையிலையை எதிர்பார்த்து கணேஷானந்தமூர்த்தி சந்திராவுக்காகக் காத்துக்கொண்டிருந்தான். முதல்நாளைய அவளது கண்களின் ஒளித் தெறிப்பும் பளீரிட்ட மின்னல் பிரகாசமும் ஒரு ஞாபகமாய் வந்து போயின. உணர்வெழுச்சி இல்லாமலேயில்லை; அதை புத்தளம் மாவட்டம் நோய்த் தொற்றில் பாதிக்கப்பட்டு கொழும்பு கம்பஹா மாவட்டங்களிலும் அது பரவிவிட்டதான அன்றைய நாளின் தகவல்கள் மூடிவிட்டுக்கொண்டிருந்தன.

எட்டு மணி டான் தொலைக்காட்சிச் செய்தி தொடங்கி சிறிதுநேரத்தில் சந்திரா வந்தாள். வாசலில் கதவோரம் நின்றபடியே அவனைப் பார்த்தாள். அவன் யார் வந்ததெனப் பார்க்கத் திரும்ப, எழுந்து வருமாறு சைகை காட்டினாள். படிகளிலிருந்து கீழே இறங்கி நின்றிருந்தவளை அவன் அணுக, அவனது கையினைப்பற்றி ஒரு கட்டு பீடியையும் ஒரு கடதாசிச் சரையையும் திணித்தாள். அவன் சரையைப் பிரித்து ஐந்து சிகரெட்டுகள் இருப்பது கண்டான். 'இன்னும் கொஞ்ச சிகரெட் இருக்கு. எத்தினை வாங்கிறதெண்டு தெரியாததால அஞ்சை மட்டும் வாங்கிக்கொண்டு வந்தன்' என்றாள். பெரிய உபகாரம் செய்தவள்போல் அவளது முகம் அப்போது பொலிந்து கிடந்தது.

உள்ளே போய் வாலற்றிலிருந்து ஆயிரம் ரூபாவை எடுத்து வந்து கொடுத்தான். 'இதுகளுக்கு எவ்வளவு வந்துதோ அதை எடுத்துக் கொண்டு மிச்சத்துக்கும் நாளைக்கு சிகரெட் வாங்கி வா. கரச்சலொண்டுமில்லையே?'

'சிச்சீ... இதிலயென்ன கரச்சல்.'

மதியத்திலிருந்து புகைக்காத தவனத்தைத் தணிக்க உடனடியாகவே ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு அங்கிருந்த நீள வாங்கிலே அமவுந்தபடி, க்ஷஇரன் இப்பிடி; என்று சம்பிரதாயித்தான்.

அருகிலே அமர்ந்தவள், 'நாளைக்குக் காலமை ஊரடங்கு தளருது. தேவையான சீக்கிறெட்டை வாங்கி வைச்சிடுங்கோ. தட்டுப் பாடாய்த்தான் இருக்கும். விலையும் கூடினாக் கூடும்' என்றாள். பிறகு, 'என்ர மனிசனும் முந்தி வீடி குடிக்கும். எனக்கு அந்த நாத்தத்தை தாங்கேலாது' என்றாள்.

'இப்ப குடிக்கிறேல்லையோ? நல்லதுதான.'

'குடிக்காட்டி நல்லம்தான். ஆனா இது வேற கதை' என்றவள் அவன் பக்கமாய்ச் சாய்ந்து, 'உள்ளுக்கயே வைச்சிருங்கோ. இப்ப...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிக்கிறதுக்கு ஆளே இல்லை' என ரகசியத்தைப்போல் சொல்லி விட்டு கிணுகிணுத்தாள்.

அவன் ஆச்சரியமாகி, 'விளங்கேல்ல' என்றான். 'நீதான நேற்றுச் சொன்னாய், பாதி ராத்திரியில வந்து, விடியிறதுக்கு முந்தி எழும்பிப் போறவரெண்டு.'

'ம். அப்பிடித்தான் எல்லாருக்கும் சொல்லிக் கொண்டிருக் கிறன். மருதியக்காவுக்கு மட்டும் அப்பிடியிப்பிடி கொஞ்சம் தெரியுமெண்டு நினைக்கிறன். எல்லாம் ஒரு பாதுகாப்புக்குத்தான்.'

'ஒருக்காலும் வாறதில்லையோ...?'

'பிள்ளையளைப் பாக்கவெண்டு எப்பாலும் இருந்திட்டு வரும்.'

'எவ்வளவு காலமாய் இது...?'

'இப்ப... ரண்டு வரியமாகுது.' அவள் சிறிது இடைவெளி விட்டு தொடர்ந்தாள்: 'ரண்டு பிள்ளையள் இருக்கு. அம்மாவை என்ர வீட்டிலதான் வைச்சிருக்கிறன். தண்டுதரமாய்த்தான் இருக்கிறா. அவ பிள்ளையளைப் பாத்துக்கொள்ளுவா. வீட்டுக்குப் பின்னால ரண்டு பரப்பு தோட்டக் காணியொண்டிருக்கு, தோட்டம் போடுறன், ஆடு மாடு வளக்கிறன்...எனக்கென்ன குறை? என்னால தனிய வாழேலும்.'

சிறிதுநேர மௌனம் கழிய அவன் கேட்டான்: 'நான் இதுகளைக் கேக்கக்குடாது. எண்டாலும்... ஒரு பேச்சுக்கு கேக்கிறன்... அப்பிடியென்ன உங்களுக்குள்ள...?'

'இதெல்லாம் உடனயே சொல்லியிடேலா. வாய்விட்டுச் சொல்லுறதும் கஷ்ரம். ஒருநாளைக்கு தனியாய்க் காணுற நேரத்தில சொல்லுறன்.'

'இப்ப தனியத்தான இருக்கிறன்... மருதி ஆக்கள் ரீவி பாத்துக்கொண்டிருக்கினம்.'

சந்திரா எதுவும் சொல்லவில்லை. தொடர்ந்த அவளின் மௌனமுடைக்க, 'எங்க வேலை ஆளுக்கு? என்ன வேலை?' என்று கேள்வியின் திசைகளைத் திருப்பினான் அவன்.

'கிளிநொச்சியில ஒரு ஹொட்டல்ல வேலை. சமையல் வேலை தான். அந்தாளின்ர பழக்கமொண்டும் சரியில்லை. அப்பவே அந்த எழிய பழக்கம் இருந்திருக்கு. எனக்குத்தான் விவரம் காணாமல்ப் போச்சு இதெல்லாம் தெரிய. ஒரு ராத்திரி தனிய இருந்த ஒரு பொம்பிளயின்ர வீட்டுக்குள்ளயே பூந்திட்டுது. கையும்மெய்யுமாய்ப் பிடிபட்டு... பெரிய அவமானமாய்ப் போச்சு... அண்டையோட கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவியிட்டன்.'

அவன் அவளை அந்த மெல்லிய இருளுக்குள் ஏறிட்டான். அவளின் சிரிப்பழிந்த முகத்திலிருந்து, அவள் சொன்னது மெய் யென்பதைமட்டும் அவன் ஓர்ந்தான். ஆயினும் அதை திட்டமிடா திருந்தாலும் திடத்துடன் நிறைவேற்றிய ஒரு திருப்திதானே அவளிடத்தில் காணப்படுகிறது? அது அவளின் தன்னிலை வெளிப்பாடு மட்டுமல்ல, இதயத்தைக் கைகளில் வைத்து தன்னை நோக்கி ஏந்தியபடி நிற்கும் சமர்ப்பணமும் என்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனால் அந்த இரண்டு மூன்று நாட்களில் அவளின் அந்தளவு இணக்கப்பாட்டைத்தான் அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

அப்போது கதவைத் திறந்துகொண்டு மருதி வாசல்படியில் களைப்போடு வந்தமர்ந்தாள். சிறிதுநேரத்தில் பேக்கரி வான் பாட்டி ரைச்சலோடு தெரு வாசலுக்கு வந்தது. முருகவேல் மனைவியைக் கேட்டு பாண், பணிஷ் என வாங்கிவந்தான். அந்த ஊட்டில் தன் கண் களை ஒளிக் காடாக்கி அவனுக்குக் காட்டிவிட்டு சந்திரா படலை திறந்து போய்விட்டாள். அப்போது அவனது அண்ணன் போனெடுத்து அவன் அங்கே நிற்கிற விபரத்தை கனடாத் தூது வராலயத்திற்கு அறிவித்தானா எனக் கேட்டு, அதுவரை செய்திரா விட்டால் காலையில் அதை கண்டிப்பாகச் செய்ய அறிவுறுத்தினான். வார்த்தைக்கு வார்த்தை அவதானமாக இருக்கச் சொன்னான்.

அதில் மெல்லிய ஒரு பதற்றம் இருந்ததை கணேஷானந்த மூர்த்தி கவனிக்கத் தவறவில்லை. அது அவனது பயணம்குறித்த சஞ்சலத்தை மேலும் அதிகப்படுத்தியது.

மறுநாள் திங்கள் காலையில் ஆறு மணிக்குத் தளர்வாகிய ஊரடங்கு மீண்டும் அமுலுக்கு வருவதற்கிருந்த பத்து மணி நேர இடைவெளியில் கடையெங்கும் வீதியெங்கும் மக்கள் வெள்ளம். பலபேர் கையுறை முகக் கவசம்கூட அணியவில்லை. சிலர் மூக்கை மறைத்து லேஞ்சி கட்டிக்கொண்டிருந்தார்கள். பத்து மணியளவில் முருகவேலுடன் வெளியே சென்ற சமயத்தில் அவனே நேரில் கண்டான். ஊரடங்குத் தளர்வு ஒரு கொண்டாட்ட மனநிலையையே மக்களிடத்தில் ஏற்படுத்தியிருந்ததாய்ப் பட்டது. நல்லது. அடுத்த ஊரடங்குத் தளர்வு அடுத்த இரண்டு நாட்களில் வருமென்று பேச்சிருந்தது. அவனுக்கது சந்தேகமாகிப் போனது. அதை அன்று மாலையில் வெளியாகிய செய்தி ஊர்ஜிதப்படுத்தியது. மக்கள் தம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கொடிய நோய்க்கு விருப்பபூர்வமாக ஒப்புக்கொடுத்ததுபோல் அன்றைய பகல் ஆகியிருந்ததென யாழ் மாவட்ட சுகாதார அத்தி யட்சகர் தெளிவாகத் தெரிவித்து, தொடரும் ஊரடங்கை மிகுந்த இறுக்கமாக செயற்படுத்த அரசுக்குப் பரிந்துரை செய்துள்ள தாகக் கூறினார். அந்நோய்க்கான தடுப்பூசி அதுவரையில் கண்டு பிடிக்கப் படவில்லை என்பதோடு, கண்டுபிடிக்கும் சாத்தியமும் விரைவில் நிகழ்ந்துவிடாதெனவும் தெரிவித்த துறையியல் வல்லுநர்களின் நேர்காணல்கள் இ-பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிச் செய்தி களிலும் வெளியாயின. தொற்றாமல் காப்பதே சிறப்பு, நோய் அறிகுறியுள்ளவர்கள் தாமாகவே முன்வந்து தம் குடும்பத்தாரையும் சமூகத்தையும் காக்க முன்வரவேண்டுமென்றும், நோய் ஏற்பட்டி ருந்தாலும் குணமாகும் வாய்ப்புக்கள் நிறைய இருப்பதால் மக்கள் அஞ்சத் தேவையில்லையென்றும், தனிமைப்படுத்தல் முகாம்கள் திற மாகச் செயற்படுத்தப்படுவதாகவும் மிகச் சிறப்பாக அந்நேர்காணல் களில் அவர்கள் பொதுமக்களுக்கு எடுத்து விளக்கியிருந்தார்கள். நோயைவிட பதின்னான்கு நாள் தனிமைப்படுத்தலென்பதே மிக்க கொடூரமானதாய் அவர்களை விலகியோடச் செய்ததென்பதை பலரின் பேச்சில் கண்டிருந்தான் கணேஷானந்தமூர்த்தி.

மறுநாள் மாலை இருட்டுவதற்கு முன்பாக எல்லாரும் வீட்டின் முன்னாலுள்ள ஒத்தாப்பிலிருந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தவேளை எதற்கோ சந்திராவின் பேச்சு நுழைந்தது. மருதியின் வாய் மொழியிலிருந்துதான் அவள்பற்றிய விபரங்கள் சில வற்றை அவன் தெரிந்தான். 'நெல்லியடி மகாவித்தியாலத்திலதான் படிச்சவள்; சரியான கெட்டிக்காறி; ஓ.எல்.லிலயும் நல்ல றிசல்ற். என்னெண்டு பேந்து அது குழம்பிச்சுதெண்டு தெரியேல்லை. ஏ.எல். படிச்சுக்கொண்டிருக்கேக்க தேப்பன்காறன் ஒராளைக் கொண்டு வந்து கலியாணமெண்டு செய்து வைச்சிது. அப்பவும் நல்லாய் வாசிக்கிற பழக்கத்தோடதான் இருந்தாள். அவளுக்கு புத்தக மெடுத்துக் குடுத்தே நான் களைச்சுப் போனன். பிறகெப்பிடியோ அதுவும் இல்லாமப்போச்சு. இப்ப பேப்பரைக்கூட அவள் கையால தொட்டு நான் காணேல்லை. எதுவோ அவளைப் பாதிச்சிருக்கு. அவளே சொல்லாமல் இதெல்லாம் தெரியா வரா. பாவம்! அக்கா... அக்காவெண்டு என்னில சரியான வாரப்பாடு. நானெண்டா... புத்தகம் எடுத்துக் குடுத்ததைத் தவிர, அவளுக்கு வேறயென்னத்தைச் செய்தனெண்டு எனக்கெண்டாத் தெரியேல்லை.'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்த நாட்கள் முந்தியவைபோல் அவனுக்கு இருக்கவில்லை. சூழ்ந்த சமூகமும், உலகமும்கூட, முந்தியனபோல் இருக்கவில்லை. இத்தாலி ஸ்பெயின் இங்கிலாந்து தென்கொரியா இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் மரணங்கள் வெகுத்துக்கொண்டிருந்தன. இவ்வாறான நிலையில் இந்தியா இலங்கை ஆகிய நாடுகளில் மரண விகிதாசாரம் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததை வெகுஜனம் பெருவிடுப்பாய்ப் பேசிக்கொண்டிருந்தது. எங்கிருந்து அந்த கொடிய வைரஸ் பரவ ஆரம்பித்ததோ அந்த சீனாவில் அது கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்ததை பல நாடுகளும் ஆச்சரியத்தோடு கண்டுகொண்டிருந்தன. கனடா தன் அமெரிக்க எல்லையை மூடிவிட்டதை தெரிவித்த செய்தியூடகமொன்று பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் அமெரிக்காவில் எந்த நாட்டையும்விட கனடாவை பாதுகாப்பான நிலையில் வைத்திருப்பதான வல்லுநர்களின் மதிப்புரையைத் தெரிவித்தது.

அவனது நாடு என்பதால் மட்டுமன்றி, அவன் செல்ல வேண்டிய நாடு என்பதனாலும் அந்த அபிப்பிராயத்தை அவன் விரும்பினான். ஒருவரின் வீடுபோல அவரின் நாடு. சுயாதீனமும் சுதந்திரமும் சொந்த வீட்டில் எவ்வாறு திளைக்கின்றதோ, அது போலத்தான் நாட்டிலும். அதனாலேயே நல்லதோ கெட்டதோ, வளமானதோ வளமற்றதோ ஒருவரின் நாடு என்பது மிகமுக்கியமான தாக ஆகின்றது. நல்லவர்களுள்ளதே சிறந்த நாடு என்பது பாணனுடைய வாழ்வனுபவமாக இருக்கலாம். நிலைபெறுதல் என்ற அம்சத்திலிருந்து வீடும் நாடும் ஒருவற்கு முதன்மையாகின்றதை தன்னுணர்வுபூர்வமாய் அன்று கண்டான் அவன். எனில்... அது அவன் வீடாகவும், அது அவன் நாடாகவும் இல்லாதிருக்கையில் அவனது பேரவலம் புரியப்படக் கூடியது.

மருதி எழும்பி படுக்கப்போக தயாரானாள். அப்போது அவள் கண்களைக் காணநேரும் அச்சத்தில் அவன் வேறுபுறம் திரும்பிக் கொண்டான். அவள் எழுந்து சென்ற பின்னால் அந்த உணர்கை அவனை நடுங்கவைத்தது. அவன் வெளிமனிதருக்குமட்டுமன்றி, அந்த வீட்டிலுள்ள அவளுக்குமே ஒளிய நேர்ந்திருக்கிறது.

அப்போது முருகவேல் வந்து அவனருகேயிருந்த கதிரையில் பழையபடி அமர்ந்தான். ‘மேயில நடக்கிறதெண்டிருந்த பார்ளிமென்ற் எலக்‌ஷனையும் ஒத்திவைச்சாச்சு. நிலைமை இப்போதைக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிவருமெண்டமாதிரித் தெரியேல்லை' என்றான்.

கணேஷானந்தமூர்த்திக்கு நெஞ்சு பதைக்கத் துவங்கியது. மூச்சு முட்டுவதுபோல் விரைந்து வந்தது. இப்போதைக்கு நிலைமை சரிவராதென்றால் அவன் என்ன செய்யப்போகிறானென்று கேட்கிறானா நண்பன்? அந்தப் பெரிய சூட்கேஸையும் இழுத்துக்கொண்டு றோட்டில் இறங்கி எங்கே போவான் அவன்?

கணேஷானந்தமூர்த்தியின் அவதியை முருகவேல் கவனித்திருப்பான்போல. 'என்ன, எப்ப வெளிக்கிடப்போறாயெண்டு கேப்பனெண்டு பயந்திட்டியோ? இந்த விஷயத்தில நீயாய் வெளிக்கிட்டாச் சரி, நாங்களாய் ஒண்டும் சொல்லமாட்டம்.'

'அந்தப் பயம் எனக்கில்லை, முருகு. எண்டாலும்... நிலமை வர வர மோசமாகிக்கொண்டு வருகுதெல்லோ. ஊர்ச் சனத்தின்ர பார்வையும் கடுகடுப்பாயிட்டுது. அதத்தான் நினைச்சன்' என்று சொன்னான்.

'ஊர் சனத்தைப்பற்றி நீயேன் யோசிக்கிறாய்? நாட்டில நிக்கிற வெளிநாட்டுக்காறரை பொலிஸில பதியச் சொன்ன காலத்துக்கு முந்தியே நீ வந்திட்டாய். உன்னை ஏன் இஞ்ச வைச்சிருக்கிறமெண்டு கேட்ட ஆக்களுக்கு விளங்கிறமாதிரி நானும் பதில் சொல்லியிட்டன். அதால அதைப்பற்றி நீ ஒண்டும் யோசிக்கத் தேவையில்லை.'

'கனடா போறதுக்கு மட்டுமில்லை, கொழும்புக்குப் போறதே இப்ப கஷ்டமாய்ப் போச்சே, முருகு. எத்தினை பாஸ் எடுக்க வேண்டியிருக்கு? ஜி.எஸ்.ஸிட்ட பாஸ்... பொலிஸில பாஸ்... சுகாதாரக் கந்தோரில பாஸ்... கச்சேரியில பாஸ்... ஏலுமா ஒராளால?'

'அதுதான் நான் அண்டைக்கே சொன்னன், இந்தக் கரச்சலொண்டும் இப்பிடியே தொடர்ந்து இருந்திடாது... நிலமை கொஞ்சம் மாறுற மட்டும் ஒண்டையும் யோசிக்காம சந்தோஷமாய் இரு எண்டு. அதுக்கு... அதுதான் சரியான மருந்து. நானும் நல்லா விசாரிச்சிட்டன். மூடி திறக்காம கடையில வாங்கினபடியே வைச்சிருக்காம். விலைதான் கொஞ்சம் கூடச் சொல்லுறாங்கள். ஆயிரத்தெண்ணூறு ரூவா. நீ விரும்பினா எடுத்துத் தாறன். கொஞ்சம் எடுத்தியெண்டா யோசினையை விட்டிட்டு உஷாராய் இருப்பாய்.'

கணேஷானந்தமூர்த்திக்கும் தேவைபோலத்தான் இருந்தது. முருகவேலுக்குக்கூட, அவன் திரும்பத் திரும்பக் கேட்கிறமாதிரியில், உள்ளே புறியமிருக்கின்றதெனத் தெரிந்து மறுநாளைக்கு எடுக்கலாமென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகவேலின் முகம் பொலிந்தது.

மறுநாள் மாலையில் ஆறு மணிக்கு முன்னராகவே முருக வேல் ரகசியமாய் போத்தலைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டான். சிறிதுநேரத்தில் சந்திரா வந்தாள். இன்றைக்கு பார்டிதான் என்பது போல் சைகையில் நக்கலடித்தாள். போத்தல் எடுத்த விஷயம் அவளுக்கு எப்படித் தெரிந்ததென எண்ணியபடி அவனும் சிரித்தான்.

அன்று மருதி கொஞ்சம் தேறியிருந்தாள். காய்ச்சல் விட்டி ருந்ததுபோல. முகமும் கொஞ்சம் களைகட்டியிருந்தது. அது அவனிலும் பெரும் நிம்மதியைச் சேர்த்தது.

சாராயம் வாங்கிய விஷயம் அவளுக்கும் தெரிந்திருக்கலாம். முருகவேல் அவளையே சுற்றிச் சுற்றி வந்து அவளோடு பேசி சிரிக்கச் செய்துகொண்டிருந்தான். காரணம் விளங்கியது.

'மேலெல்லாம் புளுங்குது, குளிக்கப் போறனக்கா' என்று பதிலை எதிர்பாராமலே காற்றில் கூவிவிட்டு சந்திரா போய்விட்டாள்.

இருளத் துவங்க இமெயிலைத் திறந்து கனடாத் தூதுவராலய பதிலைக் கண்டு மேலும் அமைதிகொண்டது கணேஷானந்த மூர்த்தியின் நெஞ்சு. அவன் தங்கியிருக்கும் வீட்டு முகவரி, போன் நம்பர் எல்லாம் கேட்டதோடு, கனடாப் பிரஜைகளை நாட்டுக் கழைக்கும் திட்டத்தில் கல்ஃப் ஏர் லைன், சிறிலங்கா ஏர் லைன் மற்றும் ஏர் கனடா மூலம் ரொறன்ரோவுக்கு பயணங்கள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள செய்தியிருந்தது. அவன் விமானநிலையம்வரை பயணம் செய்ய விசேஷபாஸ் எதுவும் தேவையில்லையென்றும், இருபத்தி னான்கு மணி நேர செல்லுபடியுள்ள விமானச் சீட்டு, கனடாப் பாஸ் போர்ட் இரண்டையுமே ஊரடங்கு நேரத்தில் பயணிப்பதற்கான அனுமதியாக கொள்ளலாமென்றுமான குறிப்பும் அதிலிருந்தது. கணேஷானந்தமூர்த்திக்கு போன உயிரில் பாதி மீண்டதுபோல் ஆயிற்று. உடனடியாக முருகவேலை அழைத்து விபரம் கூறினான். அவனுக்கும் மகிழ்ச்சிதான்.

அதற்குமேல் போத்தில் உடைத்தாயிற்று. துக்கத்தை மறக்க எடுத்த சாராயம், சந்தோஷத்தைக் கொண்டாடுவதற்காய் கிளாஸ் களில் வார்பட்டது.

சந்திரா அப்போது வந்தாள். நேரே மருதி நின்றிருந்த குசினிப் பக்கம் போனாள். ஏதோ பேசியபடி இரவுணவு தயாரிக்க ஆரம்பித்த மருதிக்கு கையுதவி செய்தாள். ஹோலுக்குள் முருகவேல் இல்லா திருந்த ஒரு வேளை சந்திரா வந்தாள். அவனது முகப் பூரிப்பைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து, 'என்ன விசேஷம், மூஞ்சை இப்பிடிச் சிரிப்பாய்க் கிடக்கு? சாராயத்தைக் கண்ட புளுகமோ?' என்றாள்.

'சாராயத்தைக் கண்டதுக்கு இந்தளவு புளுகம் வராது. இது நான் கனடா போறதுக்கு வழி கிடைச்ச புளுகம்.'

'ஓ...! எப்ப வெளிக்கிடுறியள்?'

'கெதியில.'

'கெதியிலயெண்டா...?'

'ரிக்கற் புக் செய்ய கனடாவில ஏஜன்ரோட கதைச்சிருக்கிறன். ரிக்கற் புக்கிங்குக்கு ஏத்தமாதிரி வெளிக்கிடுவன். ரண்டு மூண்டு நாளிலயெண்டு வையன்.'

'அவ்வளவு கெதியிலயோ? போறதுக்குள்ள ஒருநாளைக்கு வீட்டை உங்களை சாப்பிடக் கூப்பிடவேணுமெண்டிருந்தன்...' என்றாள். முகம் மட்டுமில்லை, முழுக் கோலமே துவண்டு போனது போல் தோன்றினாள்.

'சொல்லு எப்பவெண்டு. கட்டாயம் வாறன்' என்றான் அவன்.

அதற்குள் முருகவேல் அவனுடன் எதுவோ பேசுவதற்கு வெளியே வர, சந்திரா அங்கிருந்து மாறினாள்.

சிறிதுநேரத்தில் தானும் சாப்பிட்டு பிள்ளைகளுக்கும் ஒரு கிண்ணத்தில் கறி எடுத்துக்கொண்டு சந்திரா புறப்பட்டாள். ஒத்தாப்பில் இன்னும் அவள் தாமதிப்பதாய்த் தோன்ற கணேஷானந்த மூர்த்தி சிகரெட்டுடன் வெளியே வந்தான். சந்திரா நின்றிருந்தாள்.

அவள் கதைக்கக் காத்திருப்பவள். அவன் கதைப்பதற்கு உற்சாகமேறி இருப்பவன். அவர்களுக்குள் நிறைய பேசவுமிருந்தது. 'போயிட்டியோவெண்டு நினைச்சன்' என்றான் சிரித்தபடி.

'என்னண்டு போவன், பேச்சு இன்னும் முடியேல்லையே' என்று அவள் முறுவலித்தாள்.

'துவங்கக்கூட இல்லையே' என்றான் அவன்.

அவனிடம் அவள் எதிர்பார்க்காத நெருக்கமது. அவள் விரும்பியது. அவளுக்கு முன்னதாய் அவனே பேச்சைத் தொடக்கினான். 'நானாய் கதைக்க இந்தளவு நாளில ஒருநாள்கூட ட்றை பண்ணேல்ல. ஏனோ இப்ப... வெளிக்கிடுற இந்தநேரத்தில... கதைக்கவேணும் போல கிடக்கு. உன்னைப் பாத்தோடனயே விருப்பம் வந்ததுதான். நீ தனியா இருக்கிறது தெரிஞ்சோடன... அந்த விருப்பம் இன்னும் வளந்திது. எண்டாலும் சொல்ல வாய் வரேல்லை. நானும் கனடா போற வழி தெரியாம முழுசிக்கொண்டு நிண்டதில, இதொண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பெரிசுபடுத்தேல்லை. இப்பவெண்டாலும் நான் சொல்ல வேணும். உனக்கு விளங்குதா, சந்திரா?'

'விளங்கிது. எனக்கும் இண்டைவரையில ஆரைப் பாத்தும் இந்தளவு புறியம் வரேல்லை. ஏன் வந்திது, எப்பிடி வந்திதெண்டு தெரியாமலே வந்திட்டுது. இதுக்கு முந்தி கண்ணாலகூட உங்கள நான் கண்டிருக்கேல்லை. ஆனா முதல்நாள் கண்டோடன முந்தியே கண்டமாதிரித்தான் மனசில பட்டுது. அண்டு ரா முழுக்கக் கிடந்து நானும் நல்லா இதைப்பற்றி யோசிச்சுப் பாத்தன். அப்பதான் எனக்கு ஒரு விஷயம் வெளிச்சிது. சொன்னா... விசரியெண்டு நெப்பியள்...'

'இல்லை, சொல்லு...'

'எனக்கு ரண்டு பொம்பிளப் பிள்ளையளிருக்கு...'

'ம்... சொல்லியிருக்கிறாய்.'

'அதில மூத்ததுக்கு எட்டு வயசாகுது... அது சரியா... அச்சடிச்சமாதிரி உங்களப்போல.'

அவன் அதிசயத்தோடு அவளைநோக்கித் திரும்பினானன்.

'என்னைப்போலயோ...?'

'உங்களைப்போலயேதான்.'

'நரைக்கத் துவங்கின தலைமயிரோட... தாடி மீசையோட?'

அவள்சிரித்தாள். 'உங்களப்போலயெண்டா... பாக்கிறது... பேசுறது... நடக்கிறது... இதுகளைச் சொல்லுறன்.;

'புதினமாயிருக்கு.'

'புதினம்தான். எப்பிடியெண்டு எனக்கு இண்டைவரையில விளங்கேல்லை. அதாலதானாக்கும் இப்பிடி கண்டோடன ஒரு ஆசை... ஒரு விருப்பம்... அது விருப்பம்கூட இல்லை; ஒரு வெறி. ஒரு நாளைக்காண்டியும் வாழ்ந்திட்டு சாகலாமெண்ட வெறி. நீங்கள், நான் சொல்லுறத நம்பேல்லை, இல்லையே?'

'எனக்கு என்ன சொல்லறதெண்டு தெரியேல்லை. ஆனா நீ விளங்காமச் சொல்லியிருந்தாலும், பொய் சொல்லேல்லையெண்டு தெரியுது. உனக்கு கடவுள் நம்பிக்கையிருக்கோ? கோயிலுக்கெல்லாம் போவியோ? போனா... அந்தக் கடவுளையே கேட்டுப் பார். அங்கயிருந்துதான் இந்தமாதிரி அதிசயத்துக்குப் பதில் வரவேணும்.'

'கோயிலுக்குப் போறனான்தான். நம்பிக்கையும் இருக்கு. ஆனா இண்டைவரைக்கும் எனக்கெண்டு ஒண்டை நான் அந்தப் பிள்ளையாரிட்ட கேட்டதில்லை. அப்ப ஏன் கோயிலுக்குப் போறா யெண்டு கேப்பியள். என்ர கஷ்ரங்களை... துன்பங்களை.... சொல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றதுக்குப் போறன். அவரும் நல்லாய்க் கதை கேக்கிற கடவுள்போல. நான் சொல்லுறதெல்லாம் சிரிச்சபடியிருந்து கேப்பார். அதுதான் எனக்கும் வேணும்.'

'உன்ர மனத்தில இருந்த விருப்பத்தை முதல்ல நீ காட்டேக்க, நான் பிழையாய் விளங்கியிடுவனெண்டு ஒண்டும் யோசிக் கேல்லையோ?'

'யோசிக்கேல்லை. உங்கட கண்ணுக்குள்ள அந்த விருப்பத்தை நான் பாத்தன். கனடா ஆள்தான, சகசமாய் எடுத்துக்கொள்ளுவியள் எண்ட நம்பிக்கையும் இருந்திது. அதோட... விட்ட குறை தொட்ட குறையெண்டு சொல்லுவினமே, அப்பிடியொரு தொடர்பு இருக் கெண்டும் நம்பினன். இல்லாட்டி முகச் சாங்கல் துவக்கம், பேசுறது சிரிக்கிறதெல்லாம் என்ர பிள்ளைக்கு உங்களமாதிரியே வாற தெப்பிடி? இன்னுமொண்டு, இதை நானாய்த் தெரியப்படுத்தாட்டி, விருப்பமிருந்தாலும், நீங்களாய் ஒண்டும் சொல்லமாட்டியளெண்டும் தெரிஞ்சிது. ஆக்களைப் பிடிச்சு சொல்லியனுப்பிற விஷயமே? நானாய்த்தான் துவக்கவேணும்.'

முருகவேலுக்கு கொஞ்சம் வெறி அதிகம்போல. மனைவி யோடு பினாத்திக்கொண்டு ஹோலுக்குள் இருந்தான். அவடகள் மேலும் பேசினார்கள். அன்றைக்கில்லாவிட்டால் இனி என்றைக்கு மில்லைப்போல் பேசினார்கள். சந்திரா சொல்லிக்கொண்டு போன போது மணி பதினொன்று.

அடுத்த நாள் காலையில் தன் பயண முகவருடன் கதைத்து முடிந்த இருக்க முருகவேல் படுக்கையிலிருந்து எழுந்து வந்தான். அவனது முதல் கேள்வியே, 'நேற்றைச் சாமான் எப்பிடி?' என்பதாகவே இருந்தது. இவனும் பதிலை நல்லதென்ற அர்த்தம் வரச் சிரித்துவைத்தான். 'வீட்டில ஒண்டும் சொல்லேல்லையோ?' என்ற இவனது கேள்விக்கு ஒரு எள்ளல் தொனியுடன் அவன் சொன்னான், 'உள்நாட்டுக்காறர்' குடிச்சாலும், வெளிநாட்டுக்காறர் குடிக்காட்டி லும் தான் இஞ்ச எதுவெண்டாலும் நினைக்குங்கள். அதுசரி, பிஃளைற் புக் ஆயிட்டுதோ?' என்றுவிட்டு மருதி அழைக்க கிணற்றடிப் பக்கம் சென்றான்.

இவன், 'நாளையிண்டைக்கு காலமை இஞ்சயிருந்து வெளிக்கிடுவன்' என்றான்.

'அப்ப... அதைச் சாட்டாய் இண்டைக்குச் சொல்லி யிடலாம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இருள் விழுவதற்குள் சந்திராவை அடிக்கடி நினைத்து விட்டான் கணேஷானந்தமூர்த்தி. 'கொண்டாட்டம்' தொடங்கிய போது அவளைக் காணவில்லையேயென்ற ஏக்கமே பிடித்து விட்டான். சந்திரா எட்டு மணி செய்தி நேரத்திற்கு வந்தாள். 'கடையில அறுநூறு ரூபா குடுக்கவேணும்' என்றபடி ஒரு சிறிய கோல்ட் லீஃப் பைக்கற்றை அவன் முன்னால் போட்டாள். முதல் நாளைய கலகலப்பு இல்லாவிட்டாலும், உற்சாகமாகவே இருந்தாள். அடிக்கடி யாரும் காணாமல் அவனைப் பார்த்து கண்களில் நட்சத்திரங்களாய், மின்னல்களாய்ப் பறத்திக்கொண்டிருந்தாள். தன் மனக் காயத்தில் படும் மெல்லிய இறகின் வருடல்களாய் உணர்ந்தான் கணேஷானந்தமூர்த்தி. தன் வாழ்க்கை, குடும்பம்பற்றி அதுவரை அவள் எதுவும் தெரிய முயற்சித்திருக்காவிட்டாலும், அன்றைக்கு அதைச் சொல்லிவிடும் எண்ணம் அவனுள் இருந்தது. அவள் அவனால் இழக்கப்பட முடியாதவளென்ற உறுதிப்பாடு அவளது மனத்துக்கு அவனளிக்கும் வெகுமதியாகவும் இருக்கும்.

அன்றைக்கு எதிர்வீட்டு சுந்தரத்தையும் முருகவேல் அழைத் திருந்தான். 'தெரியாமச் செய்யிறது தெரிய வந்திட்டா பரகசியமா யிடும். சாராயக் கடையெல்லாம் பூட்டியிருக்கிற நேரத்தில அது வேண்டாமெண்டு நெக்கிறன். கூப்பிட்டு கொஞ்சத்தை வாத்து விட்டிட்டா, ரகசியத்தை அவையே காப்பாத்தியிடுவின' என்று காரணத்தை விளக்கினான். கணேஷானந்தமூர்த்திக்கு அதில் ஆட்சேபணையில்லை.

இடையிலே இவன் சிகரெட் புகைக்க வெளியே வந்தான். அப்போது அண்ணனிடமிருந்து தொலைபேசி வந்தது.

உற்சாகமற்ற குரலில் அண்ணன் சொன்னான்:'நீ இப்ப அவசரப்பட்டு வந்தாலும் செல்ஃப் ஐசலேஷனுக்கு ஹோட்டல் ஒண்டுக்குத்தான் போகவேணும். அது வெளியிலயிருந்து வாற எல்லாருக்கும் இப்ப கட்டாயம். எல்லாம் பாக்க... நீ இன்னும் கொஞ்ச நாளைக்கு அங்கயே நிண்டு வரலாமெண்டுதான் எனக்குப் படுகிது. ஆனா இனி செய்ய ஒண்டுமில்லை. எதோ நடக்கிறபடி நடக்கட்டும். எயாப் போர்ட்டுக்கு நாங்கள் வரமாட்டம். எல்லாம் பாதுகாப்புக் காரணம்தான். நீ ஊபரொண்டிலதான் ஹோட்டலுக்குப் போக வேணும். பிறகொரு நாளைக்கு ஆறுதலாய் வந்து நான் பாப்பன். ஹோட்டல் நீ இஞ்ச வாற நாளையிலயிருந்து பதின்னாலு நாளுக்கு புக் பண்ணி வைக்கிறன். வந்தோடன போன் அடி. அட்ரஸ் தாறன்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் அவர் சஞ்சலம் தணிகிறமாதிரி விஷயங்களைச் சொன்னான்தான். அவருடைய குரலின் விரக்தி அப்போதும் தணிய வில்லை. வீட்டை நவீனப்படுத்தும் வேலைகள் இடையில் நிற்பது காரணமோவென அவனுக்கு ஒரு யோசனை வந்தது. அதை பின்னர் நிலைமை திருந்தியதும் தானே வந்து முடித்துத் தருவதாக அவன் உறுதிசொன்னான். 'நான் அதுக்காகச் சொல்லேல்லை. இஞ்ச சின்னப் பிள்ளையள் இருக்கெண்டு மோகனா பயப்பிடுகுது. சொந்தமாய் றியல் எஸ்ரேற் பிஸினஸ் செய்யிற உனக்கு வேலைக் கெடுபிடியு மில்லை, இந்தநேரத்தில போய் ஆர் வீடு விக்கவோ வாங்கவோ வரப்போகினம், கொஞ்ச நாள் கூடுதலாய் நிண்டு வரலாமேயெண்டு அவ நினைக்கிறாபோல. அவன் விரும்பியிட்டா, இனி செய்யிறதுக்கு ஒண்டுமில்லையெண்டு நான் சொல்லியிருக்கிறன். அப்பிடி இப்பிடி அண்ணி எதெண்டாலும் சொன்னா, முந்தினமாதிரி வாய் காட்டியிடாத. அண்ணியின்ர மனநிலையும் சரியில்லை. அவவின்ர சின்னம்மா வீட்டில நோய்த் தொற்று விழுந்திட்டுது. தூரத்துச் சொந்தத்தில ஆரோ செத்தும் போச்சினம். நாங்கள் செத்தவீட்டுக்கும் போகேல்லை. நிலமை உனக்கு விளங்குதுதா' என்றுவிட்டு அண்ணன் போனை வைத்துவிட்டான்.

தனக்கு மேல் விழுந்த அன்றைய காலகட்டத்தின் கடினங்கள் விமானம் ஏறிய பின்னால்கூட தீரப்போவதில்லையென்ற எண்ணம் அவனுள் விசனத்தைச் செய்தது. ஆயினும் மனத்துள் கிளர்ந்து கொண்டிருந்த விடுதலை உணர்வு அதை மூடிப்போக வைத்தது. அவன் அடுத்த சிகரெட்டை மூட்டினான்.

புகைத்துக்கொண்டு நிற்கையில் அருகே அரவமெழுந்தது. திரும்பினான். சந்திரா நின்றுகொண்டிருந்தாள். வெகு சமீபமாக. மூச்சு நெஞ்சில் சுட்டது. 'எப்ப பிளைற்?' என்று அவள் அண்ணாந்து கேட்டபோது அவள் குதப்பியிருந்த தாம்பூலத்தின் வாசம் அவனது முகத்தில் அடித்தது.

அண்ணனுடனான உரையாடலின் இறுக்கம் அவனுக்கு அக்கணமே மறந்தது. மறுநாள் இரவுக்கு அவள் வீட்டில் தான் சாப்பிட வருவதாய் அவன் சொன்னான். கேட்டு அவள் மனம் களிநடம் புரிந்தது. 'சாப்பாடு மட்டும் போதா'தென்று அவன் சொன்னபோது அவள் கிலுங்கினாள். அந்தப் பூரிப்போடேயே அவள் உள்ளே சென்றாள்.

மறுநாள் வழக்கமான நேரத்தில் விடிந்தது. அவனும் வழக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல எழுந்து முற்றத்துக்கு வந்தான். எல்லாம் இயல்பிலிருந்தும் ஏதோ சஞ்சலம் அவனறியாமல் உள்ளே புகுந்ததுபோல் அவன் முகம் யோசனையில் கனத்துப்போயிருந்தது. நேற்றைய போதையில் நடந்தவோ, கேட்டவோ ஒன்று அவனது அவதானத்தில் தவறியிருக் கிறதா? என்ன அது?

வெளியே வந்த முருகவேல் இன்னுமென்ன பிரச்னையிருக் கிறது பயணத்துக்கு என்ற அதிசயத்தோடு விடுத்து விடுத்து அவன் நிலைக்கு காரணத்தைக் கேட்டான். கணேஷானந்தமூர்த்தி ஒண்டு மில்லை... ஒண்டுமில்லையென்று தவிர வேறு சொல்லத் தெரிய வில்லை. அவனுள்ளுமே இருந்த அந்த வினாவுக்கு அவனே பதில் தேடிக்கொண்டிருக்கிறான். பதில்தான் கிடைக்காமலிருக் கிறது. அவனுக்குள் நூறு நூறாய் உள்ளிருந்து சம்பவங்கள் சுழி யிட்டுக் கிளம்பின. அவற்றுள் அவன் நினைவை அலைக்கழிக்கும் சம்பவம் எதுவாயிருக்கக்கூடும்? அண்ணன், மோகனா, சந்திராவென எல்லாரும் மாறிமாறி மனத்தில் வரிசை கட்டினர். அவர்களின் மனங் களை வெளிப்படுத்திய பேச்சுக்களும், நடத்தைகளும் ஒவ்வொன்றாய் ஞாபகமாயின.

அண்ணன் என்றும்போல் அண்ணியின் குரலில் பேசிய ஞாபகம் துக்கமாய்ப் பெருகியது. மோகனாவின் மனம் ஒரு கட லோரப் பாறையைப்போல் இறுகிக் கிடப்பது துலக்கமாய்த் தெரிந்தது. அந்தப் பாறையினை நெருங்கமுடியாது ரொறன்ரோவுக் குத் தொலைதூரம் சென்றுவிட்ட தன் சகோதரியின் ஏக்குற்ற முகம் கண்ணில் நிழலாடியது. சந்திராவின் முதல் நாளிரவின் நெருங்குகை கள் நினைவுக்கு வந்தன. அவளின் மெல்லிய உடம்புக்கு நெஞ்சின் நிமிர்வு போதுமானதாயில்லையென்ற குறையை நீக்கிய அவளின் இறுகி அடங்கிக் கிடந்த முலையுறுத்தலின் சுகம் ஞாபகம் வந்தது. கடைசியில் நினைவின் சகலதும் ஒதுக்கி சந்திரா மேனி தகதகக்க அவன் மனத்தில் விடையாக எழுந்தாள்.

அவளது நெருங்குகை, வெற்றிலைச் சதும்பலின் வாசத் தெறிப்பு, மூச்சுக் காற்றின் உஷ்ணமெல்லாம் அவனில் இனிமையே செய்திருந்தன. ஆனால் அப்போது...? அன்றைய இரவு விருந்துக்குச் செல்லவிருப்பவனின் விருப்பத்தில் அது இடராய்க் கவிழ்கிறது.

மதியத்துக்கு சற்று முன்னராக அண்ணன் முருகானந்தமூர்த்தி அவனுக்கு மறுபடி போன் எடுத்தான். இரவில் வாகனப் பயணம் வேண்டாமென்று நண்பகலில் புறப்பட்டு முன்னிரவில் விமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தை அடையும்படி சொன்னான். கொழும்பிலிருந்து புறப் பட்ட இரவுப் பயணகாரர் சிலர் இடைவழியில் தாக்கப்பட்ட இரகசிய சம்பவங்களைக் கூறினான். இவன் அநாயாசமாக அதெல்லாம் பிரச்னையில்லை, தான் பார்த்துக்கொள்வதாகச் சொன்னான். முகக் கவசம், கையுறை தவறவேண்டாமென்று அவன் சொல்ல, அண்ணனின் கரிசனையில் ஏற்கனவே அவன்மேலிருந்த கடுப்பு கொஞ்சம் இவனுக்கு இளகியது. இவனும் தவறமாட்டேனென அவன் மனம் சாந்திசெய்தான்.

எல்லாம் கண்டிருந்த முருகவேல், 'இப்பதான் உன்னை பழைய ஆளாய் என்னால பாக்கமுடியுது', என்றான் முகம் மலர்ந்து. இவன் முனைந்தது சிரிப்பாயில்லையென்று தோன்றிப்போலும், எண்டாலும் எதோவொண்டு உன்னை கொஞ்சம் கலவரப்படுத்திற மாதிரித்தான் கிடக்கு' என்றான்.

'இல்லாமலெப்பிடி இருக்கும்? எயாப் போர்ட் போய்ச் சேர்ந்தாப்பிறகுதான் முழு நிம்மதி வரும். இடையில எத்தினையோ றோட் ப்ளொக்குகள் இருக்காம். எல்லாம் ஆமியின்ர கொன்றோல்ல இப்ப' என்றான் இவன்.

'கனடாப் பாஸ்போர்ட் வைச்சிருக்கிறாய், உனக்கென்ன பிரச்சினை வரேலும்? ஒண்டையும் யோசியாத.'

நேர நகர்ச்சி அன்றைக்கு இயல்பில்போல் இல்லையாக அவனுக்குத் தோன்றியது. விடிந்து அவ்வளவு நேரமாகியும் அப்போது தான் பன்னிரண்டு மணியாகியிருந்தது.

மருதி குளித்து வெளிக்கிட்டுக்கொண்டு அந்த கட்டங்கடு மத்தியானத்திலும் குடையை எடுத்துக்கொண்டு அம்மன் கோயிலுக் குப் போய்க்கொண்டிருந்தாள். முதல்நாள் நடந்து திரிந்ததைவிட அவளுடைய நடை திடமாகவிருக்கிறது. கணேஷானந்தமூர்த்தி பார்த்துக்கொண்டே இருக்கிறான். மருதி தெருமுனையில் திரும்பி மறைய, அந்த இடத்தில் நிலைபெற்றெழுகிறது சந்திராவின் உருவம். அவ்வளவு தூரத்தின் அந்த மாயக் காட்சியிலும் அவளின் மேனியி லிருந்து முதல்நாள் பொங்கியெழுந்த வெப்ப அலைகளை உணர் கிறான் அவன். சந்திராவின் மேனியிலிருந்து வீசிய அந்த உஷ்ணம் அவள் அதுவரை அடக்கி வைத்திருந்த தேகத்தின் தவிப்பாகவும் இருக்கலாமென வலிந்து நம்ப முயல்கிறான். கடந்த மூன்று நாட் களாக மருதியின் உடம்பில் கிடந்த காய்ச்சல் கதிர் வீச்சை, சந்திரா வினது மேனியில் அடித்த வெப்ப அலையுடன் ஒப்பீடு செய்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நாள் நடந்தவை பாதி அவனது நினைவில் இல்லை. ஆனாலும் அக்காலத்தில் தேவைப்பட்ட அவதானங்கள் தன்னிடத்தில் இருந்ததாயே அவனுக்குத் தோன்றுகிறது. ஆனால் அன்றைய இரவையும் அவன் துணிந்துவிட முடியுமா? அது தன்னை அபாயத்துக்கு தெரிந்தே வெளிப்படுத்தும் செய்கையாகிவிடவும் கூடும். அந்த எச்சரிக்கையைத்தானே காலம் எவருக்கும் அறிவுறுத்திக் கொண்டு இருக்கிறது அப்போது?

ஆம்; அதை அவனால் காதலுக்காகக்கூட, மீறிவிட முடியாது.

விளையப்போகும் ஏமாற்றம் அவளைச் சிதைத்துவிடும். ஒருநாள் வாழ்ந்துவிட்டு சாங்காலம்வரை அந்த நினைப்பிலேயே வாழ திடம்கொண்டிருந்தவளை எதுவெல்லாமோகூட அது செய்ய வைத்துவிடும்.

அவனெண்ணங்கள் வேறுமாதிரி இருந்தன. இரண்டு பிள்ளைகளுடன் தன் உறவை வெட்டிக்கொண்ட தன் முந்திய மனைவியின் மறுதிருமணத் தழும்பு இன்னும் ஊறல்புண்ணாய் அவனுள் இருந்து கொண்டிருக்கிறது. அதை ஒரு பெருங்கற்பனையுடன் தன்னை நெருங்கியவளைக்கொண்டு ஈடுசெய்ய அவனுள் இருந்தது தீர்மானம். இனி...? திரும்ப வருவதாய்த் திண்ணமிருந்தாலும் ஒரு ஏமாற்றத்தில் அவளைவிட்டுப் போவது எவ்வாறான உடைப்பை அவளில் செய்யுமோ?

அது அவன் வாழ்வின் முக்கியமானவொரு தருணம். வாழ்வு-மரணம் என்ற இரண்டிலொன்றை அவன் தேர்வு செய்யவேண்டியிருக்கிறான்.

அவன் யோசித்தான்.

சிறிதுநேரத்தில் எதையோ திண்ணமாகியவன், 'முருகு...!' என்று கொஞ்சம் சத்தமாகவே கூப்பிட்டான்.

'என்ன, மூர்த்தி?'

'போத்திலை எடு. இப்பவே துவங்குவம்.'

ஆறு மணியளவில் புறாசல் முடிந்து சாப்பிட்டதும் ஹோலுக்குள் பாயைப் போட்டுக்கொண்டு படுத்துவிட்டான் கணேஷானந்த மூர்த்தி.

ஏழு மணியானது; ஏழரை மணியானது; எட்டு மணிச் செய்தி துவங்கு முன்னம் சந்திரா வந்தாள். சேலை அணிந்திருந்தாள். கோயிலுக்குப் போய் வருவதாய் மருதிக்குச் சொன்னாள். கணேஷானந்த மூர்த்தி ஒரு சுவரோரமும் முருகவேல் மறுபக்கத்திலு மாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

படுத்திருப்பதைப் பார்த்து திடுக்கிட்டவள், 'பின்னேரம் தண்ணி போட்டவையோ, அக்கா?' என்று மருதியைக் கேட்டாள்.

'நாளைக்கு காலமை கொழும்பு பயணமெல்லே, கொண்டாடிச் சினம் போல' என்றாள் மருதி.

எல்லாம் கேட்டபடி கண்களை மூடிப் படுத்திருந்தான் அவன். சரிந்து கிடந்த ஸ்திதியில் அவளறியாமல் அவ்வப்போது அவளைக் காணவும் அவனால் இயன்றிருந்தது.

'ராவைக்கு வீட்டை சாப்பாட்டுக்கு வாறமெண்டவர்' என்றாள் சந்திரா. குரல் தழுதழுத்திருந்தது.

அவனுக்கு நெஞ்சை முட்டிக்கொண்டு வந்தது.

'மறந்திருக்கமாட்டார், சந்திரா, தண்ணி கூடிப்போச்சுப் போல. என்ன செய்யிறது? சாப்பாடுதான, இன்னொரு நாளைக்கு வராமலே போகும், அப்ப குடு.'

மருதியின் பேச்சு எவ்வளவுக்கு அவளை ஆறுதல் படுத்தி யிருக்க முடியும்? ஜன்னல் கம்பியினை ஒரு கையால் பற்றியபடி தஞ்சக் கேடடைந்தவள்போல் துவண்டு நின்றிருந்தாள் சந்திரா. இடியப்பம், பிட்டு, தோசை, தேங்காய்ச் சம்பல், கோழியிறைச்சி, மீன் குழம்பு, முட்டைப் பொரியலென தன் வசதிக்கு மீறி அவள் செய்துவைத்த உணவு அவ்வளவற்றையும் கொண்டுபோய்க் கொட்டவேண்டி அவளுக்கு நிச்சயமாய் நேர்ந்திடாது. ஆனால் அவளது எதிர்பார்ப்பு? கனவின் திசுமங்களால் அவள் கட்டியெழுப்பிய கோட்டை...? அந்த மெல்லிய உடம்புக்குள் கிடந்த இதயத்தின் மீதுயர்த் துடிப்பு இனி எப்படி அடங்கும்? இன்னொரு முறை வரும் என்கிறாள் மருதியக்கா. அது இன்னொரு வாழ்விலல்லவா வரமுடியும்? அந்த வாழ்வு அன்றுடன் அவளுக்கு முடிவெய்துகிறதே.

அவன் ஒருபோது பார்க்கையில் இன்னும் அந்த நிலைப் பிலேயே அவள் நின்றிருந்தாள். கண்களிலிருந்து நீர் பெருகாமல் இருந்திருக்க முடியாது. நொருங்கிக் கொட்டுண்டு போகாவிட்டா லும் சிதறித்தான் போயிருந்தாள்.

பின் என்ன நினைத்தாளோ, ஒரு விசையில்போல், 'நான் போறனக்கா' என்றுவிட்டு கதவை ஓங்கிச் சாத்தியபடி படியிறங் கினாள். 'எழும்பினாச் சொல்லுங்கோக்கா நான் வந்திட்டுப் போன னெண்டு.' படலையடியில் அவள் குரல் கேட்டது.

கதவடித்த சடார் சத்தத்தில் அப்போதுதான் எழும்புவது போல் அவன் எழும்பி நிமிர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

'சந்திரா உங்கள சாப்பாட்டுக்கு கூப்பிட வந்திருந்தாள். பாவம்... உடம்பைப்போலதான் நொய்ஞ்ச மனம் அவளுக்கு. தாங்கேலாமத்தான் இருக்கும். கோயிலுக்குப் போட்டு வந்தாளாம். என்னத்தை வேணுமெண்டு கும்பிட்டாளோ?' என்றாள் மருதி சற்றே எரிச்சலுடன்.

'இப்பிடி நடக்குமெண்டு நினைக்கேல்லை' என்று அவன் மெய்போல தன் பொய்யைச் சொல்லத் துவங்கினான்.

மருதி நம்பியிருப்பாள். 'சரி, விடுங்கோ, இதென்ன வேணு மெண்டு செய்ததே, நாளைக்குச் சொன்னா அவள் விளங்கப்போறாள்.'

அவளுக்கு விளங்குமென்கிறாள் மருதி. அவளுக்கு விளங்குமா? சாப்பாட்டு விஷயத்தை வைத்து அன்றைய நிகழ்வை மட்டுக்கட்டுபவளுக்கு, அவள் விளங்குவாள்போல் தெரியலாம்; நாளைக்கு எல்லாம் சகஜமாகிவிடுமெனத் தோன்றலாம். அதுவரை யில் எழுந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த முருகவேலும் அவளுக்கு விளங்குமென்று மருதி சொன்னதை ஆமோதிப்பதுபோல் தலையை ஆட்டுகிறான். ஆனால்... அவனுக்கு...?

எல்லா ஒழுகலாற்று மரபுகளையும் உடைத்தெறிந்து கொண்டு அவள் தன்னை நெருங்கியபோதே அவனுக்குத் தெரிந் திருந்தது, அவள் சாதாரணத்தியல்லளென்று. அவளுக்கு ஒரு அற மிருந்தது; ஆனால் மற்றவர்கள் கொண்ட அறமல்ல அது. பிறப்புக் கும் இறப்புக்குமிடையிலான காலத்தின் நகர்வில் உயிர்த்தலென்பது வாழ்தலல்லவென்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. அவனை விடவுமே அவள் அதை நன்றாக உணர்ந்திருந்தாள். அது அவளை உடைக்கும். சிதறவைக்கும். மற்றவர்களுக்கு நாளை யுண்டு. அவர்கள் வாழ்வார்கள். அக்கொடூர காலம் எந்தளவு அழிவோடும் ஒரு முடிவுக்கு மீளும். ஆனால் சந்திராவுக்கு? ஒப்பந்த உறவுகள் பொறுத்து அவ்வா றான தருணங்களில் மீட்சிக்கு வாய்ப்பு வருவ துண்டு. ஆனால் மனங் களின்மேல் கட்டப்படும் உறவுகளுக்கு அது அரிதாகவே நிகழ்கிறது.

எல்லாவற்றிற்குமாய் காலப் பெரும்பரப்பில் நிஷ்டூரம் ஆடிக் கொண்டிருக்கும் அவ்வூழியின்மேல் ஒரு பழியைப் போடலாம் தான். ஆனால் மனங்களின் சாட்சியாய் உருவாகும் உறவுகள் சிதைவதில் அது எந்தப் பயனையும் செய்வதில்லை. அந்தக் குறிப்பிட்ட காலத்தில் அது நடந்ததென்பது மட்டுமே அடையாளமாய் எஞ்சுகிறது.

பதிவுகள்.கொம், நவ.2020

133428C
281558



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்து இலக்கிய உலகிற்கு கிடைத்த பெரும் பொக்கிஷம் தேவகாந்தன். சிந்தனையில் தெளிவும், பரபரப்பற்ற செயற்திறனும், ஆர்ப்பாட்டமில்லாத அமைதியும், பரந்துபட்ட இலக்கிய - உளவியல் அறிவும் தேவகாந்தனின் படைப்புகளின் வெற்றிக்கு காரணமெனலாம். நாவல், சிறுகதை, கட்டுரை, பத்தி எழுத்து, விமர்சனம் என பல்வகைமை சார் இலக்கியத்துறைகளிலும் தேவகாந்தன் தன் கால்களை ஆழப்பதித்துள்ளார். படைப்புகளில் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லையும் கலைத்துவமாகப் பயன்படுத்துவதில் தேவகாந்தனின் இடம் தனித்துவமானது. இத்தொகுப்பில் காணப்படும் கதைகள் யாவும் அண்மைக் காலத்தில் எழுதப்பட்டவை; சமகாலத்தை பிரதிபலிக்கும் பல கதைகள் இந்த தொகுதியை அலங்கரித்துள்ளன. தேவகாந்தனின் எழுத்துக்கள் ஈழத்து இலக்கிய உலகை உலகறியச் செய்யும் எழுத்துக்கள் என்றால் அது மிகையான கூற்றன்று.

– க.பரணீதரன்

ISBN 978-955-0958-61-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org